www.Padasalai.Net www.TrbTnpsc.com

SURA'S SUPER GUIDE

2019-20 பதிப்பு

சுராவின்

# சமூக அறிவியல்

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூல் 2019ன்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

## முழு ஆண்டு நோட்ஸ்



100% வெற்றி

- பாட நூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் முழுமையான, எளிமையான விடைகள்.
- கூடுதலான வினா விடைகள்.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அலகுத் தேர்வு வினாத்தாள் விடைகளுடன்.

9 ஆம் வகுப்பு

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

சுராவின்

# சமூக அறிவியல்

## 9ஆம் வகுப்பு

2019-20 ஆண்டுக்கான பாடத்திட்டத்தின்படி
தயாரிக்கப்பட்டது

Padasalai
www.surabooks.com

**சிறப்பம்சங்கள்**

- பாட நூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் முழுமையான, எளிமையான விடைகள்.
- கூடுதலான வினா விடைகள்.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அலகுத் தேர்வு வினாத்தாள் விடைகளுடன்.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

***2019-20***

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

ISBN : 978-81-8449-919-3
குறியீட்டு எண். **FY-9-SS-TM**

**எழுதி வழங்கியவர்**

**திரு. ம. பெருமாள், M.A., M.Ed.** கோவை
**திரு. செ. இந்திரன், M.A, B,Ed.** தர்மபுரி
**திருமதி. வ. வெண்மதி, M.A, M.Ed.** சென்னை

**திருத்தியவர்**

**திரு. மா. மகாலிங்கன், M.A., B.Ed.** சென்னை

**மதிப்பாளர்**

**முனைவர். த. வெங்கடேசன் M.A., M.Phil., Ph.D.**
துறைத்தலைவர், தர்மபுரி

Padasalai
www.surabooks.com

**Also available for Std - X**

Guides :
- Sura's Tamil
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பதிப்பகம்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040.
**Phones** : 044-26161088, 26161099.
**Mobile** : 96001 75757 / 81242 01000 / 81243 01000
**Whatsapp** : 81242 01000
**e-mail** : orders@surabooks.com
**website** : www.surabooks.com

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 9600175757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
ஆன்லைன் வலைதளம் : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

9ஆம் வகுப்பிற்கான **சூராவின் சமூக அறிவியல் வழிகாட்டியை** வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

2019-20 ஆண்டுக்கான பாடத்திட்டத்தின்படி, பாடங்களை தெளிவாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்வதற்கு தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி நமது வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு கற்பிக்க உறுதுணையாகவும், மாணவர்களுக்கு கற்க உறுதுணையாகவும் இந்த வழிகாட்டி இருக்கும் வகையில் வினாக்களுக்கான விடைகள் விளக்கமாகவும், எளிமையாகவும் தரப்பட்டுள்ளன.

பாடப்புத்தகத்தின் அனைத்து பாடங்களையும் திறமையுடன் கற்றுக் கொள்வதற்கு உதவும் வகையில் விரிவான கூடுதல் வினா விடைகள் அனைத்து பிரிவின் கீழும் தரப்பட்டுள்ளன.

நமது வழிகாட்டி பல சிறப்பம்சங்களை கொண்டிருப்பினும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதின் பாங்கினை குறைத்து மதிப்பிட முடியாது. அது நிறைந்த மதிப்புடையது.

மாணவச் செல்வங்களின் தேவைகளை நிறைவு செய்யவும், ஆசிரியப் பெருந்தகையினரின் கற்பிக்கும் பாங்கினை மேம்படுத்தவும் இந்த வழிகாட்டி பெரிதும் உதவும் என்று உறுதியுடன் நம்புகிறோம்.

மாணவமணிகள் தேர்வில் முழு வெற்றி பெற இறையருளை வேண்டுகிறோம்.

- **சுபாஷ் ராஜ்,** B.E., M.S.
பதிப்பகத்தார்
சுரா பதிப்பகம்

***வாழ்த்துக்கள் !!!***

**For More Information - Contact**

| | | |
|---|---|---|
| Doubts in Our Guides | : | enquiry@surabooks.com |
| For Order | : | orders@surabooks.com |
| Contact | : | 96001 75757 / 8124301000 |
| Whatsapp | : | 8124201000 / 9840926027 |
| **Online Site** | : | **www.surabooks.com** |

For Free Study Materials Visit **http://tnkalvi.in**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-26162173, 26161099.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# பொருளடக்கம்

## வரலாறு

1. மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும் : வரலாற்றுக்கு முந்தைய காலம் ........ 1 - 16
2. பண்டைய நாகரிகங்கள் ........ 17 - 28
3. தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும் ........ 29 - 40
4. அறிவு மலர்ச்சியும், சமூக-அரசியல் மாற்றங்களும் ........ 41 - 50
5. செவ்வியல் உலகம் ........ 51 - 60
6. இடைக்காலம் ........ 61 - 70
7. இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் ........ 71 - 80
8. நவீன யுகத்தின் தொடக்கம் ........ 81 - 90
9. புரட்சிகளின் காலம் ........ 91 - 104
10. தொழிற்புரட்சி ........ 105 - 116
11. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம் ........ 117 - 128

## புவியியல்

1. நிலக்கோளம் – I புவி அகச்செயல்பாடுகள் ........ 129 - 142
2. நிலக்கோளம் – II புவி புறச்செயல்பாடுகள் ........ 143 - 156
3. வளிமண்டலம் ........ 157 - 174
4. நீர்க்கோளம் ........ 175 - 186
5. உயிர்க்கோளம் ........ 187 - 196
6. மனிதனும் சுற்றுச் சூழலும் ........ 197 - 208
7. நிலவரைபடத் திறன்கள் ........ 209 - 220
8. பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல் ........ 221 - 226

## குடிமையியல்

1. அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி ........ 227 - 236
2. தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் ........ 237 - 244
3. மனித உரிமைகள் ........ 245 - 254
4. அரசாங்களின் வகைகள் ........ 255 - 260
5. உள்ளாட்சி அமைப்புகள் ........ 261 - 268
6. சாலை பாதுகாப்பு ........ 269 - 272

## பொருளியல்

1. மேம்பாட்டை அறிவோம் : தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை ........ 273 - 282
2. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு ........ 283 - 290
3. பணம் மற்றும் கடன் ........ 291 - 298
4. தமிழகத்தில் வேளாண்மை ........ 299 - 304
5. இடம்பெயர்தல் ........ 305 - 312

முதல் பருவத் தொகுத்தறித் தேர்வு 2018-19 ........ 313 - 322
இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு 2018-19 ........ 323 - 334
மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு 2018-19 ........ 335 - 346



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores






orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# வரலாறு

# இயல் 1

# மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது**

அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) கிரேட் ஏப்ஸ்

[விடை: (ஆ) சிம்பன்ஸி]

**2. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்**

அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம் இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்

[விடை: (இ) புதிய கற்காலம்]

**3. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ................ ஆவர்.**

அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்

இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்

[விடை: (இ) ஹோமோ சேபியன்ஸ்]

**4. எகிப்து, இஸ்ரேல்-பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி .............. எனப்படுகிறது.**

அ) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு ஆ) பிறைநிலப் பகுதி

இ) ஸோலோ ஆறு ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு

[விடை: (ஆ) பிறைநிலப் பகுதி]

**5. சர் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியளாலர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் ................. கருவிகளை முதன்முறையாக கண்டுபிடித்தார்.**

அ) கற்காலம் ஆ) பழங்கற்காலம்

இ) இடைக் கற்காலம் ஈ) புதிய கற்காலம்

[விடை: (ஆ) பழங்கற்காலம்]

**6. i) எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.**
**ii) வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.**
**iii) வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.**
**iv) வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (ii) மற்றும் (iii) சரி

[விடை: (இ) (i) மற்றும் (iv) சரி]



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

7. i) **செல்ட் எனப்பட்ட தீட்டப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.**
ii) **புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.**
iii) **புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் வெண்கலக் காலம் எனப்படுகிறது.**
iv) **விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iv) சரி **[விடை: (அ) (i) சரி]**

8. **கூற்று : தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக் கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**
**காரணம் : நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது**
அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. **[விடை: (ஈ) கூற்றும் காரணமும் தவறானவை]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கோடரிகளும் பிளக்கும் கருவிகளும் ..................... பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும். **[விடை: கீழப் பழங்கற்காலப்]**

2. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும் ....................... தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன. **[விடை: கற்கருவி]**

3. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ................... எனப்படும். **[விடை: இடைக் கற்காலம்]**

அலகு 1

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க:

1. அ] **மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள 'தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்' என்ற கருத்து உதவுகிறது.**
ஆ] **'உயிர்களின் தோற்றம் குறித்து' என்ற நூலை ஹெர்பர்ட் ஸ்பென்சர் பதிப்பித்தார்.**
இ] **உயிரியல் பரிணாம வளர்ச்சி குறித்த டார்வின் கோட்பாடு இயற்கைத்தேர்வு என்ற வழிமுறையுடன் தொடர்பு உடையது.**
ஈ] **கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது நிலவியல் ஆகும்.**

விடை: அ) சரி
ஆ) தவறு. உயிர்களின் தோற்றம் குறித்த நூலை **சார்லஸ் டார்வின்** பதிப்பித்தார்.
இ) சரி.
ஈ) தவறு. – கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது **கற்கருவி தொழில் நுட்பம்** ஆகும்.

2. அ] **குரங்கினங்களில் உராங் உட்டான் மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.**
ஆ] **மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம். அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.**
இ] **இரு பக்கமும் கூர்மையாகச் செதுக்கப்பட்ட சிறு சில்லு சீவல் எனப்படுகிறது.**
ஈ] **பெரிய கற்களைச் செதுக்கி தயாரிக்கப்படும் கைக்கோடாரிகள் அச்சூலியன் கருவிகள் எனப்படும்.**

விடை: அ) தவறு. குரங்கினங்களில் **சிம்பன்சி** மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.
ஆ) சரி.
இ) தவறு. இரு பக்கமும் கூர்மையாகச் செதுக்கப்பட்ட சிறு சில்லு **இருமுகக் கருவி** எனப்படுகிறது.
ஈ) சரி

## IV. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| 1. | பழங்கால மானுடவியல் | - | அ) தேரி |
| 2. | கோடரிக்கருவிகள் | - | ஆ) வீனஸ் |
| 3. | கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | - | இ) அச்சூலியன் |
| 4. | செம்மணல் மேடுகள் | - | ஈ) நுண்கற்காலம் |
| 5. | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | - | உ) மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு |

[1 - உ, 2 - இ, 3 - ஆ, 4 - அ, 5 - ஈ]

## V. சுருக்கமான விடை தருக:

**1. ஊகக் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?**

விடை: (i) இன்றைய நவீன வாழ்விற்கான அடித்தளம் தொல்பழங்காலத்தில் இடப்பட்டு, நமது முன்னோர்களின் அறிவாற்றலால் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டதாகும்.

(ii) தொல் பழங்கால மக்கள் உருவாக்கிய செய்பொருட்கள், மொழிகள் ஆகியவற்றின் வழியாக அவர்கள் மிகவும் அறிவார்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

(iii) எண்ணங்கள், அனுபவங்கள் மற்றும் புலனாற்றல்களால் அறிவையும், புரிதலையும் பெறும் மனதின் செயல்பாடு அறிவாற்றல் என்று சொல்லப்படுகிறது.

(iv) இது மனிதர்களின் சிந்தனை வளர்ச்சியுடன் தொடர்புடையது.

**2. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.**

விடை: (i) மக்கள் வேளாண்மையும் மேற்கொண்டார்கள், ஆடு, மாடுகளையும் வளர்த்தார்கள்.

(ii) அவர்கள் விலங்குகளைப் பழக்கி, அவற்றுக்கு உணவு கொடுத்து வளர்த்து, அவற்றையும் விவசாயத்தில் ஈடுபடுத்தினார்கள்.

(iii) விலங்குகளை வளர்ப்பது மனிதர்களின் வாழ்வில் முக்கியமான பகுதி ஆனது. எருதுகள் உழுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

(iv) எருதுகள் விவசாய வேலைகளை எளிதாக்கின. வேட்டையாடி வாழ்க்கையை நடத்தியதை விட, இந்த வாழ்க்கை எளிதாக இருந்தது.

(v) விவசாயம் அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியேறும்படி செய்தது.

**3. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.**

விடை: பெருங்கற்கால ஈமச் சின்னங்கள்:

(i) டோல்மென் எனப்படும் கற்திட்டை,

(ii) சிஸ்ட் எனப்படும் கல்லறைகள்,

(iii) மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக்கல்,

(iv) தாழி,

(v) பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள்,

(vi) சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**4. கருவி செய்வதில் கீழ்ப் பழைய கற்கால மக்களிடமிருந்த தொழில்நுட்பத்தைத் திறனாய்வு செய்க.**

விடை: (i) பழைய கற்கால மக்கள் பெரிய கற்களைச் செதில்களாகச் சீவி கைக்கோடாரி உள்ளிட்ட பல வகைக் கருவிகளை வடிவமைத்தார்கள்.

(ii) இவர்கள் தங்கள் தேவைகளுக்காக கைக்கோடாரி, வெட்டுக் கத்தி உள்ளிட்ட பல்வேறு கருவிகளை செய்தார்கள்.

(iii) இந்தக் கருவிகள் (biface) இருமுகக் கருவிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவை சமபக்க உருவ அமைப்பைப் (Symmetry) பெற்றுள்ளன.

(iv) கைக்கோடாரிகள் அச்சூலியன் கருவிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

## VI. தலைப்பு வினாக்கள்:
**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

1. **ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்**
 **அ] ஹோமினிட் என்போர் யாவர்?**
 **ஆ] ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?**
 **இ] நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?**
 **ஈ] இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறு.**

விடை: அ) நவீன மற்றும் அழிந்து போன அனைத்து பெருங்குரங்கு இனங்களும் ஹோமினிட் எனப்படும்.
 ஆ) ஹோமோ ஹெபிலிஸ்.
 இ) ஹோமோ சேப்பியன்ஸ்
 ஈ) ஹோமோ ஏரக்டஸ்

2. **மனித முன்னோர்களின் தொடக்க காலக் கற்கருவிகளின் தொகுப்பு**
 **அ] அச்சூலியக் கருவிகள் கர்நாடகத்திலும் மத்தியப்பிரதேசத்திலும் எங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன?**
 **ஆ] பியூரின் என்றால் என்ன?**
 **இ] இருமுகக் கருவிகள் என்றால் என்ன?**
 **ஈ] மனித இன முன்னோடிகள் பயன்படுத்திய கல்லால் ஆன ஆயுதங்கள் சிலவற்றைக் கூறுக.**

விடை: அ) அச்சூலியக் கருவிகள் கர்நாடகாவின் இசாம்பூர், மத்தியப்பிரேதேசத்தின் பிம்பெத்தாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
 ஆ) கூரிய வெட்டுமுனை உள்ள கல்லாலான உளி பியூரின் எனப்படும்.
 இ) இருபுறமும் செதுக்கப்பட்டதால் இக்கருவிகளுக்கு இருமுகக் கருவிகள் எனப்பெயர் இடப்பட்டது.
 ஈ) ஓல்டோவான் மற்றும் 'பிளேக்ஸ்'.



## VII. விரிவான விடையளிக்கவும்.
1. **விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் - உறுதிப்படுத்தவும்.**

விடை: **அ) விவசாயம் (அல்லது) வேளாண்மை:**
 (i) இரும்புக் கால மக்கள் வேளாண்மையும் மேற்கொண்டார்கள்.
 (ii) ஆடு மாடுகளையும் வளர்த்தார்கள்.
 (iii) தினையும் நெல்லும் பயிரிடப்பட்டன. இந்தக் காலக்கட்டத்தில் தான் பாசன நிருவாகம் மேம்பட்டது.
 (iv) ஏனெனில் பல பெருங்கற்கால இடங்கள், நதிகள், குளங்களுக்கு அருகே இருந்தன ஆற்றுப்படுகைகளில் பாசன தொழில்நுட்பம் வளர்ந்தது.

**ஆ) மட்பாண்டங்கள்:**
 (i) தொல்லியல் ஆய்வு நடந்த இடங்களில் கிடைக்கும் முக்கியமான சான்று மட்பாண்டங்களாகும்.
 (ii) இரும்புக்கால, சங்ககால மக்கள் கருப்பு மற்றும் சிவப்பு நிறங்களை மட்பாண்டங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.
 (iii) மட்பாண்டங்கள் சமையல், பொருள்களைச் சேமிப்பதற்கு, சாப்பிடுவதற்கு எனப் பயன்படுத்தப்பட்டன.
 (iv) கறுப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் உள்ளே கறுப்பாகவும் வெளியே சிவப்பாகவும் காணப்படும். வெளிப்புறம் பளபளப்பாக இருக்கும்.

**இ) உலோகக் கருவிகள்:**
 (i) பெருங்கற்காலக் கல்லறைகளில் ஈமப் பொருட்களாக ஏராளமான இரும்புப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.
 (ii) வாள், குறுவாள் போன்ற கருவிகள், கோடரிகள், உளிகள், விளக்குகள், முக்காலிகள் ஆகியவை கிடைத்துள்ளன.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


(iii) இப்பொருட்களில் சிலவற்றிற்கு எலும்பு அல்லது மரம் அல்லது கொம்பாலான கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கிறது.

(iv) இரும்புக் கருவிகள் வேளாண்மைக்கும், வேட்டையாடுதலுக்கும், உணவு சேகரிப்பதற்கும், போர்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.

(v) வெண்கலக் கிண்ணங்கள், விலங்கு, பறவை உருவங்களால் அணிவேலைப்பாடு செய்யப்பட்ட கலங்கள், வெண்கலத்திலான முகம் பார்க்கும் கண்ணாடி, மணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன.

**2. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுப்படுத்துக.**

**விடை:** (i) மனிதர்களின் வரலாற்றைப் புவியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.

(ii) புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் பொதிந்து கிடக்கின்றன.

(iii) புவி மற்றும் பல்வேறு உயிரினங்களின் வரலாற்றை அறிவதற்கு இச்சான்றுகள் மிக முக்கியமானவையாகும். இவ்வடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகளின் புதைப்படிவங்கள் (fossil bones) புதைந்துள்ளன.

(iv) தொல்மானுடவியல் அறிஞர்களும் (Palaeo anthropologists), தொல்லியல் அறிஞர்களும் (Archaeologists) புவியின் மண் மற்றும் பாறை அடுக்குகளை அகழ்ந்து, மனித மூதாதையர்கள் குறித்த சான்றுகளைச் சேகரிக்கின்றார்கள்.

(v) மனிதர்களின் பரிணாமம், தொல்பழங்காலம் ஆகியவற்றின் பல்வேறு கால கட்டங்களை அறிய இந்தப் புதைபடிவங்கள் மற்றும் மண்ணடுக்குகளின் காலம் அறிவியல்பூர்வமாக கணிக்கப்படுகிறது.

(vi) இச்சான்றுகளின் வழியாக மனித வரலாற்றின் பரிணாம வளர்ச்சி நிலைகள் மற்றும் அவற்றின் காலகட்டம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முயல்கின்றனர்.

(vii) தொல்லியல் (Archaeology): தொல்பொருள்களை ஆராய்ந்து விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயும் இயல் ஆகும்.

(viii) தொல்மானுடவியல் (Palaeoanthropology ): மனிதர்களின் மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளும் இயல் ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1. நாம் .................... தொழில்நுட்ப காலத்தில் வாழ்கிறோம்.**

அ) போக்குவரத்து　ஆ) தகவல்　இ) பண்பாடு　ஈ) நாகரிகம்

[விடை: ஆ) தகவல்]

**2. மனிதர்களின் வரலாற்றை .................... வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.**

அ) கோள்களின்　ஆ) புவியின்
இ) சூரிய குடும்பத்தின்　ஈ) நீர்நிலைகளின்　[விடை: ஆ) புவியின்]

**3. தொல் பொருள்களை ஆராய்ந்து, விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயும் இயல் .................... .**

அ) தொல்லியல்　ஆ) தொல் மானுடவியல்
இ) நிலவியல்　ஈ) உயிரியில்　[விடை: அ) தொல்லியல்]


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**4. மனிதர்களின் மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளும் இடம் .................... .**

அ) தொல் மானுடவியல் ஆ) நிலவியல்
இ) நுண்ணுயிரியல் ஈ) தொல்லியல்

[விடை: அ) தொல் மானுடவியல்]

**5. புவி சுமார் .............. பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது.**

அ) 5.59 ஆ) 4.15 இ) 4.54 ஈ) 5.52

[விடை: இ) 4.54]

**6. ஆஸ்ட்ரோலாபித்திஸைன் என்பதற்கு .......................... என்று பெருள்.**

அ) டைனோஸர் ஆ) இடைத் தொல்லுயிரூழி
இ) தெற்கத்தில் மனிதக் குரங்கு ஈ) நுண்ணுயிரிகள்

[விடை: இ) தெற்கத்தில் மனிதக் குரங்கு]

**7. சுமார் 600 முதல் 542 மில்லியன் ஆண்களுக்கு முந்தைய ......................... இல் பல செல் உயிரினங்கள் முதலில் தோன்றின.**

அ) பழந் தொல்லுயிரூழி ஆ) இடைத் தொல்லுயிரூழி
இ) தொல்லுயிரூழி ஈ) பாலூட்டிகள் காலம்

[விடை: இ) தொல்லுயிரூழி]

**8. ............................ காலகட்டத்தில் டைனோஸர்கள் வாழ்ந்தன.**

அ) பாலூட்டிகளின் ஆ) தொல்லுயிரூழி
இ) பழந் தொல்லுயிரூழி ஈ) இடைத் தொல்லுயிரூழி

[விடை: ஈ) இடைத் தொல்லுயிரூழி]



**9. வரலாறு எழுதுவது பண்டைய ..................... காலத்தில் தொடங்கியது என்று சொல்லலாம்.**

அ) எகிப்தியர் ஆ) கிரேக்கர்கள் இ) ரோமானியர்கள் ஈ) இந்தியர்கள்

[விடை: ஆ) கிரேக்கர்கள்]

**10. வரலாற்றின் தந்தை ...................... ஆவார்.**

அ) ஹெரோடோடஸ் ஆ) ஹெர்குலிஸ் இ) அரிஸ்டாடில் ஈ) சாக்ரடீஸ்

[விடை: அ) ஹெரோடோடஸ்]

**11. என்னிகால்டி - நன்னா அருங்காட்சியகம் .................... வில் அமைக்கப்பட்டது.**

அ) சுமெரியா ஆ) பாபிலோனியா
இ) மெசபடோமியா ஈ) பல்கேரியா [விடை: இ) மெசபடோமியா]

**12. ....................... -இல்அமைக்கப்பட்ட கேபிடோலைன் அருங்காட்சியகம்தான் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கும் மிகப் பழமையான அருங்காட்சியகமாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.**

அ) இத்தாலி ஆ) ஜெர்மனி இ) பிரான்ஸ் ஈ) பெல்ஜியம்

[விடை: அ) இத்தாலி]

**13. உலகின் மிகப்பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம் உள்ள இடம் .................... .**

அ) லண்டன் ஆ) மாஸ்கோ இ) நாளந்தா ஈ) ஆக்ஸ்போர்ட்

[விடை: ஈ) ஆக்ஸ்போர்ட்]

**14. புதைப்படிவுகள் குறித்த ஆய்வு .................... என்று அழைக்கப்படுகிறது.**

அ) தொல்பொருள் அறிவியல் ஆ) புதைபடிவ ஆய்வியல்
இ) நுண்ணுயிரியல் ஈ) நிலவியல்

[விடை: ஆ) புதைபடிவ ஆய்வியல்]

15. .................. தோற்றம் மனித வரலாற்றின் மிக முக்கியமான திருப்புமுனையாகும்.
அ) கால்நடை வளர்ப்பின் ஆ) வேட்டையாடுதலின்
இ) எழுத்துத்துறையின் ஈ) ஆபரணங்களின்
[விடை: இ) எழுத்துத்துறையின்]

16. கூரிய வெட்டுமுனை உள்ள கல்லால் ஆன உளிக்கு .................... என்று பெயர்.
அ) பிளேக்ஸ் ஆ) செதில் இ) கருக்கல் ஈ) பியூரின்
[விடை: ஈ) பியூரின்]

17. குரோ-மக்னான் என்றழைக்கப்படும் மனிதர்கள் .................... -வில் வாழ்ந்தார்கள்.
அ) ஐரோப்பா ஆ) கென்யா இ) ஆசியா ஈ) ஆப்பிரிக்கா
[விடை: அ) ஐரோப்பா]

18. ........................ காலகட்டத்தில் குரோ-மக்னான் என்ற மனிதர்கள் வாழ்ந்தார்கள்.
அ) கீழ்ப் பழங்கற்காலப் பண்பாடு ஆ) இடைப் பழங்கற்காலப் பண்பாடு
இ) மேல் பழங்கற்காலப் பண்பாடு ஈ) இடைக் கற்காலப் பண்பாடு
[விடை: இ) மேல் பழங்கற்காலப் பண்பாடு]

19. கீழ்ப் பழங்கற்காலப் பண்பாட்டின் கற்கருவிகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இடங்களில் ...................... ஒரு இடம்.
அ) அயப்பாக்கம் ஆ) கொட்டிவாக்கம்
இ) அதிரம்பாக்கம் ஈ) மேடவாக்கம் [விடை: இ) அதிரம்பாக்கம்]

20. மனிதர்களின் சிந்தனை வளர்ச்சியுடன் தொடர்புடையது .................... .
அ) செல்வம் ஆ) உடல்நலம் இ) வாழ்க்கை முறை ஈ) அறிவாற்றல்
[விடை: ஈ) அறிவாற்றல்]

21. கோதுமை, பார்லி, பட்டாணி ஆகியவை .................... ஆண்டுகளுக்கும் முன்பே பயிரிடத் தொடங்கப்பட்டுவிட்டன.
அ) 4,000 ஆ) 6,000 இ) 10,000 ஈ) 8,000
[விடை: இ) 10,000]

22. உலகில் மனித மூதாதையர்கள் வசித்த மிக முக்கியமான இடங்களில் ஒன்று .................... .
அ) பாலாறு ஆ) மணிமுத்தாறு இ) அடையாறு ஈ) கொசஸ்தலையாறு
[விடை: ஈ) கொசஸ்தலையாறு]

23. i) வரலாறு எழுதுவது பண்டைய எகிப்தியர் காலத்தில் தொடங்கியது.
ii) ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அமெரிக்காவில் இருக்கிறது.
iii) 1 மில்லியன் என்பது 10 லட்சம்
iv) அச்சூலியன் கருவிகள் சென்னைக்கு அருகில் கிடைத்துள்ளன.
அ) i) சரி ஆ) ii) சரி
இ) iii), மற்றும் iv) சரி ஈ) i) மற்றும் iii) சரி
[விடை: இ) iii), மற்றும் iv) சரி]

24. கூற்று : கல்லறை, கற்திட்டைகளில் போர்ட் ஹோல் எனப்படும் இடுதுளை ஒன்று ஒரு புறம் இடப்பட்டிருக்கும்.
காரணம் : இறந்தவரின் ஆன்மா இந்த துளையின் வழியே வந்து செல்வதற்காக இப்படி அமைக்கப்பட்டது.
அ) கூற்று சரி; காரணம் தவறு
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
இ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.
[விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.]

**25.** **கூற்று :** பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகர் கல்வெட்டுக் குறிப்புகள் அவரது பேரரசுக்கு வெளியே இருந்த சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.

**காரணம் :** தமிழகத்தைச் சேர்ந்த பழங்கால அரசர்கள் அரசியல் நோக்கில் அவர்களின் ஆட்சியை இரும்புக்காலத்தில் துவக்கினார்கள்.

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

[விடை: அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது]

**26.** **விவசாயம் மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்**

அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்

[விடை: இ) புதிய கற்காலம்]

**27.** **தமிழகத்துக்கு அப்பால் சேர, சோழ, பாண்டியர்கள் குறித்து அறிந்துகொள்ள பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த .................. கல்வெட்டுக் குறிப்புகள் உதவுகின்றன.**

அ) புலிகேசி ஆ) அசோகர் இ) சந்திரகுப்தர் ஈ) தனநந்தர்

[விடை: ஆ) அசோகர்]



## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மனிதர்கள் உருவாக்கிய அல்லது மாற்றியமைத்த ஒரு பொருள் அல்லது கருவி ............... எனப்படுகிறது. [விடை: செய்பொருள்]
2. தொடக்க நிலை பல செல் உயிரினம் முதல் முதலில் .................... காலத்தில் தோன்றியது. [விடை: தொல்லுயிரூழியில்]
3. ...................... என்ற குரங்கினத்திலிருந்துதான் நவீன மனித இனம் தோன்றியது. [விடை: ஆஸ்ட்ராலோபித்திஸைன்கள்]
4. உலகின் மிகத் தொன்மையான அருங்காட்சியகம் ...................... அருங்காட்சியகம் [விடை: என்னிகால்டி-நன்னா]
5. இங்கிலாந்தின் ஆக்ஸ்போக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ........................ அருங்காட்சியகமே உலகின் மிகப் பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம். [விடை: ஆஷ்மோலியன்]
6. சி.ஜே. தாம்சன் முன்மொழிந்த .......................... என்ற கருத்து பண்டைய மனிதகுல வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு உதவும் முக்கியமான கருத்தாகும். [விடை: மூன்று காலகட்ட முறை]
7. எழுத்துமுறை அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் .................... என்று குறிப்பிடப்படுகிறது. [விடை: தொல்பழங்காலம்]
8. ஓல்டோவான் கருவிகள் ஆப்பிரிக்காவின் ...................... மலையிடுக்கில் கிடைத்துள்ளன. [விடை: ஓல்டுவாய்]
9. கைக்கோடரிக் கருவிகள் ........................ கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. [விடை: அச்சூலியன்]
10. .................... என்பது ஒரு கல்லின் முதன்மைப் பாளம் ஆகும். [விடை: கருக்கல்]
11. நாகரிகத்தில் நிலத்தை உழுவதற்கு ........................ பயன்படுத்தப்பட்டன. [விடை: காளைகள்]
12. தூத்துக்குடி அருகே உள்ள ..................... பகுதிகளில் இடைக்கற்கால கற்கருவிகள் பல கிடைத்துள்ளன [விடை: தேரி]

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

**1.** **அ] தமிழ்நாட்டில் மேல் பழங் கற்காலப் பண்பாட்டுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை.**
**ஆ] இறந்தவர்களின் உடலோடு ஈமப் பொருட்களாக பொன் ஆபரணங்களும் பெருங் கற்கால காலகட்டத்தில் புதைக்கப்பட்டன.**
**இ] இரும்புக் காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம், புதிய கற்காலம் என்றழைக்கப்படுகிறது.**
**ஈ] செல்ட் (celt) என்பது மெருகேற்றப்பட்ட மட்பாண்டமாகும்.**

விடை: அ) சரி
ஆ) தவறு. இறந்தவர்களின் உடலோடு ஈமப் பொருட்களாக **இரும்பு, வெண்கலப் பொருட்கள்** பெருங் கற்கால காலகட்டத்தில் புதைக்கப்பட்டன.
இ) தவறு. புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம், இரும்புக் கற்காலம் என்றழைக்கப்படுகிறது.
ஈ) தவறு. செல்ட் (celt) என்பது மெருகேற்றப்பட்ட **கற்கோடரிகளாகும்**.

**2.** **அ] சார்க்கோபேகஸ் என்பவை சுட்ட களிமண்ணாலான சவப்பெட்டி போன்றவை.**
**ஆ] அர்ன் என்பவை புதைத்ததன் நினைவுச்சின்னம் போல நிறுவப்படும் தூண் போன்ற நடுகற்கள்.**
**இ] புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சாணூர் என்ற இடத்தில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.**
**ஈ] பொ.ஆ.மு. 5,000-க்கு முன் இலங்கையின் சில பகுதிகளும், தமிழ்நாடும் நிலத்தில் இணைக்கப்பட்டிருந்தன.**

விடை: அ) சரி.
ஆ) தவறு. **மென்ஹிர்** என்பவை புதைத்ததன் நினைவுச்சின்னம் போல நிறுவப்படும் தூண் போன்ற நடுகற்கள்.
இ) தவறு. புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள **சித்தன்ன வாசல்** என்ற இடத்தில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
ஈ) சரி.

## IV. பொருத்துக:

**1.**

| | | | |
|---|---|---|---|
| 1. தொல்லுயிரூழி | - | அ) | 251 முதல் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 2. பழந் தொல்லுயிரூழி | - | ஆ) | 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் |
| 3. இடைத் தொல்லுயிரூழி | - | இ) | 542 முதல் 251 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 4. பாலூட்டிகள் காலம் | - | ஈ) | சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 5. நுண்ணுயிரிகளின் வடிவில் உயிர்கள் | - | உ) | சுமார் 600 முதல் 542 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |

விடை: 1 - உ, 2 - இ, 3 - அ, 4 - ஈ, 5 - ஆ

**2.**

| | | | |
|---|---|---|---|
| 1. என்னிகால்டி- நன்னா அருங்காட்சியகம் | - | அ) | பொ.ஆ.1471 |
| 2. கேபிடோலைன் அருங்காட்சியகம் | - | ஆ) | பொ.ஆ. 1820 - 1903 |
| 3. ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் | - | இ) | பொ.ஆ. 1809 - 1882 |
| 4. ஹெர்பர்ட் ஸ்பென்சார் அருங்காட்சியகம் | - | ஈ) | பொ.ஆ.மு. 530 |
| 5. சார்லஸ் டார்வின் அருங்காட்சியகம் | - | உ) | பொ.ஆ,. 1677 |

விடை: 1 - ஈ, 2 - அ, 3 - உ, 4 - ஆ, 5 - இ

## V. சுருக்கமான விடை தருக:

**1. சிந்தனைகளின் காலம் பற்றி குறிப்பு வரைக.**

விடை: (i) உலகம் மற்றும் பேரண்டம் குறித்து புரிந்து கொள்ளவும், அதைக் குறித்த அறிவைச் சேகரித்து விளக்க முயற்சி செய்யும் ஒரே உயிரினம் மானுடம் மட்டும் தான்.
(ii) பரிணாம வளர்ச்சிப் போக்கில் மனிதர்கள் உணர்தல் நிலையையும் அறிவாற்றலையும் கொண்டவர்களாக மாறினார்கள்.
(iii) மனிதர்கள் இயற்கை, தம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் மற்றும் உலகம் குறித்து சிந்திக்கவும் கேள்வி எழுப்பவும் தொடங்கினர்.
(iv) முதலில் அவர்கள் இயற்கையைக் கடவுளாகக் கருதினார்கள். (எ.கா.) சூரியன், சந்திரன், இயற்கை ஆற்றல்களை புரிந்து வழிபட்டனர்.

**2. நியாண்டர்தால்களின் தனித்தன்மை வாய்ந்த பண்புகளைக் கூறு.**

விடை: **நியாண்டர்தால்களின் பண்புகள்:**

(i) நியாண்டர்தால் இனம் நிமிர்ந்து இரண்டு கால்களால் நடப்பதாகும்.

(ii) இந்த இனத்திற்கு பெரிய மூளை உண்டு.

(iii) இவை கருவிகளைப் பயன்படுத்தும், இவற்றில் சில தகவல் பரிமாறும் திறன் பெற்றவை.

(iv) இவர்கள் இறந்தவர்களைப் புதைத்தார்கள்.

**3. விலங்குகளை மனிதன் பழக்கிய நிகழ்வு மனித வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும் - விளக்கு.**

விடை: (i) விலங்குகளைப் பழக்குதல் இணங்கி வாழும் வாழ்க்கையின் ஒரு பகுதியாக உருவாகி இருக்கலாம்.

(ii) நாய்கள் தான் முதலில் பழக்கப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(iii) செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் – பொ.ஆ.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் தென்மேற்கு ஆசியாவில் பழக்கப்படுத்தப்பட்டன.

(iv) சுமேரிய நாகரிகத்தில் நிலத்தை உழுவதற்கு காளைகள் பயன்படுத்தப்பட்டன.

(v) புதிய கற்கால மெஹர்கரில் ஆடுகள், மாடுகள் பழக்கப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

**4. தகவல் தொழில் நுட்பம் பற்றி குறிப்பு தருக.**

விடை: (i) நாம் தகவல் தொழில்நுட்ப காலத்தில் வாழ்கிறோம்.

(ii) அலைபேசிகளால் இன்று உலகம் உண்மையிலேயே நமது விரல் நுனியில் இருக்கிறது.

(iii) இந்த நவீன வாழ்விற்கான அடித்தளம் தொல்பழங்காலத்தில் இடப்பட்டு, நமது முன்னோர்களின் அறிவாற்றலால் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டதாகும்.



**5. புவியின் மேலடுக்குகளின் முக்கியத்துவம் குறித்து விவரி.**

விடை: (i) புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் பொதிந்துகிடக்கின்றன.

(ii) புவி மற்றும் பல்வேறு உயிரினங்களின் வரலாற்றை அறிவதற்கு இச்சான்றுகள் மிக முக்கியமானவையாகும்.

(iii) இவ்வடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகளின் புதைபடிவங்கள் (fossil bones) புதைந்துள்ளன.

(iv) தொல்மானுடவியல் அறிஞர்களும் (Palaeoanthropologists), தொல்லியல் அறிஞர்களும் (Archaeologists) புவியின் மண் மற்றும் பாறை அடுக்குகளை அகழ்ந்து, மனித மூதாதையர்கள் குறித்த சான்றுகளைச் சேகரிக்கின்றார்கள்.

(v) மனிதர்களின் பரிணாமம், தொல்பழங்காலம் ஆகியவற்றின் பல்வேறு கால கட்டங்களை அறிய இந்தப் புதைபடிவங்கள் மற்றும் மண்ணடுக்குகளின் காலம் அறிவியல்பூர்வமாக கணிக்கப்படுகிறது.

**6. மண்ணடுக்கியல் என்றால் என்ன?**

விடை: மண்ணடுக்கியல் – Stratigraphy – இயற்கை மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளால் உருவான பாறை மற்றும் மண் அடுக்குகளின் தோற்றம், தன்மை, உறவுமுறைகள் குறித்து ஆராய்தல்.

**7. சி.ஜே. தாம்சனின் மூன்று காலகட்ட முறையை விவரி.**

விடை: (i) சி.ஜே. தாம்சன் முன்மொழிந்த மூன்று காலகட்ட முறை (Three Age System) என்ற கருத்து பண்டைய மனிதகுல வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு உதவும் முக்கியமான கருத்தாகும்.

(ii) அவர் கோபன்கேகனில் உள்ள டேனிஷ் தேசிய அருங்காட்சியகத்தின் செய்பொருட்களைக் கற்காலத்தவை, வெண்கலக் காலத்தவை, இரும்புக் காலத்தவை என மூன்றாகப் பிரித்தார்.

(iii) இதுவே மூன்று காலகட்ட முறை அல்லது முக்காலக் கொள்கை எனப்படுகின்றது.

(iv) கற்காலம் – கருவிகள் செய்வதற்கு கற்கள் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்ட காலம்.

(v) வெண்கலக் காலம் – வெண்கல உலோகவியல் வளர்ச்சி பெற்று வெண்கலக் கருவிகள், பொருள்கள் செய்யப்பட்ட காலம்.

(vi) இரும்புக் காலம் – கருவிகள் செய்ய இரும்பு உருக்கிப் பிரித்தெடுக்கப்பட்ட காலம்.

**8. தொல் பழங்காலம் பற்றி குறிப்பு வரைக.**

விடை: (i) எழுத்துமுறை அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் தொல்பழங்காலம் என்று குறிப்பிடப்படுகிறது.

(ii) மனித வரலாற்றின் மொத்த காலத்தில் 99 விழுக்காட்டிற்கு மேல் விரவியிருப்பது தொல்பழங்காலத்தில்தான்.

(iii) தொல்பழங்காலச் சமூகங்கள் எழுத்தறிவிற்கு முந்தையவையாகக் கருதப்படுகின்றன.

(iv) ஆனால், எழுத்தறிவிற்கு முந்தையவை என்பதால் அவர்கள் பண்பாட்டில் பின்தங்கியவர்கள் என்று பொருளல்ல.

(v) தொல்பழங்கால மக்கள் மொழியை உருவாக்கினார்கள். அழகான ஓவியங்களையும். செய்பொருட்களையும் படைத்தார்கள்.

(vi) எனவே அவர்கள் மிகவும் திறன் கண்டவர்கள் என்பதில் ஐயமில்லை.

**9. கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு எங்கு உள்ளது?**

விடை: (i) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு சிரியாவின் வடபகுதியிலிருந்து கிழக்கு ஆப்பிரிக்காவில் மத்திய மொசாம்பிக் வரை சுமார் 6,400 கி.மீ தூரம் பரவியுள்ள பள்ளத்தாக்கு போன்ற நிலப்பரப்பாகும்.

(ii) இது **'பெரும் பிளவு பள்ளத்தாக்கு'** என்றும் அழைக்கப்படும்.

(iii) இப்பள்ளத்தாக்கில் பல இடங்களில் தொல்பழங்காலம் குறித்த சான்றுகள் கிடைத்துள்ளன.

**10. மனித மூதாதையரின் தொடக்க காலக் கற்கருவிகளை நாம் எங்கு காணலாம்?**

விடை: (i) மனித மூதாதையர்களால் உருவாக்கப்பட்ட தொடக்ககாலக் கற்கருவிகள் கென்யாவின் லோமிக்குவி என்ற இடத்தில் கிடைத்துள்ளன. இவை 3.3 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

(ii) ஓல்டோவான் கருவிகள் ஆப்பிரிக்காவின் ஓல்டுவாய் மலையிடுக்கில் கிடைத்துள்ளன. இவை 2 முதல் 2.6 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை.

(iii) மனித மூதாதையர்கள் (ஆஸ்ட்ராலோபித்திஸைன்கள்) சுத்தியல் கற்களை பயன்படுத்தினர்,

(iv) மேலும் "பிளேக்ஸ்" (flakes) எனப்படும் கற்செதில்களை உருவாக்கிக் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள்.

(v) இக்கருவிகள் உணவை வெட்டவும், துண்டு போடவும், பக்குவப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டன.

**11. லெவலாய்சியன் கருவிகள் பற்றி குறிப்பு வரைக.**

விடை: (i) லெவலாய்சியன் (லெவலவா) கருவிகள் என்பவை கருக்கல்லை நன்கு தயார் செய்து உருவாக்கப்பட்ட கருவிகள் ஆகும்.

(ii) இவை முதலில் கண்டெடுக்கப்பட்ட பிரான்ஸில் உள்ள லெவலவா (லெவலாய்ஸ்) என்ற இடத்தின் பெயரை ஒட்டி இப்பெயர் பெற்றன.

(iii) தற்காலத்திற்கு முன், 2,83,000 முதல் 1,98,000 ஆண்டுகளுக்கு இடையில் ஐரோப்பாவிலும் ஆசியாவின் மேற்குப் பகுதியிலும் இடைப் பழங்கற்காலப் பண்பாடு உருவானது. இக்கருவிகள் பொ.ஆ.மு. 28,000 வரை பயன்படுத்தப்பட்டன.

**12. மேல் பழங்கற்காலப் பண்பாடு பற்றி நீவிர் அறிந்தது என்ன?**

விடை: (i) இடைப் பழங்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து வந்த பண்பாடு, மேல் பழங்கற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

(ii) கற்கருவித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புதிய நுட்பங்கள் இந்தப் பண்பாட்டின் சிறப்பான கூறுகளில் ஒன்றாகும்.

(iii) கற்களாலான நீண்ட கத்திகளும், பியூரின் எனப்படும் உளிகளும் உருவாக்கப்பட்டன.

(iv) இவர்கள் சிலிகா அதிகமுள்ள பல்வேறு கல் வகைகளைக் கருவிகள் செய்யப் பயன்படுத்தினார்கள்.

(v) பல்வேறு ஓவியங்களும் கலைப்பொருட்களும் இக்காலத்தில் உருவாக்கப்பட்டன.

(vi) இவர்கள் தயாரித்த பல்வேறு செய்பொருள்கள் இவர்களது படைப்பாற்றல் திறனில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும், மொழிகள் உருவானதையும் காட்டுகின்றன.

(vii) இந்தக் கால கட்டத்தில் நுண்கற்கருவிகள் எனப்படும் குறுங் கற்கருவிகளும் பயன்பாட்டிற்கு வந்தன.

**13. புதிய காலம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

விடை: (i) கற்கருவிகள் செய்வதற்கு வழவழப்பாக்கும், மெருகூட்டும் புதிய நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டதால் இது **புதியகாலம்** என்று அழைக்கப்படுகிறது.

(ii) புதிய கற்கால மக்கள், பழங்கற்காலச் செதுக்கப்பட்ட கற்கருவிளையும் பயன்படுத்தினர்.

(iii) பயிர் விளைவித்தலும், விலங்குகளைப் பழக்கப்படுத்துதலும் அறிமுகமானது. இது ஏராளமான அளவில் தானிய மற்றும் விலங்கு உணவை உற்பத்தி செய்ய உதவியது.

**14. தொல்லியல் அகழாய்வு என்றால் என்ன?**

விடை: மண்ணில் புதைந்துள்ள கற்கருவிகள், பானைகள், விலங்குகளின் எலும்புகள், மகரந்தங்கள் ஆகியவற்றை அகழ்ந்தெடுத்து மனிதர்களின் கடந்த கால வாழ்க்கைமுறையைப் புரிந்து கொள்வது 'தொல்லியல் அகழாய்வு' ஆகும்.

**15. காஸ்மிக்-கதிர் பாய்ச்சி கணித்தல் என்றால் என்ன?**

விடை: (i) காஸ்மிக்-கதிர் பாய்ச்சி கணித்தல் என்பது மாதிரிகளின் காலத்தைக் கணிக்க காஸ்மோஜீனிக் கதிர்களை வெளிப்படுத்தி அறியும் முறை ஆகும்.

(ii) அதிரம் பாக்கத்தில் நடந்த தொல்லியல் அகழாய்வுகளில் கிடைத்த செய்பொருட்களைக் காஸ்மிக் கதிர் மூலம் காலத்தைக் கணிக்கும் ஆய்வுக்கு உட்படுத்தினர்.

(iii) இது சுமார் 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே அங்கு மனிதர்கள் வாழ்ந்திருப்பதைக் காட்டியது.

**16. மெருகிடுதல் என்றால் என்ன?**

விடை: புதியகற்கால மனிதர்கள்தான் முதலில் மட்பாண்டங்களைச் செய்திருக்க வேண்டும். மட்பாண்டங்களை அவர்கள் கையாலோ அல்லது மெதுவாகச் சுற்றும் சக்கரத்தைக் கொண்டோ வனைந்தார்கள். மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்னால் அவற்றைக் கூழாங்கற்கள் கொண்டு மெருகேற்றினார்கள். இதனைத் தேய்த்து மெருகிடுதல் (burnishing) என்பர்.



**17. சங்க காலத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது எப்போது?**

விடை: (i) புதியகற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம் இரும்புக் காலம் என்று அழைக்கப்படுகிறது. அதன் பெயர் குறிப்பிடுவதைப் போல, இக்காலகட்ட மக்கள் இரும்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினர். இது சங்ககாலத்திற்கு முந்தைய காலம் ஆகும்.

(ii) இரும்புக் காலம் நல்ல பண்பாட்டு வளர்ச்சி உருவான காலகட்டம். இக்காலத்தில்தான் சங்ககாலத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

(iii) இரும்புக் காலத்தில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் குடியேறிவிட்டார்கள். மக்களிடையே பரிமாற்ற உறவுகள் வளர்ந்தன.

**18. தமிழ்நாட்டில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ள இடங்கள் யாவை?**

விடை: திருநெல்வேலி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூர், மதுராந்தகத்திற்கு அருகிலுள்ள சானூர், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் எனப் பல இடங்களில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழகம் முழுவதும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன.

**19. ஈம நினைவுச் சின்னங்கள் என்பன யாவை?**

விடை: (i) மக்கள் இறந்தவர்களைப் புதைப்பதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தியதால், இரும்புக் காலம், பெருங்கற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

(ii) இறந்தவர்களின் உடலோடு ஈமப்பொருட்களாக, இரும்புப் பொருட்கள், கார்னீலியன் மணிகள், வெண்கலப்பொருட்கள் ஆகியவையும் புதைக்கப்பட்டன.

(iii) ஈமச்சின்னங்கள் சிலவற்றில் மனித எலும்புகள் கிடைக்கவில்லை. மற்ற பிற ஈமப்பொருட்களே கிடைத்துள்ளன. இவற்றை ஈம நினைவுச் சின்னங்கள் என்று குறிப்பிடலாம்.

**20. போர்ட்ஹோல் என்றால் என்ன?**

விடை: (i) கல்லறை (Cist), கற்திட்டைகளில் '**போர்ட் ஹோல்**' (Porthole) எனப்படும் இடு துளை ஒன்று ஒருபுறம் இடப்பட்டிருக்கும்.

(ii) இவை அவற்றின் நுழைவாயில் போலப் பயன்பட்டன. இவை ஆன்மா வந்து செல்வதற்காக வைக்கப்பட்டவை என்ற கருத்தும் உள்ளது.

## VI. தலைப்பு வினாக்கள்:
## ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

**1. நிலஅளவியல், உயிரியல் மற்றும் தொல்லியல் குறித்த அறிவியல் அடித்தளம்.**

**அ] ஹெரோடோடஸ் வரலாற்றின் தந்தை என கருதப்பட காரணம் என்ன?**
**ஆ] எந்த காலக்கட்டம் ஐரோப்பாவின் மறுமலர்ச்சி காலம் என்றழைக்கப்படுகிறது?**
**இ] உலகின் மிகத் தொன்மையான அருங்காட்சியகத்தின் பெயர் என்ன? அதற்கான பெயர்க்காரணம் யாது?**
**ஈ] புதை படிவங்கள் என்றால் என்ன?**

விடை: அ) ஹெரோடோடஸ் எழுதிய வரலாறு மனிதத்தன்மையுடனும், பகுத்தறிவுடனும் காணப்படுவதால், அவர் வரலாற்றின் தந்தை என கருதப்பட்டார்.

ஆ) பொ.ஆ. 15-16 ஆம்நூற்றாண்டுகள் ஐரோப்பாவின் மறுமலர்ச்சி காலம் என்றழைக்கப்படுகிறது.

இ) உலகின் மிகத் தொன்மையான அருங்காட்சியகம், 'என்னிகால்டி-நன்னா' அருங்காட்சியகமாகும். நவீன பாபிலோனிய அரசரான நபோனிடசின் மகள், 'இளவரசி எண்ணிகால்டி' யின் பெயரால் இது அழைக்கப்படுகிறது.

ஈ) கடந்த காலத்தில் வாழ்ந்த விலங்குகள், தாவரங்களின் எச்சங்கள், தடங்கள், அடையாளங்கள் அப்படியே பாதுகாக்கப்பட்டிருப்பது புதைபடிவங்கள் (fossils) எனப்படும்.

**2. மூன்று காலகட்ட முறை**

**அ] மூன்று காலகட்ட முறையை முன்மொழிந்தவர் யார்?**
**ஆ] அதன் முக்கியத்துவம் என்ன?**
**இ] அதன் மூன்று காலகட்டங்கள் யாவை?**
**ஈ] எந்த அருங்காட்சியகத்தின் செய்பொருட்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டன?**

விடை: அ) சி.ஜே.தாம்சன்

ஆ) மூன்று காலகட்ட முறை என்ற கருத்து, பண்டைய மனிதகுல வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு உதவும் முக்கியமான கருத்தாகும்.

இ) 1. கற்காலம், 2. வெண்கலக் காலம், 3. இரும்புக் காலம்

ஈ) கோபன்கேகனில் உள்ள டேனிஷ் தேசிய அருங்காட்சியகத்தின் செய்பொருட்களை சி.ஜே.தாம்சன் மூன்று வகையாகப் பிரித்தார்.

**3. இடைப் பழங்கற்காலப் பண்பாடு**

**அ] இடைப்பழங்கற்காலப் பண்பாட்டு காலகட்டத்தில் வாழ்ந்த இனத்தின் பெயர் என்ன?**
**ஆ] கல் (Lith) தொழில்நுட்பம் என்றால் என்ன?**
**இ] லெவாய்சியன் கருவிகள் என்பன யாவை?**
**ஈ] இக்காலத்தில் வாழ்ந்த மனிதன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?**

விடை: அ) ஹோமோ எரக்டஸ்

ஆ) கற்கருவிகள் உருவாக்கத்தில் ஈடுபடுத்தப்படும் முறைமைகளும், நுட்பங்களும் கற்கருவி (Lithic) தொழில்நுட்பம் எனப்படுகிறது.

இ) லெவாய்சியன் கருவிகள் கருக்கல்லை (core) நன்கு தயார் செய்து உருவாக்கப்பட்ட கருவிகள் ஆகும்.

ஈ) நியாண்டர்தால் மனிதன் என்று அழைக்கப்பட்டான்.

**4. மேல் பழங்கற்காலப் பண்பாடு**

**அ] செதில் என்றால் என்ன?**
**ஆ] இந்தப் பண்பாட்டின் சிறப்பான கூறுகளில் ஒன்றை எழுதுக.**
**இ] இக்காலகட்டத்தில் வாழ்ந்த குரோ-மக்னான் என்றழைக்கப்பட்ட மனிதர்கள் எங்கு வசித்தனர்?**
**ஈ] கருவிகளையும், கலைப் பொருட்களையும் செய்ய எந்தப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன?**

விடை: அ) பெரிய கற்பாளத்திலிருந்து அல்லது கருங்கல்லில் இருந்து உடைத்து எடுக்கப்பட்ட ஒரு சிறு கந்துண்டு செதில் எனப்படும்.

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


ஆ) கற்கருவித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புதிய நுட்பங்கள் இந்தப் பண்பாட்டின் சிறப்பான கூறுகளில் ஒன்றாகும்.

இ) ஐரோப்பாவில் குரோ-மக்னான் மனிதர்கள் வாழ்ந்தனர்.

ஈ) கருவிகளையும், கலைப் பொருட்களையும் செய்ய கொம்புகள் மற்றும் தந்தங்கள் பயன்படுத்தப்பட்டன.

5. **புதிய கற்காலப் பண்பாடு**

**[அ] புதிய கற்காலத்துக்கான தொடக்க காலச் சான்றுகள் காணப்பட்ட இடங்கள் யாவை?**

**[ஆ] புதிய கற்காலம் என்பது 'புதிய காலம்' என்று ஏன் அழைக்கப்படுகிறது?**

**[இ] பண்டைய நாகரிகங்களின் உருவாக்கத்திற்கு முக்கியமான கூறு (factor) என்ன?**

**[ஈ] புதிய கற்காலம் புரட்சி பற்றி கூறுக.**

விடை: அ) எகிப்து மற்றும் மெஸபடோமியா, சிந்துவெளி, கங்கை சமவெளி, சீனாவின் செழுமையான பகுதிகள் ஆகியனவற்றில் புதிய கற்காலத்துக்கான தொடக்க காலச் சான்றுகள் காணப்படுகின்றன.

ஆ) கற்கருவிகள் செய்வதற்கு வழவழப்பாக்கும், மெருகூட்டும் புதிய நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டதால் இது **புதியகாலம்** என்று அழைக்கப்படுகிறது.

இ) வேளாண்மை அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட உணவு உபரியே பண்டைய நாகரிகங்களின் உருவாக்கத்திற்கு முக்கியமான கூறு ஆகும்.

ஈ) புதிய கற்காலத்தில் வேளாண்மை அதிகரித்து உணவு உபரியாக உற்பத்தி செய்யப்பட்டது. நிரந்தரமான வீடுகள் கட்டப்பட்டன. பெரிய ஊர்கள் உருவாகின. எனவே இவை புதிய கற்காலப் புரட்சி எனப்பட்டது.

## VII. விரிவான விடையளிக்கவும்.



1. **புதிய கற்காலப் பண்பாட்டில் தமிழ்நாட்டின் பங்கினை விவரி.**

விடை: **புதிய கற்காலப் பண்பாடு - தமிழ்நாடு:**

(v) விலங்குகளைப் பழக்கப்படுத்தி, வேளாண்மை செய்த பண்பாடு புதியகற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

(vi) புதிய கற்கால பண்பாட்டின் மக்கள் செல்ட் (Celt) என்று அழைக்கப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் பயன்படுத்தினர்.

(vii) கால்நடை மேய்த்தல் அவர்களது முக்கியமான தொழிலாக இருந்தது. இவர்கள் சிறு கிராமங்களில் வசித்தார்கள். வீடுகள் கூரை வேயப்பட்டிருந்தன. தட்டிகளின் மீது களிமண் பூசி உருவாக்கப்படும் முறையில் சுவர்கள் கட்டப்பட்டன.

(viii) புதியகற்கால ஊர்களுக்கான சான்று வேலூர் மாவட்டத்தின் பையம்பள்ளியிலும் தர்மபுரி பகுதியில் உள்ள சில இடங்களிலும் கிடைத்துள்ளன.

(ix) தமிழகத்தின வேலூர் மாவட்டத்தில் பையம்பள்ளி என்ற ஊர் உள்ளது. இங்கு இந்திய அரசின் தொல்லியல் துறை அகழாய்வு செய்துள்ளது. தமிழகத்தில் முதன்முதலில் மட்பாண்டங்களும் வேளாண்மை செய்ததற்கான சான்றும் இங்கு கிடைத்துள்ளன.

(x) இங்கு கேழ்வரகு, கொள்ளு, பச்சைபயறு ஆகிய தானியங்கள் கிடைத்துள்ளன.

(xi) இந்தப் புதியகற்கால இடங்கள் தென்னிந்திய புதியகற்காலப் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். இப்பண்பாடு பெருமளவு ஆந்திரப் பிரேதசம், கர்நாடகா பகுதிகளில்தான் திரட்சியடைந்திருந்தது.

(xii) புதிய கற்கால மக்கள் மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் பயன்படுத்தினர். இவை மரத்தாலான கைப்பிடிகளில் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இத்தகைய மெருகேற்றப்பட்ட கற்கள் இன்றும் சில தமிழ்நாடு கிராமக் கோயில்களில் வழிபடப்படுகின்றன.

2. **பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகளை விளக்குக.**

விடை: (i) மக்கள் இறந்தவர்களைப் புதைப்பதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தியதால், இரும்புக் காலம், பெருங்கற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**(ii)** இறந்தவர்களின் உடலோடு ஈமப்பொருட்களாக, இரும்புப் பொருட்கள், கார்னீலியன் மணிகள், வெண்கலப் பொருட்கள் ஆகியவையும் புதைக்கப்பட்டன. ஈமச்சின்னங்கள் சிலவற்றில் மனித எலும்புகள் கிடைக்கவில்லை. மற்ற பிற ஈமப்பொருட்களே கிடைத்துள்ளன. இவற்றை ஈம நினைவுச் சின்னங்கள் என்று குறிப்பிடலாம்.

**(iii)** ஈமப்பொருட்கள் என்பவை இறந்தவரின் எலும்புகளோடு ஈமச்சின்னத்தில் புதைக்கப்படும் பொருட்கள், மரணத்திற்குப் பிறகான இறந்தவரின் வாழ்விற்கு அவை உதவக்கூடும் என்று மக்கள் நம்பியிருக்கலாம். எகிப்து பிரமிடுகளிலும் இதுபோன்ற செய்பொருட்கள் உண்டு.

**(iv)** பண்டைய வரலாற்றுக் காலம் அல்லது சங்க காலத்தில் இதுபோன்று புதைப்பது நிகழ்ந்துள்ளது. சங்க இலக்கியங்கள் புதைப்பது குறித்த மக்களின் பல்வேறு வழக்கங்களைக் கூறுகின்றன.

**(v)** பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் டோல்மென் எனப்படும் கற்திட்டை, சிஸ்ட் எனப்படும் கல்லறைகள், மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக் கல், தாழி, பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள், சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

**(vi)** கொடக்கல் அல்லது குடைக்கல் (குடை வகை), தொப்பிக்கல், பத்திக்கல் ஆகிய வகைகள் கேரளாவில் காணப்படுகின்றன. மேஜை போன்ற கல்லால் உருவாக்கப்பட்ட டோல்மென்கள் ஈமச் சடங்கின் நினைவுச்சின்னமாக நிறுவப்பட்டன.

**(vii)** சிஸ்ட் என்பது மண்ணில் புதைக்கப்படும் கல்லறை போன்றது. இவை நான்கு புறமும் நான்கு கற்பாளங்களை நிறுத்தி, மேலே ஒரு கற்பாளத்தை வைத்து மூடி உருவாக்கப்படும்.

**(viii)** அர்ன் என்பவை மட்பாண்ட சாடிகள். இவை இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்டவை. சார்க்கோபேகஸ் என்பவை சுட்ட களிமண்ணாலான சவப்பெட்டி போன்றவை. இவற்றிற்குச் சில சமயங்களில் பல கால்களை வைத்துத் தயாரிப்பார்கள். மென்ஹிர் என்பவை புதைத்ததன் நினைவுச் சின்னம் போல நிறுவப்படும் தூண் போன்ற நடுகற்கள்.

**(ix)** கல்லறை (Cist), கற்திட்டைகளில் '**போர்ட் ஹோல்**' (Porthole) எனப்படும் இடு துளை ஒன்று ஒருபுறம் இடப்பட்டிருக்கும்.

**(x)** இவை அவற்றின் நுழைவாயில் போலப் பயன்பட்டன. இவை ஆன்மா வந்து செல்வதற்காக வைக்கப்பட்டவை என்ற கருத்தும் உள்ளது.

✶✶✶

## அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் | மதிப்பெண் : 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** **(4 × 1 = 4)**

**1.** மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது

அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி
இ) உராங் உட்டான் ஈ) கிரேட் ஏப்ஸ்

**2.** தமிழகத்துக்கு அப்பால் சேர, சோழ, பாண்டியர்கள் குறித்து அறிந்துகொள்ள பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த ................. கல்வெட்டுக் குறிப்புகள் உதவுகின்றன.

அ) புலிகேசி ஆ) அசோகர்
இ) சந்திரகுப்தர் ஈ) தனநந்தர்

**3.** **i)** செல்ட் எனப்பட்ட தீட்டப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.

**ii)** புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.

**iii)** புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் வெண்கலக் காலம் எனப்படுகிறது.

**iv)** விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.

அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iv) சரி

**4.** வரலாற்றின் தந்தை ..................... ஆவார்.

அ) ஹெரோடோடஸ் ஆ) ஹெர்குலிஸ்
இ) அரிஸ்டாடில் ஈ) சாக்ரடீஸ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. (4 × 1 = 4)**

1. மனிதர்கள் உருவாக்கிய அல்லது மாற்றியமைத்த ஒரு பொருள் அல்லது கருவி ............... எனப்படுகிறது
2. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் .................... எனப்படும்.
3. கைக்கோடரிக் கருவிகள் ........................ கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.
4. .................... என்பது ஒரு கல்லின் முதன்மப் பாளம் ஆகும்.

**III. பொருத்துக. (4 × 1 = 4)**

| | | |
|---|---|---|
| 1. கோடரிக்கருவிகள் | - | (அ) சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 2. செம்மணல் மேடுகள் | - | (ஆ) பொ.ஆ.மு. 530 |
| 3. பாலூட்டிகளின் காலம் | - | (இ) டெரிஸ் |
| 4. என்னிகால்டி – நன்னா அருங்காட்சியகம் | - | (ஈ) அச்சூலியன் |

**IV. சுருக்கமாக விடையளி. (2 × 2 = 4)**

1. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.
2. தொல்லியல் அகழாய்வு என்றால் என்ன?

**V. தலைப்பின் கீழ் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி (4 × 1 = 4)**

1. ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்

அ) ஹோமினிட் என்போர் யாவர்?

ஆ) ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?

இ) நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?

ஈ) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறு.ளள

**VI. விரிவான விடையளி (1 × 5 = 5)**

1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் – உறுதிப்படுத்தவும்.



## விடைகள்

**I.** 1. ஆ) சிம்பன்ஸி
2. ஆ) அசோகர்
3. அ) (i) சரி
4. அ) ஹெறரோடோடஸ்

**II.** 1. செய்பொருள்
2. இடைக் கற்காலம்
3. அச்சூலியன
4. கருக்கல்

**III.** 1. – (ஈ), 2. – இ, 3.– அ, 4. – ஆ

**IV.** 1. பார்க்க, வினா எண் IV - 2
2. பார்க்க, கூடுதல் வினா எண் IV - 2

**V.** 1. பார்க்க, வினா எண் VI - 1
2. பார்க்க, வினா எண் VI - 5

**VI.** 1. பார்க்க, வினா எண் VII - 1

✶ ✶ ✶

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# இயல் 2

# பண்டைய நாகரிகங்கள்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

**1. சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை .................... என்கிறோம்.**

அ) லோகோகிராபி ஆ) பிக்டோகிராபி இ) ஐடியாகிராபி ஈ) ஸ்ட்ராட்டிகிராபி

**[விடை: ஆ) பிக்டோகிராபி]**

**2. எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை .................... .**

அ) சர்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ்

இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுள்களை வணங்குதல்

**[விடை: இ) மம்மியாக்கம்]**

**3. சுமேரியர்களின் எழுத்துமுறை .................... ஆகும்.**

அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக் இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்

**[விடை: ஈ) க்யூனிபார்ம்]**

**4. ஹரப்பா மக்கள் .................... பற்றி அறிந்திருக்கவில்லை.**

அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு

இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்

**[விடை: ஆ) குதிரை மற்றும் இரும்பு]**

**5. சிந்துவெளி மக்கள் 'லாஸ்ட் வேக்ஸ்' முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை .................... ஆகும்.**

அ) ஜாடி ஆ) மதகுரு அல்லது அரசன்

இ) பறவை ஈ) நடனமாடும் பெண்

**[விடை: ஈ) நடனமாடும் பெண்]**

**6. (i) மெசபடோமியாவின் மிகப் பழமையான நாகரிகம் அக்காடியர்களுடைய நாகரிகம் ஆகும்.**
**(ii) சீனர்கள் ஹைரோகிளிபிக் முறையை வளர்த்தெடுத்தார்கள்.**
**(iii) யூப்ரடிஸ், டைகிரிஸ் ஆகிய ஆறுகள் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.**
**(iv) பாபிலோனிய அரசரான ஹமுராபி பெரும் சட்ட வல்லுனர் ஆவார்.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (iii) சரி ஈ) (iv) சரி

**[விடை: ஈ) (iv) சரி]**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

7. **(i) யாங்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.**
**(ii) வு-டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்.**
**(iii) சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்.**
**(iv) தாவோயிசத்தை நிறுவியவர் மீனியஸ் என்று சீன மரபு கூறுகிறது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **[விடை: இ) (iii) சரி]**

8. **பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான காலவரிசை எது?**
அ) சுமேரியர்கள் – அஸிரியர்கள்– அக்காடியர்கள்– பாபிலோனியர்கள்
ஆ) பாபிலோனியர்கள்– சுமேரியர்கள் – அஸிரியர்கள்– அக்காடியர்கள்
இ) சுமேரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள்– அஸிரியர்கள்
ஈ) பாபிலோனியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள்– சுமேரியர்கள்
**[விடை: இ) சுமேரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள்– அஸிரியர்கள்]**

9. கூற்று : **மெஸபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.**
காரணம் : **அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.**
அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.
**[விடை: அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது]**



## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. .................... என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும். **[விடை: ஸ்பிங்க்ஸ்]**
2. எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை .................... ஆகும். **[விடை: ஹைரோகிளிபிக்ஸ்]**
3. .................... என்பது பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களை விளக்கிக்கூறும் பண்டைய பாபிலோனியாவின் ஒரு முக்கியமான ஆவணம் ஆகும். **[விடை: ஹமுராபியின் சட்டத் தொகுப்பு]**
4. சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் .................... ஆவார். **[விடை: லாவோட்சு]**
5. ஹரப்பா நாகரிகம் நிலவிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மீதுள்ள .................... உருவங்களும் ஓவியங்களும் அவர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன. **[விடை: சுடுமண்ணாலான]**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:

1. **அ] ஹரப்பாவில் உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.**
**ஆ] க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை.**
**இ] சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்களும், செம்பில் செய்யப்பட்ட நடனமாடும் பெண் உருவமும் எகிப்தியர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.**
**ஈ] மெசபடோமியர்கள் சூரிய நாள்காட்டி முறையை வகுத்தார்கள்.**

விடை: அ) தவறு. **மொஹஞ்சதாரோவில்** உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.
ஆ) சரி.
இ) தவறு. சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்களும், **வெண்கலத்தால்** செய்யப்பட்ட நடனமாடும் பெண் உருவமும் **ஹரப்பா மக்களின்** கலைத்திறனை உணர்த்துகின்றன.
ஈ) தவறு. மெசபடோமியர்கள் **சந்திர** நாள்காட்டி முறையை வகுத்தார்கள்

**2.** **அ) பழங்கால எகிப்தில் அமோன் கடவுளின் அரசனாகக் கருதப்பட்டார்.**
**ஆ) அரண்களால் சூழ்ந்த ஹரப்பா நகரத்தில் கோயில்கள் இருந்தன.**
**இ) பெரிய ஸ்பிங்ஸ் என்பது பழங்கால மெசபடோமியாவில் உள்ள பிரமிடு வடிவ நினைவுச்சின்னமாகும்.**
**ஈ) பானை வனைவதற்கான சக்கரத்தைக் கண்டுபிடித்த பெருமை எகிப்தியர்களைச் சாரும்.**

**விடை:** அ) சரி.

ஆ) தவறு, அரண்களால் சூழ்ந்த **சுமேரிய** நகரத்தில் கோயில்கள் இருந்தன.

இ) தவறு. பெரிய ஸ்பிங்ஸ் என்பது பழங்கால **எகிப்தில்** உள்ள பிரமிடு வடிவ நினைவுச் சின்னமாகும்.

ஈ) தவறு. பானை வனைவதற்கான சக்கரத்தைக் கண்டுபிடித்த பெருமை **சுமேரியர்களைச்** சாரும்.

## IV. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரோ | – (i) | ஒருவகைப் புல் |
| 2. | பாப்பிரஸ் | – (ii) | பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம் |
| 3. | பெரும் சட்ட வல்லுனர் | – (iii) | மொகஞ்சதாரோ |
| 4. | கில்காமெஷ் | – (iv) | ஹமுராபி |
| 5. | பெருங்குளம் | – (v) | எகிப்திய அரசர் |

**விடை:** 1.- (v), 2.- (i), 3. - (iv), 4. -(ii), 5.- (iii)

## V. சுருக்கமான விடை தருக:

**1. எகிப்தியர்கள் கலை கட்டடக்கலையில் திறன் பெற்றவர்கள் - விளக்குக.**

**விடை:** (i) எகிப்தியர், கட்டடக் கலையிலும் பல்வேறு கலை வண்ணங்களிலும் சிறப்பு உடையவர்கள்.

(ii) எகிப்தில் காணப்படும் எண்ணற்ற சிற்பங்கள் ஓவியங்கள், படைப்புகள், எகிப்தியர்களின் கலை ஆற்றலுக்கு சான்றாகும்.

**பிரமிடு:**

(i) பாரோக்களின் சமாதிகளாகக் கட்டப்பட்ட பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்கள் பிரமிடுகள் ஆகும்.

(ii) கெய்ரோவிற்கு அருகில் உள்ள பிரமிடுகள், கிஸா பிரமிடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

**ஸ்பிங்கஸ்:**

(i) உலகின் உயரமான சிற்பங்களில் ஒன்று ஸ்பிங்கஸ் இவற்றின் பிரம்மாண்டமான சிலை சிங்க உடலும் மனித முகமும் கொண்ட சுண்ணாம்புக்கல் படிமம்.

**2. சிகுராட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.**

**விடை:** **சிகுராட்களின் முக்கிய பண்புகள் :**

(i) சிகுராட் என்பது பண்டைய மெஸபடோமியாவில் (தற்போதைய ஈராக்) காணப்படும் பிரமிட் வடிவ நினைவிடங்கள் ஆகும்.

(ii) நகரின் மையத்தில் மேடை மீது சீகுராட் எனப்படும் கோயில்கள் கட்டப்பட்டன.

(iii) அவை செங்குத்தான பிரமிடுகள் போல் காட்சியளித்தன.

(iv) உச்சிக்கு செல்வதற்க்கு படிக்கட்டுகள் உள்ளன.

(v) கோவிலைச் சுற்றி சடங்குகளுக்கான தாழ்வாரங்கள் புனித இடங்கள், ஆண் மற்றும் பெண் மதகுருமார்களின் கல்லறைகள், சடங்குகளுக்கான விருந்து அரங்குகள், தொழிற் கூடங்கள், களஞ்சியங்கள், கிடங்குகள், நிர்வாகக் கட்டிடங்கள் அடங்கிய வளாகங்கள் இருந்தன.

**3. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் - விவரி.**

**விடை:** **ஹமுராபியின் சட்டத் தொகுப்பு.**

(i) பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களைக் கூறும் ஒரு முக்கியமான சட்ட ஆவணம் ஹமுராபியின் சட்டத் தொகுப்பு ஆகும்.

(ii) குடும்ப உரிமைகள், வணிகம், அடிமை முறை, வரிகள், கூலி போன்ற பல்வேறு குறிப்பிட்ட வழக்குகள் குறித்து இதில் 282 பிரிவுகள் உள்ளன.

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


(iii) இது பழைய சட்டங்களின் தொகுப்பாகும்.
(iv) இது பழிக்குப் பழி வாங்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.
(v) ‘‘கண்ணுக்குக் கண்’’, ‘‘பல்லுக்குப் பல்’’ என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது.

## VI. தலைப்பு வினாக்கள்:
**ஒவ்வொரு தலைப்பின் கீழேயும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**1. தொடக்க கால நாகரிகம்**
**அ] நாகரிகம் என்றால் என்ன?**
**ஆ] தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக.**
**இ] பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை எவை?**
**ஈ] நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கியபோது என்ன நடந்தது?**

விடை: அ) நாகரிகம் என்பது ஒரு முன்னேறிய, முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்று கருதப்படுகிறது.
ஆ) தொடக்க கால நாகரிகங்கள் – எகிப்திய, மெசபடோமிய, சிந்துவெளி மற்றும் சீன நாகரிகம் ஆகும்.
இ) பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை விவசாயம் மற்றும் வேட்டையாடுதல் ஆகும்.
ஈ) நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கியதும் மிகப்பெரிய கட்டங்களை எழுப்பினர். எழுத்துக் கலையை உருவாக்கினர். அறிவியலும், தொழில் நுட்பமும் சமூக மேம்பாட்டிற்குப் பங்காற்றின.

**2. எகிப்திய நாகரிகத்தின் பண்புகள்**
**அ] எகிப்து ‘நைல் நதியின் கொடை’ என்று அழைக்கப்படுவது ஏன்?**
**ஆ] பாரோ மற்றும் விசியர்கள் என்போர் யார்?**
**இ] பிரமிடுகள் என்றால் என்ன? அதனை ஏன் கட்டினார்கள்?**
**ஈ] மம்மி உருவாக்க முறையைக் கூறு.**



விடை: அ) எகிப்திய நாகரிகம் நைல் நதியின் செழிப்பை நம்பி இருந்தது. அதனால் கிரேக்க வரலாற்றாளர் ஹெரோடோஸ் எகிப்தை "நைல் நதியின் நன்கொடை" என்று குறிப்பிட்டார்.
ஆ) எகிப்திய அரசர் பாரோ என்று அழைக்கப்பட்டார். பாரோவின் கீழ் மாகாணங்களை ஆளும் நிர்வாகி விசியர்கள் என்று அழைக்கப்பட்டார்
இ) பாரோக்களின் சமாதிகளாகக் கட்டப்பட்ட பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்கள் பிரமிடுகள் ஆகும். பாரோக்களின் உடலைப் பாதுகாக்க பிரமிடுகளை கட்டினார்கள்.
ஈ) இறந்தவர்களின் உடல்களை சோடியம் கார்பனேட், சோடியம் பைகார்பனேட் ஆகியவற்றின் கலவையான நாட்ரன் உப்பை வைத்துப் பாதுகாக்கும் வழக்கம் எகிப்தியரிடையே இருந்தது. நாற்பது நாட்களுக்கு பிறகு உப்பு உடலின் ஈரப்பதம் அனைத்தையும் உறிஞ்சிய பிறகு, உடலை மரத்தூளால் நிரப்பி, லினன் துண்டுகளால் சுற்றி, துணியால் மூடி வைத்து விடுவார்கள். உடலை சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள்.

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. ஹைரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் - இவற்றை அவற்றின் முக்கியமான கூறுகளுடன் விளக்கு.**

விடை: அ) **ஹைரோகிளிபிக்ஸ்:**
(i) எகிப்தியர்கள் தமது எழுத்து முறைக்காகப் புகழ்பெற்றவர்கள் இவர்களது எழுத்து ஹைரோகிளிபிக் என்று அழைக்கப்படுகிறது.
(ii) இந்த எழுத்து வகை நினைவுச்சின்னங்களில் உள்ள முத்திரை மற்றும் இதர பொருட்களில் பயன்படுத்தப்பட்டது.
(iii) பொதுவான தகவல் தொடர்புக்கு ஹெரிடிக் எழுத்து பயன்படுத்தப்பட்டது. இது பிக்டோகிராம் எனப்படும் சித்திர எழுத்து வடிவமாகும்.
(iv) இது சுமார் பொ.ஆ.மு. 3000ல் உருவாக்கப்பட்டது. இந்த எழுத்தைப் பயன்படுத்தி ஏராளமான புத்தகங்களும் பிரதிகளும் எழுதப்பட்டன.
(v) ஹைரோகிளிபிக்ஸ், டிமோடிக், கிரேக்க மொழிகளில் எழுதப்பட்ட ரோசெட்டாகல்வெட்டு நெப்போலியனால் பிரான்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**ஆ) க்யூனிபார்ம்:**

(i) சுமேரிய எழுத்து முறை கியூனிபார்ம் என்று அழைக்கப்படுகிறது.
(ii) எழுத்துகள் ஆப்பு வடிவில் இருப்பதால், இப்பெயர் இடப்பட்டது.
(iii) பொ.ஆ.மு.3000 காலகட்டத்தில் உருவான இம்முறை, உலகின் பழமையான எழுத்து முறைகளில் ஒன்றாகும்.
(iv) 'கில்காமெஷ்' என்ற காவியம் இந்த எழுத்து வடிவில்தான் எழுதப்பட்டுள்ளது.
(v) வணிகப் பரிமாற்றங்களுக்கும், கடிதங்கள், கதைகள் எழுதுவதற்கும் இந்த எழுத்து முறையைச் சுமேரியர்கள் பயன்படுத்தினார்கள்.
(vi) இந்த எழுத்துகள் எழுதப்பட்ட சுட்ட களிமன் பலகைகள் சுமேரிய நாகரிகம் பற்றி ஏராளமான தகவல்களைத் தருகின்றன.

**2. தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு.**

விடை: **தத்துவமும், இலக்கியமும்:**

(i) லாவோ ட் சு, கன்பூசியஸ், மென்சியஸ், மோடி தாவோ சின் போன்ற தத்துவ ஞானிகளும், சீனக் கவிஞர்களும் சீன நாகரிகத்திற்கு ஏராளமாகப் பங்களித்துள்ளார்கள்.
(ii) இராணுவ உத்தியாளரான சன் ட்சு 'போர்க் கலை' என்ற நூலை எழுதினார்.
(iii) 'தி ஸ்பிரிங் அண்ட் ஆடோம் அனல்ஸ்' (வசந்தகால, இலையுதிர்கால ஆண்டு குறிப்புகள்) என்ற நூல் அதிகாரபூர்வ சீன அரசு நூலாக அங்கீகரிக்கப்பட்டது.
(iv) மஞ்சள் பேரரசரின் 'கேனன்ஸ் ஆஃப் மெடிசின்' (மருத்துவக் குறிப்புத் தொகுப்புகள்) என்ற நூல் சீனாவின் பழமையான மருத்துவ நூலாகக் கருதப்படுகிறது. அது ஹான் வம்ச காலத்தில் முறைப்படுத்தப்பட்டது.
(v) லாவோ ட் சு (பொ.ஆ.மு. 604 – 521) சௌ அரசின் தலைமை ஆவணக் காப்பாளராக இருந்தார். இவர்தான் தாவோயிசத்தைத் தோற்றுவித்தார். 'ஆசைதான அத்தனை துன்பங்களுக்கும் மூலகாரணம்' என்று இவர் வாதிட்டார்.
(vi) கன்பூசியஸ் (பொ.ஆ.மு – 551 – 497) ஒரு புகழ்பெற்ற சீன தத்துவ ஞானி. அவர் ஒரு அரசியல் சீர்திருத்தவாதி. அவர் ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையை சீர்திருத்துவதை வலியுறுத்தினார்.
(vii) மென்சியஸ் (பொ. ஆ.மு. – 372 – 289) மற்றொரு புகழ்பெற்ற சீன தத்துவஞானி யாவார். அவர் சீனா முழுவதும் பயணம் செய்து ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறினார்.

**3. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக?**

விடை: ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படும் சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் சுமார் 1.3 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் பரவியிருந்தது.

**திட்டமிடப்பட்ட நகரங்கள் :**

(i) ஹரப்பா நகரங்களில் மதில் சுவர்கள், நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன. ஹரப்பா மக்கள் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.
(ii) மொஹஞ்சதாரோவில் உள்ள மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும். இக்குளத்தின் அருகே நன்கு தளமிடப்பட்ட பல அறைகளும் உள்ளன.

**வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் :**

(i) ஹரப்பா மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர். அவர்கள் கோதுமை, பார்லி மற்றும் பலவிதமான தினை வகைகளைப் பயிரிட்டார்கள்.
(ii) இரட்டைச் சாகுபடி முறையையும் அவர்கள் கடைப்பிடித்தார்கள்.
(iii) ஹரப்பாவின் மாடுகள் ஜெபு என்றழைக்கப்படும். இது ஒரு பெரிய வகை மாட்டின் இனம்.

**மட்பாண்டக் கலை :**

(i) ஹரப்பா மக்கள் ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள்.

(ii) பீடம் வைத்த தட்டு, தானியம் போன்றவற்றைச் சேமித்து வைப்பதற்கான ஜாடிகள், துளையிடப்பட்ட ஜாடிகள், கோப்பைகள், `S' வடிவ ஜாடிகள், தட்டுகள், சிறுதட்டுகள், கிண்ணங்கள், பானைகள் என்று பலவிதமான மட்பாண்டங்களைச் செய்தார்கள்.

(iii) அவர்கள் மட்பாண்டங்களில் சித்திரங்களைத் தீட்டினார்கள்.

**உலோகக் கருவிகளும் ஆயுதங்களும் :**

(i) ஹரப்பா பண்பாட்டு மக்கள் செர்ட் என்ற சிலிகா கல் வகையில் செய்த பிளேடுகள், கத்திகள், செம்புப் பொருட்கள், எலும்பாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள்.

(ii) மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள நடனமாடும் பெண்ணின் சிலை, அவர்களுக்கு மெழுகு அச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றி சிலை வார்க்கும் 'லாஸ்ட் வேக்ஸ்' தொழில் நுட்பம் (lost - wax process) தெரிந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

**ஆடை, அணிகலன்கள் :**

(i) ஹரப்பா பண்பாட்டு மக்கள் பருத்தி மற்றும் பட்டு பற்றி அறிந்திருந்தார்கள்.

(ii) உலோகத்தாலும் கல்லாலுமான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள்.

(iii) செம்பு மற்றும் தங்கத்தாலான அணிகலன்களைச் செய்தார்கள்.

(iv) கல் அணிகலன்களையும் சங்கு வளையல்களையும் செய்தார்கள்.

**வணிகமும் பரிமாற்றமும் :**

(i) கியூனிபார்ம் ஆவணங்கள் மெசபடோமியாவிற்கும், ஹரப்பர்களுக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பை வெளிபடுத்துகின்றன.

(ii) கியூனிபார்ம் எழுத்துகளில் காணப்படும் மெலுஹா என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்.

**எடைகளும் அளவுகளும் :**

(i) ஹரப்பா மக்கள் முறையான எடைகளையும் அளவுகளையும் பயன்படுத்தினார்கள்.

(ii) வணிகப் பரிமாற்றங்களில் ஈடுபட்ட காரணத்தால் அவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட அளவுகள் தேவையாக இருந்தது.

**முத்திரைகள், எழுத்துருக்கள் :**

(i) ஹரப்பா பண்பாட்டுப் பகுதிகளில் நுரைக்கல், செம்பு, சுடுமண் தந்தம் ஆகியவற்றால் செய்யப்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன.

**கலைகள், பொழுதுபோக்குகள் :**

(i) ஹரப்பா பகுதிகளில் கிடைத்துள்ள சுடுமண்ணாலான சிறுசிலைகள், மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்கள், வெண்கலச் சிலைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் கலைத் திறமையைக் காட்டுகின்றன.

(ii) பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், பம்பரங்கள், கோலிக்குண்டுகள், பல்வேறு விளையாட்டிற்கான சுடுமண் சில்லுகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விடையாட்டுகளைக் காட்டுகின்றன.

**மதம் :**

(i) சிந்துவெளி மக்கள் இயற்கையை வணங்கினார்கள்.

(ii) அரசமரத்தை வழிபட்டார்கள். சில சுட்ட களிமண் சிலைகள் பெண் தெய்வத்தைக் குறிப்பது போன்று உள்ளன.

**சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி :**

பருவநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி, நதியின் வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு, அந்நியர் படையெடுப்பு ஆகியவை இந்த நாகரிகம் வீழ்ச்சி பெறவும், மக்கள் தெற்கு மற்றும் கிழக்கு திசை நோக்கி இடம் பெயரவும் சில முக்கியமான காரணங்களாக அமைந்தன எனக் கருதப்படுகிறது.

(xiii) ஆங்கில அரசு வேளாண்மையை வணிகமயமாக்கும் கொள்கையைப் பின்பற்றியது.

(xiv) விவசாயி தன்னுடைய வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்ய பன்னாட்டுச் சந்தையின் விலை நிலவரங்களைச் சார்ந்திருக்க வேண்டிய இருந்தது. வேளாண் பொருள்களுக்கான தேவை வீழ்ச்சியுற்றபோது விவசாயிகள் துயரங்களுக்கு உள்ளாயினர்.

**2. ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம் ஏற்ப்பட்டதை விவரி.**

விடை: **ஆப்பிரிக்கா காலனியாதல் :**

(i) பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதிவரை சகாராவிற்குத் தெற்கேயிருந்த ஆப்பிரிக்கப் பகுதிகள் பெரும்பாலும் வெளியுலகத்தினரால் அறியப்படாமலே இருந்தன.

(ii) ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளும் ஆய்ந்தறியப்படாமலே இருந்தன.

(iii) 1875க்குப் பின்னர், ஐரோப்பியரின் ஊடுருவலும் குடியேற்றங்களை நிறுவுதலும் பெருமளவில் நடைபெறத் தொடங்கியது.

(iv) 1884–85இல் நடைபெற்ற பெர்லின் குடியேற்ற நாட்டு மாநாட்டில் ஆப்பிரிக்காவைப் பல ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிப்பதென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(v) இவ்வாறு முக்கியமான ஐரோப்பிய நாடுகளிடையே போர் ஏற்படாமல் ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனிகளை ஏற்படுத்துவது சுமுகமாக நடைபெற்றது.

(vi) 1881க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பிய சக்திகள் ஆப்பிரிக்காவின் மீது படையெடுத்து, கைப்பற்றிக் காலனிகளை ஏற்படுத்திய ஏகாதிபத்திய சகாப்தமானது ஆப்பிரிக்காவைப் பங்கிடுதல் அல்லது ஆப்பிரிக்கப் போட்டி என அழைக்கப்படுகிறது.

(vii) 1884–85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது.

(viii) மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது.

(ix) காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

(x) பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

## மாணவர்களுக்கான செயல்பாடுகள்

**1. இந்தியாவில் ஆங்கிலேயக் காலனியாதிக்கத்தின்போது பஞ்சங்களால் பாதிக்கப்பட்ட பல பகுதிகள் பற்றிய புகைப்படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்றைத் தயார் செய்யவும்.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

**2. இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலான கலாச்சார தொடர்புகள் பற்றி விவரிக்கவும்.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

## ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் ஒப்படைப்பு :

**1. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் நன்மைகள், தீமைகள் குறித்து வகுப்பறையில் ஒரு வாதத்தை நடத்த ஏற்பாடு செய்யவும்.**

விடை: **இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி :** இந்தியாவில் வணிகம் செய்ய வந்த கிழக்கிந்தியக் கம்பெனியினர் வியாபாரம் செய்யவும் குடியிருக்கவும் இந்திய மன்னர்களிடம் அனுமதி பெற்று, பின்னர் தங்களுடைய ஆளுமையைச் சிறிதுசிறிதாக விரிவுபடுத்தி காலனியாட்சியை ஏற்படுத்தினர். கம்பெனி ஆதிக்கத்தை ரத்துசெய்து, பின்னர் விக்டோரியா மகாராணி இந்தியாவின் பேரரசியாக முடிசூடிக்கொண்டதும் அவரது வாரிசுகள் படிப்படியாக பிரிட்டிஷ் இந்தியாவைத் தங்கள் ஆதிக்கத்துக்கு உட்படுத்தியதும்தான் காலனிய வரலாறு.

**ஆங்கிலேயர் ஆட்சியின் நன்மைகள் :**

(i) அஞ்சல், தந்தி சேவைகள் தொடங்கப்பட்டன.

(ii) ரயில்வே போக்குவரத்து துவக்கப்பட்டது.

(iii) சதி என்ற உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது.

www.Padasalai.Net
This is Only for Sample
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

**2. பர்மா**

**அ) ஆங்கிலேயர் பர்மாவை எவ்வாறு கைப்பற்றினர்?**

**ஆ) இந்தியாவின் ஒரு பகுதியாக பர்மா இருந்த காலகட்டம் எது?**

**இ) பர்மா யாரால் நிர்வகிக்கப்பட்டது?**

**ஈ) பர்மாவிலிருந்து பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் யாவை?**

விடை: அ) ஆங்கிலேயர் மூன்று போர்களைத் தொடுத்த பின்னர் பர்மாவைக் கைப்பற்றினர்.

ஆ) 1886 முதல் 1937 வரை இந்தியாவின் ஒரு பகுதியாக பர்மா இருந்தது.

இ) ஒரு துணை நிலை ஆளுநரால் பர்மா நிர்வகிக்கப்பட்டது.

ஈ) தேக்கு மற்றும் அரிசி.

## VII. விரிவான விடையளிக்கவும்

**1. பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்து விவரி.**

விடை: (i) காலனியரசின் சுதந்திர வணிகக் கொள்கையும் கடுமையான நிலவரி வசூல் முறையும் பஞ்சங்கள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன.

(ii) 1866-1867இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வாவாகும். இப்பஞ்சத்தில் அப்பகுதிவாழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்தனர்.

(iii) 1876-1878 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரும் பஞ்சம் (தமிழில் தாது வருடப் பஞ்சம் என அழைக்கப்பட்டது) தென்னிந்தியாவைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களையும் கைவினைஞர்களையும் இங்கிலாந்தின் ஏனைய குடியேற்றங்களுக்குக் குடிபெயர வைத்தது.

(iv) அங்கு அவர்கள் பெருந்தோட்டங்களில் ஒப்பந்தக் கூலிகளாய் வேலை செய்தனர்.

(v) இந்தியாவில் இப்பஞ்சம் ஒரு கோடியே மூன்று இலட்சம் மக்களின் உயிர்களைப் பலி கொண்டது.

(vi) சென்னை மாகாணத்தில் 1876-1878ஆம் ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னதாக வறட்சி நிலவியது.

(vii) எடுத்துக்காட்டாகச் சென்னை மாகாணத்தில் இப்பஞ்சத்தால் மிக மோசமான பாதிப்புக்குள்ளான கஞ்சம், விசாகப்பட்டினம் ஆகிய இரு மாவட்டங்களிலிருந்து இப்பஞ்சக்காலத்திலும் உணவு தானியங்கள் ஏற்றுமதி செய்வது தொடர்ந்து நடைபெற்றது.

(viii) பஞ்சத்தைத் தொடர்ந்து வழக்கம் போல் பிளேக் (இறந்துபோன எலிகளால் பரவும் கொள்ளை நோய்), நீர்க் கோப்புடன் கூடிய கடுமையான காய்ச்சல் போன்ற பல தொற்றுநோய்கள் பரவி ஏற்கெனவே பட்டினியால் பலவீனமடைந்த மக்களைத் தாக்கிக் கொன்றன.

(ix) பிரிட்டிஷ் அரசுக்கு முன், கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியில் 1770-ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் மிகப் பெருமளவில் ஒரு கோடி மக்களின் உயிரைக் குடித்தது.

(x) 1943-இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் 30 லட்சம் மக்களை பலி கொண்டது.

**2. ஒப்பந்தக் கூலி முறை பற்றி விவரி.**

விடை: (i) ஒப்பந்தக் கூலி முறையானது பெற்ற கடனுக்காக உழைப்பை நல்கும் ஒரு ஒப்பந்த முறையாகும்.

(ii) இதன் மூலம் 35 இலட்சம் இந்தியர்கள் பல ஆங்கிலேயக் குடியேற்றங்களுக்குப் பெரும் பண்ணைகளில் (பெரிதும் கரும்புத் தோட்டங்களில்) வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

(iii) இம்முறை 1843இல் இந்தியாவில் அடிமைமுறை ஒழிக்கப்பட்ட போது தொடங்கப்பட்டு, 1920 வரை நீடித்தது.

(iv) இதனால் பெரும் எண்ணிக்கையிலான இந்தியர்கள் புலம் பெயர்ந்து இந்தியப் பெருங்கடல் (ரீயூனியன், மொரீசியஸ்) முதலாக பசிபிக் பெருங்கடல் (பிஜித் தீவுகள்) வரை பரவி, இந்தோ-கரீபிய, இந்தோ-ஆப்பிரிக்க மக்கள் தொகை பெருகுவதற்குக் காரணமாயினர்.

(v) ஒப்பந்தக் கூலிமுறை என்பது தண்டனைக்குரிய ஓர் ஒப்பந்த முறையாகும்.

(vi) இவ்வொப்பந்தத்தின்படி ஒப்பந்தக் கூலியான ஒருவர் வேலை செய்ய மறுத்தாலோ, வேலைக்கு வராமல் போனாலோ, அவருடைய முதலாளியின் ஆணைகளுக்குப் பணிய மறுத்தாலோ பணியிடத்தில் காணப்படாவிட்டாலோ அவர் ஊதியம் மறுக்கப்படுதல் அல்லது சிறைத் தண்டனைகளுக்கு உள்ளாவார்.

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** (3 × 1 = 3)

1. பிரான்ஸிஸ் லைட் ...................... பற்றி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.
   அ) நறுமணத் தீவுகள் ஆ) ஜாவா தீவு
   இ) பினாங்குத் தீவு ஈ) மலாக்கா
2. இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக் கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர் ....................
   அ) போர்த்துகீசியர் ஆ) பிரஞ்சுக்காரர்
   இ) டேனிஷார் ஈ) டச்சுக்காரர்
3. 'வெள்ளையரின் சுமை' எனும் சொற்றொடர் குறிப்பது ..............
   அ) கல்வி புகட்டுவது
   ஆ) நாகரிகப்படுத்துவது
   இ) வெற்றிக்கான வழிகளைக் கூறுதல்
   ஈ) புதியதாக கண்டுபிடித்தல்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (2 × 1 = 2)

1. ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது ................ ஆகும்.
2. பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச்சட்டம் ............. நதியின் வடிநிலம் பொதுவானது என பிரகடனப்படுத்தியது.

**III. பொருத்துக.** (3 × 1 = 3)

1. வங்காளப் பஞ்சம் - (அ) பெல்ஜியம்
2. லியோபோல்டு - (ஆ) அம்பாய்னா படுகொலை
3. நறுமணத் தீவுகள் - (இ) 1770

**IV. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.** (2 × 1 = 2)

1. i) 1640 இல் பிரெஞ்சுக்காரர்கள் ஜாவாவையும் சுமத்ராவையும் கைப்பற்றினர்.
   ii) மலாக்காவைக் கைப்பற்றியதின் மூலம் ஆங்கிலக் குடியேற்றங்களைக் கைப்பற்றும் பணியை டச்சுக்காரர் தொடங்கினர்.
   iii) காங்கோ ஆற்றின் வடிநிலத் தீரத்தோடு தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் பேசித் தீர்ப்பதற்காகவே பெர்லின் மாநாடு கூடியது.
   iv) சுல்தான் ஜான்ஜிபாரின் பகுதிகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன.
   அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி
   இ) iii) சரி ஈ) iv) சரி
2. i) காலனியாதிக்கம் என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமை கொண்டு மேலாதிக்கம் செய்வதாகும்.
   ii) ஆங்கிலேயர், மலாக்காவின் மாபெரும் பன்னாட்டு வணிக வளாகத்தைக் கைப்பற்றினர்.
   iii) ஸ்டாம்போர்டு ராஃபில்ஸ் என்பவர் சிங்கப்பூரை ஆங்கிலேயரின் முக்கிய வணிக மையமாக உருவாக்கினார்.
   iv) பெரும்பாலான இந்தோனேசியர் மட்பாண்ட தொழிலாளர்களாக இருந்தனர்.
   அ) i) சரி ஆ) ii) சரி
   இ) i) மற்றும் iii) சரி ஈ) iv) சரி

**V. தலைப்பின் கீழ் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி** (4 × 1 = 4)

1. தென்னாப்பிரிக்கா
   அ) தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாடுகள் எவை?
   ஆ) டச்சுக்காரர் கைவசமிருந்த பகுதிகள் எவை?
   இ) கேப்காலனியின் பிரதம அமைச்சர் யார்?
   ஈ) போயர் போர்கள் எத்தனை ஆண்டுகள் நடைபெற்றன?

**VI. சுருக்கமாக விடையளி.** (3 × 2 = 6)

1. காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் - இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவும்.
2. தாயகக் கட்டணங்கள் (Home Charges) பற்றி விளக்கவும்.
3. ரயத்துவாரி முறை என்றால் என்ன?

**VII. விரிவான விடையளி** (1 × 5 = 5)

1. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்.

## விடைகள்

I. 1. இ பினாங்குத் தீவு
2. அ) போர்த்துகீசியர்
3. ஆ) நாகரிகப்படுத்துவது

II. 1. நிலவரி
2. காங்கோ

III. 1. - (இ), 2. - (அ), 3.- (ஆ)

IV. 1. இ iii) சரி
2. இ i) மற்றும் iii) சரி

V. 1. பார்க்க, வினா எண் VI - 2

VI. 1. பார்க்க, வினா எண் V - 1
2. பார்க்க, வினா எண் V - 5
3. பார்க்க, கூடுதல் வினா எண் V - 8

VII. 1. பார்க்க, வினா எண் VII - 1

✶✶✶

இயல் 11



புவியியல்

# அலகு 1

# நிலக்கோளம் - I
# புவி அகச்செயல்முறைகள்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. புவியின் திடமான தன்மைகொண்ட மேல்புற அடுக்கை .................... என்று அழைக்கின்றோம்.**

அ) கருவம் ஆ) கவசம் இ) புவி மேலோடு ஈ) உட்கரு

[விடை: இ) புவி மேலோடு]

**2. புவியினுள் உருகிய இரும்பைக் கொண்ட அடுக்கை .................... என்று அழைக்கின்றோம்.**

அ) கருவம் ஆ) வெளிக்கரு இ) கவசம் ஈ) மேலோடு

[விடை: ஆ) வெளிக்கரு]

**3. பாறைக்குழம்பு .................... காணப்படுகிறது.**

அ) புவிமேலோடு ஆ) கவசம்
இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

[விடை: ஆ) கவசம்]

**4. டையஸ்ட்ரோபிசம் .................... உடன் தொடர்புடையது.**

அ) எரிமலைகள் ஆ) புவிஅதிர்ச்சி
இ) புவித்தட்டு நகர்வு ஈ) மடிப்புகள் மற்றும் பிளவுகள்

[விடை: ஈ) மடிப்புகள் மற்றும் பிளவுகள்]

**5. புவித்தட்டுகளின் நகர்வு .................... ஆற்றலை வெளிப்படுத்துகிறது.**

அ) நீர் ஆற்றல் ஆ) வெப்ப ஆற்றல்
இ) அலையாற்றல் ஈ) ஓத ஆற்றல் [விடை: ஆ) வெப்ப ஆற்றல்]

**6. ஆதியில் கோண்டுவானா நிலப்பகுதி .................... நோக்கி நகர்ந்தது.**

அ) வடக்கு ஆ) தெற்கு இ) கிழக்கு ஈ) மேற்கு

[விடை: அ) வடக்கு]

**7. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன், இந்தியா .................... கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.**

அ) கோண்டுவானா ஆ) லொரேசியா இ) பாந்தலாசா ஈ) பாஞ்சியா

[விடை: அ) கோண்டுவானா]

**8. புவித்தட்டுகள் நகர்வதால் ஏற்படும் அழுத்தம் மற்றும் இறுக்கத்தின் காரணமாக ஏற்படும் விரிசல் .................... எனப்படும்.**

அ) மடிப்பு ஆ) பிளவு இ) மலை ஈ) புவிஅதிர்வு

[விடை: ஆ) பிளவு]

Padasalai www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**9.** **எரிமலை மேல்பகுதியில் கிண்ணம் போன்ற பள்ளமான அமைப்பினை .................... என்று அழைக்கின்றோம்.**

அ) எரிமலை வாய் ஆ) துவாரம்

இ) பாறைக்குழம்புத் தேக்கம் ஈ) எரிமலைக் கூம்பு

[விடை: அ) எரிமலை வாய்]

**10.** **புவி அதிர்வு உருவாகும் புள்ளி .................... என்று அழைக்கப்படுகிறது.**

அ) மேல்மையம் ஆ) கீழ்மையம்

இ) புவி அதிர்வு அலைகள் ஈ) புவி அதிர்வின் தீவிரம்

[விடை: ஆ) கீழ்மையம்]

## II. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | உட்புறச்செயல்கள் | (i) | நில அதிர்வு அளவைப்படம் |
| ஆ) | கவசம் | (ii) | புவித்தட்டு அமிழ்தல் |
| இ) | இணையும் எல்லை | (iii) | எரிமலை வெடிப்பு |
| ஈ) | புவிஅதிர்ச்சி | (iv) | பசிபிக் பெருங்கடல் |
| உ) | கூட்டு எரிமலை | (v) | சிமா |

[விடை: அ) - iii, ஆ) - v, இ) - ii, ஈ) - i, உ) - iv]

## III. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

**1.** **(i) ஃபியூஜி மலை ஒரு உறங்கும் எரிமலையாகும்.**
**(ii) கிளிமஞ்சாரோ மலை ஒரு உறங்கும் எரிமலையாகும்.**
**(iii) தான்சானியா ஒரு உறங்கும் எரிமலையாகும்.**

அ) (i) உண்மையானது ஆ) (ii) உண்மையானது

இ) (iii) உண்மையானது ஈ) (i), (ii) மற்றும் (iii) உண்மையானது

[விடை: அ) (i) உண்மையானது]

**2.** **கூற்று : பாறைக்குழம்பு துவாரம் வழியாக வெளியேறும்.**
**காரணம் : புவியின் உட்பகுதி அழுத்தப்பட்ட பாறைக் குழம்பினைக் கொண்டிருக்கும்.**

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

[விடை: அ) கூற்று, காரணம் இரண்டும் சரி]

**3.** **கூற்று I : புவித்தட்டுகள் ஒன்றோடொன்று மோதுவதால் மலைத் தொடர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.**
**கூற்று II : கவசத்தின் வெப்பத்தின் காரணமாக புவித்தட்டுகள் நகருகின்றன.**

அ) கூற்று I தவறு II சரி ஆ) கூற்று I மற்றும் II தவறு

இ) கூற்று I சரி II தவறு ஈ) கூற்று I மற்றும் II சரி

[விடை: ஈ) கூற்று I மற்றும் II சரி]

## IV சுருக்கமான விடையளி:

**1.** **புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

விடை: **புவியின் நான்கு கோளங்கள்:**

(i) புவியின் திடமான மேற்பரப்பு பாறைக்கோளம்.

(ii) புவியைச் சூழந்துள்ள வாயுக்களால் ஆன மெல்லிய அடுக்கு வாயுக்கோளம்.

(iii) புவியின் மேற்பரப்பிலுள்ள பெருங்கடல்கள், ஆறுகள், ஏரிகள் மற்றும் நீராவி போன்றவற்றால் ஆன நீர்ப்பகுதி நீர்க்கோளம் ஆகும்.

(iv) உயிரினங்கள் வாழும் அடுக்கு உயிர்க்கோளம்.

**2.** **புவியின் உள் அடுக்குகள் யாவை?**

விடை: **புவியின் உள் அடுக்குகள்:**

(i) மேலோடு (ii) கவசம் (iii) கருவம்

**3. புவித்தட்டுகள் - வரையறு.**

**விடை:** (i) பாறைக்கோளம் பல புவித்தட்டுகளாய் பிரிக்கப்பட்டுள்ளன.

(ii) புவித்தட்டுகள் முதன்மை புவித்தட்டுகள் மற்றும் சிறிய புவித்தட்டுகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன. இப்புவித்தட்டுகள் கவசத்தின் மீது மிதந்து கொண்டிருக்கின்றன.

**4. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?**

**விடை:** (i) ஆழிப் பேரலைகள் என்பது கடலில் தோன்றும் பெரிய அலைகள் ஆகும்.

(iii) இவை கடலடியில் தோன்றும் புவி அதிர்ச்சி, எரிமலைச் செயல்பாடு மற்றும் கடலோரப் பகுதிகளில் நடைபெறும் மிகப் பெரிய நிலச்சரிவுகள் உருவாகும். சுனாமி என்பது ஜப்பானிய சொல் ஆகும்.

**5. எரிமலை என்றால் என்ன? அவற்றின் கூறுகள் யாவை?**

**விடை:** புவியின் உட்பகுதியில் திட, திரவ, வாயு நிலையில் உள்ள பாறைக்குழம்பு துவாரம் வழியாக புவியின் மேற்பரப்பில் உமிழ்தலே எரிமலை வெடிப்பு எனப்படுகிறது.

எரிமலைகள் காணப்படும் கூறுகள்.

(i) பாறைக்குழம்புத் தேக்கம் (Magma Chamber)

(ii) துவாரங்கள் (Vents)

(iii) எரிமலைக் கூம்புகள் (Volcanic Cone)

(iv) எரிமலை வாய் (Crater)

**6. புவி அதிர்ச்சி என்றால் என்ன? அவை எவ்வாறு உருவாகின்றன?**

**விடை:** (i) புவி அதிர்ச்சி என்பது புவி ஓட்டில் திடீரென ஏற்படும் அதிர்வைக் குறிக்கின்றது.

(ii) புவி அதிர்வலைகள் கீழ் மையத்திலிருந்து எல்லா திசைகளிலும் பரவிச்செல்கின்றன.

(iii) புவிக்குள் புவி அதிர்வு உருவாகும் புள்ளி புவி அதிர்ச்சி கீழ்மையம் (Focus) எனப்படும். இவ்வகைகள் தன்னைச்சுற்றி துணை அலைகளை உருவாக்குகின்றன.

(iv) புவியின் மேற்பரப்பில் அமைந்துள்ள மையத்திற்கு மேல்மையம் (Epicentre) என்று பெயர். புவி அதிர்ச்சியின் தாக்கம் புவியின் மேல் மையத்தில் தான் அதிகமாகக் காணப்படும்.

**7. புவி அதிர்வலைகள் என்றால் என்ன? அவற்றின் வகைகள் யாவை?**

**விடை:** புவிஅதிர்ச்சி, அதிர்வலைகளை உருவாக்குகின்றன. தான் ஊடுருவிச்செல்லும் பாதையைப் பொறுத்து இவ்வதிர்களின் தன்மை, விசை மற்றும் வேகம் மாறுபடும். புவி அதிர்வலைகள் மூன்று வகைப்படும். அவை,

(i) முதன்மை அலைகள் (Primary 'P' - Waves)

(ii) இரண்டாம் நிலை அலைகள் (Secondary or 'S' Waves)

(iii) மேற்பரப்பு அலைகள் (Surface Waves or 'L' Waves)

## V. பின்வரும் வினாக்களுக்கு காரணம் கண்டறிக:

**1. புவி மேலோடு, கவசத்தின் மீது மிதக்கின்றது.**

**விடை:** புவி மேலோட்டில் (SIAC) எனப்படும் சிலிகன் மற்றும் அலுமினியத்தின் அடர்த்தி கவசத்தில் உள்ள (SIMA) சில்கா மற்றும் மக்னீசியம் அடத்தியைவிட குறைவாக இருப்பதால் புவி மேலோடு கவசத்தின் மீது மிதக்கின்றது.

**2. தீப்பாறைகளை முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.**

**விடை:** தீப்பாறைகள் முதன்மைப் பாறைகள் மற்றும் தாய்ப்பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஏன் என்றால் மற்ற பாறைகள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இப்பாறைகளிலிருந்தே உருவாகின்றன.

## VI. வேறுபடுத்துக:

**1. கருவம் மற்றும் மேலோடு**

**விடை:**

| வ.எண் | கருவம் (core) | மேலோடு (crust) |
|---|---|---|
| (i) | புவியின் கவசத்திற்குக் கீழ் புவியின் மையத்தில் அமைந்துள்ள அடுக்கு கருவம் எனப்படும். | நாம் வாழும் புவியின் மேல் அடுக்கு புவி மேலோடு எனப்படும். |
| (ii) | இவ்வடுக்கு நைஃப் (NIFE) என்று அழைக்கப்படும். | இவ்வடுக்கு சியால் (SIAL) என்று அழைக்கப்படும். |
| (iii) | இதில் நிக்கலும் (NI) இரும்பும் (FE) அதிகம் காணப்படும். | இதில் சிலிகா (SI) மற்றும் அலுமினியம் (AI) அதிகம் காணப்படும். |

**2. மேல்மையம் மற்றும் கீழ்மையம்.**

**விடை:**

| மேல்மையம் | கீழ்மையம் |
|---|---|
| புவி அதிர்ச்சி கீழ்மையத்தின் நேர் உயரே புவியின் மேற்பரப்பில் அமைந்துள்ள மையம் மேல்மையம் எனப்படும். | புவிக்குள் புவி அதிர்வு உருவாகும் புள்ளி புவி அதிர்ச்சி கீழ்மையம் எனப்படும். |

**3. விலகும் எல்லை மற்றும் இணையும் எல்லை.**

**விடை:**

| விலகும் எல்லை | இணையும் எல்லை |
|---|---|
| புவித்தட்டுகள் ஒன்றை விட்டு ஒன்று விலகும் போது மேக்மா எனப்படும். பாறைக்குழம்பு புவிக் கவசத்திலிருந்து வெளியேற்றப்படுகிறது. | புவித்தட்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதும் போது சில நேரங்களில் கீழ் நோக்கு சொருகுதல் நிகழ்வு நடைபெறும். இப்பகுதியை புவித்தட்டுகள் அமிழ்தல் மண்டலம் எனப்படுகிறது. |

**4. முதன்மை அலைகள் மற்றும் இரண்டாம் நிலை அலைகள்.**

**விடை:**

| | முதன்மை அலைகள் | இரண்டாம் நிலை அலைகள் |
|---|---|---|
| (i) | முதன்மை அலைகள் திட, திரவ, வாயுப் பொருட்கள் வழியாக பயணிக்கும். | இரண்டாம் நிலை அலைகள் திடப்பொருள்கள் வழியாக மட்டுமே பயணிக்கும். |
| (ii) | இதன் சராசரி வேகம் வினாடிக்கு 5.6 கிலோ மீட்டர் முதல் 10.6 கிலோ மீட்டர் வரை வேறுபடும். | இதன் சராசரி வேகம் வினாடிக்கு 1 கிலோ மீட்டர் முதல் 8 கிலோ மீட்டர் வரை இருக்கும். |

**5. கவச எரிமலை மற்றும் கும்மட்ட எரிமலை.**

**விடை:**

| வ.எண் | கவச எரிமலை | கும்மட்ட எரிமலை |
|---|---|---|
| (i) | அதிக பிசுபிசுப்புடன் கூடிய பாறைக்குழம்பு அனைத்து திசைகளிலும் வழிந்தோடி கேடயம் போன்ற வடிவத்தில் மென்சரிவுடன் காணப்படும். | சிலிகா அதிகமுள்ள எரிமலைக் குழம்பு அதிகப் பிசுபிசுப்புடன் வெளியேறும். நீண்ட தூரத்திற்கு பரவ முடியாமல் எரிமலை வாய்க்கு அருகிலேயே வட்ட வடிவத்தில் படிந்து சிறு குன்று போலக் காணப்படும். |
| (ii) | எ.கா. – எரிமலை – ஹவாய்த் தீவு. | எ.கா. – பாரிக்கியூட்டின் எரிமலை – மெக்சிகோ |




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## VII. விரிவான விடையளி:

**1. புவி அமைப்பை விவரி.**

**விடை:** புவி அமைப்பு: புவியின் உள்ளமைப்பு மேலோடு, கவசம், கருவம் என மூன்று வகையாக பிரிக்கலாம்.

**1. புவிமேலோடு (Crust):**

(i) நாம் வாழும் புவியின் மேல் அடுக்கை புவிமேலோடு என்கிறோம்.

(ii) இது 5 முதல் 30 கி.மீ வரை பரவியுள்ளது.

(iii) புவிமேலோடு திடமாகவும், இறுக்கமாகவும் உள்ளது.

(iv) கடலடி தளத்தை (Ocean Floor) விட கண்டப் பகுதியில் உள்ள புவி மேலோடானது அதிக தடிமன் உடையது.

(v) புவிமேலோடு (1) கண்ட மேலோடு (2) கடலடி மேலோடு என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

(vi) புவிமேலோட்டில் சிலிகா (Si) மற்றும் அலுமினியம் (Ai) அதிகம் காணப்படுவதால் இவ்வடுக்கு சியால் (SIAL) என அழைக்கப்படுகிறது.

**2. கவசம் (MANTLE):**

(i) புவிமேலோட்டிற்கு கீழேயுள்ள பகுதி கவசம் எனப்படும்.

(ii) இதன் தடிமன் சுமார் 2900 கி.மீ.

(iii) இவ்வடுக்கில் சிலிகா (Si) மற்றும் மக்னீசியம் (Mg) அதிகமாகக் காணப்படுவதால் இவ்வடுக்கு சிமா ( SIMA ) என்று அழைக்கப்படுகிறது.

(iv) கவசத்தின் மேற்பகுதியில் உள்ள பாறைகள் திடமாகவும் கீழ்ப்பகுதி உருகியும் காணப்படும்.

(v) புவியின் உட்புறத்தில் உருகிய நிலையில் உள்ள பாறைக் குழம்பு 'மாக்மா' என்று அழைக்கப்படுகிறது.

**3) கருவம் ( CORE ):**

(i) புவியின் கவசத்திற்குக் கீழ் புவியின் மையத்தில் அமைந்துள்ள அடுக்கு கருவம் எனப்படுகிறது.

(ii) கருவத்தில் நிக்கலும் ( Ni ) இரும்பும் ( Fe ) அதிகமாகக் காணப்படுவதால் இவ்வடுக்கு நைஃப் (NIFE) என அழைக்கப்படுகிறது.

(iii) கருவம் இரண்டு அடுக்குகளை உடையது
உட்கருவம் – திடநிலையிலும்
வெளிகருவம் – திரவ நிலையிலும் உள்ளது.

(iv) புவியின் கருவத்தில் அதிகமாக இரும்பு காணப்படுவதே புவியீர்ப்பு விசைக்குக் காரணமாகும்.

(v) புவி தன் அச்சில் சுழலும்போது திட நிலையில் உள்ள உட்கருவத்தின் மேல், திரவ நிலையில் உள்ள வெளிக்கருவம் சுழலுவதால், காந்தபுலம் உருவாகியது.

(vi) காந்த திசைகாட்டும் கருவி செயல்பட இதுவே காரணமாகும்.

**2. புவியின் அகச்செயல் முறைகள் மற்றும் புறச்செயல் முறைகள் குறித்து எழுதுக.**

**விடை:** புவியின் மேற்பரப்பில் காணப்படும் நிலத்தோற்றங்களை உருவாக்குவதிலும், மறு உருவாக்கம் செய்வதிலும் இரண்டு முதன்மைச் செயல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அவை, அகச் செயல்முறைகள் மற்றும் புறச்செயல்முறைகள் ஆகும்.

**அ) அகச்செயல்முறைகள்:**

(i) புவியின் உட்பகுதியிலிருந்து புவியின் மேற்பரப்பை நோக்கிச் செயல்படும் விசைகளே 'அகச்செயல் முறைகள்' எனப்படுகின்றன.

(ii) இவ்விசைகள் புவியின் நிலப்பரப்பில் பல்வேறு நிலத்தோற்றங்களை உருவாக்குகின்றன.

(iii) புவியின் வெகு ஆழத்தில் உருவாகும் வெப்பத்தினால் புவிமேலோட்டின் கீழ் காணப்படும் பொருள்கள் வெளித்தள்ளப்படுகின்றன. இச்செயல்பாட்டில் புவியின் உள்ளே உள்ள கதிர்வீச்சு முக்கியப் பங்காற்றுகின்றது.

**ஆ) புவிப்புறச் செயல்முறைகள்**

(i) இச்செயல் முறைகள் புவியில் உள்ள பொருள்களின் மீது அழுத்தத்தையும், மறு உருவாக்கத்தையும் ஏற்படுத்தி புவிமேற்பரப்பில் உள்ள பொருள்களின் மீது மாற்றத்தை உண்டாக்குகின்றன. இவை 'புவிப்புறச் செயல்முறைகள்' எனப்படுகின்றன

(ii) புவியின் மேற்பரப்பில் செயல்படும் இயற்கைக் காரணிகளான ஆறுகள், பனியாறுகள், காற்று, அலைகள் போன்ற விசைகள் 'புவிப்புறச் செயல்முறை' காரணிகள் எனப்படுகின்றன. இக்காரணிகள் நிலத்தின் மேற்பரப்பினை அரித்து தாழ்நிலச் சமவெளிகளில் படிய வைத்து அவற்றை உயர்த்துகின்றன.

**3. எரிமலைகள் வெடிக்கும் காலக்கட்டத்தைப் பொறுத்து அதன் வகைகளை விவரி.**

விடை: எரிமலை செயல்படும் / வெடிக்கும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை,

அ) செயல்படும் எரிமலை ( Active Volcano )
ஆ உறங்கும் எரிமலை ( Dormart Volcano )
இ தணிந்த எரிமலை ( Extinot Volcano )

**அ) செயல்படும் எரிமலை:**

நிரந்தரமாக தொடர்ந்து எரிமலைக் குழம்புகளையும், துகள்களையும், வாயுக்களையும் வெளியேற்றிக் கொண்டே இருக்கும் எரிமலைகள் செயல்படும் எரிமலைகள் எனப்படுகின்றன (எ.கா) செயின்ட் ஹெலன்ஸ் எரிமலை – அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

**ஆ) உறங்கும் எரிமலை:**

(i) நீண்ட காலமாக எரிமலைச் செய்கைகள் ஏதும் இல்லாமல் காணப்படும் எரிமலைகள் உறங்கும் எரிமலைகள் எனப்படும்.
(ii) இவை திடீரென்று வெடிக்கும் தன்மையுடையது.
(iii) இவ்வாறான எரிமலைகள் வெடிக்கும் பொழுது அதிகமான உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. (எ.கா.) ஃபியூஜி எரிமலை – ஜப்பான்.

**இ) தணிந்த எரிமலை:**

எந்தவித எரிமலைச் செயல்பாடுகளுமின்றி காணப்படும் எரிமலைகள் தணிந்த எரிமலைகள் ஆகும். (எ.கா.) கிளிமஞ்சாரோ எரிமலை – தான்சானியா.

**4. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?**

விடை: **எரிமலையின் விளைவுகள்.**

**அ) நன்மைகள்:**

(i) எரிமலைகளிலிருந்து வெளிப்படும் பொருட்கள் மண்ணை வளமிக்கதாக்குகிறது.
(ii) அதனால் வேளாண் தொழில் மேம்படுகிறது.
(iii) எரிமலைகள் உள்ள பகுதிகள் புவி வெப்ப சக்தியை (Geothreniral energy) பயன்படுத்திக் கொள்ள உதவுகிறது.
(iv) உறங்கும் எரிமலையும், செயல்படும் எரிமலையும் உலகில் சிறந்த சுற்றுலாத் தளங்கள் ஆகும்.
(v) எரிமலைகளிலிருந்து வெளிவரும் பொருட்கள் கட்டிடத் தொழிலுக்குப் பயன்படுகிறது.

**ஆ) தீமைகள்:**

(i) எரிமலை வெடிப்பினால் புவி அதிர்ச்சி, திடீர் வெள்ளம், சேறு வழிதல் மற்றும் பாறை சரிதல் போன்றவை நிகழ்கின்றன.
(ii) வெகுதூரம் பயணிக்கும் பாறைக்குழம்பானது தன் பாதையில் உள்ள அனைத்தையும் எரித்தும், புதைத்தும் சேதப்படுத்துகிறது.
(iii) அதிக அளவில் வெளிப்படும் தூசு மற்றும் சாம்பல் நமக்கு எரிச்சலையும் மூச்சு விடுவதில் சிரமத்தையும் உண்டாக்குகிறது.
(iv) எரிமலை வெடிப்பு அதன் சுற்றுப்புறப் பகுதிகளின் வானிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் போக்குவரத்திற்கும் இடையூறை உண்டாக்குகின்றன.

## VIII நில வரைபடப் பயிற்சி

**1. உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்.**

அ) பசிபிக் நெருப்பு வளையம்
ஆ) புவி அதிர்ச்சி மண்டலம் (ஏதேனும் இரண்டு)
இ) செயல்படும் எரிமலைகள் இரண்டு
ஈ) இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைத்தொடர்கள்
உ) கிழக்கு ஆப்பிரிக்காவின் பிளவுப்பள்ளத்தாக்கு.

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores








## IX. உயர் சிந்தனை வினாக்கள்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் புவியின் உள்அமைப்போடு நேரடி தொடர்பு கொண்டுள்ளதா அல்லது மறைமுகத் தொடர்பு கொண்டுள்ளதா என்று வகைப்படுத்தி காரணம் கூறுக.

அ) புவிஅதிர்ச்சி நிகழ்வு

ஆ) எரிமலைகள்

இ) புவியின் காந்தப்புலம்

ஈ) புவி ஈர்ப்பு விசை

உ) தோண்டி எடுக்கப்பட்ட பாறைகள்

ஊ) எரிகற்கள்

**விடை:**

புவி உள் அமைப்பு

- நேரடி தொடர்பு
  - எரிமலைகள்
  - தோண்டி எடுக்கப்பட்ட பாறைகள்
- மறைமுக தொடர்பு
  - புவி அதிர்ச்சி நிகழ்வு
  - புவியின் காந்தப்புலம்
  - புவி ஈர்ப்பு விசை
  - எரிகற்கள்

**நேரடி தொடர்பு :**

**1. எரிமலைகள் :** புவியின் உட்பகுதியில் திட, திரவ வாயுநிலையில் உள்ள பாறைக்குழம்பு துவாரம் வழியாக புவியின் மேற்பரப்பில் உமிழ்தலே எரிமலை வெடிப்பு எனப்படுகிறது.



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**2. பாறைகள் :** புவியின் உள் ஆழத்தில் பாறைகள் உருகிய நிலையில் காணப்படுவதே பாறைக்குழம்பு எனப்படும். எரிமலைகள் மற்றும் பாறைகள் புவி உள் அமைப்போடு தொடர்புடையது.

**மறைமுகத் தொடர்பு :**

**புவி அதிர்ச்சி நிகழ்வு :** புவி அதிர்ச்சி என்பது புவி ஓட்டில் திடீரென ஏற்படும் அதிர்வைக் குறிக்கின்றது. புவி அதிர்ச்சியின் தாக்கம் புவியின் மேல் மையத்தில் தான் அதிகமாகக் காணப்படும்.

**புவியின் காந்தப் புலம் :** புவி தன் அச்சில் சுழலும் போது திடநிலையில் உள்ள உட்கருவத்தின் மேல் திரவ நிலையிலுள்ள வெளிக் கருவம் சுழலுவதால், காந்தப்புலம் உருவாகிறது. இது புவியின் உள் அமைப்பின் மறைமுக தொடர்புடையது.

**புவி ஈர்ப்பு விசை :** புவியின் கருவத்தில் அதிகமாக இரும்பு காணப்படுவதே புவியீர்ப்பு விசைக்குக் காரணமாகும்.

**எரிகற்கள் :** புவியிலிருந்து பெறப்படும் வானொலி அலைகள் இடையடுக்கிலிருந்து தான் புவிக்கு திருப்பி அனுப்பப்படுகின்றன. புவியை நோக்கி வரும் விண்கற்கள் இவ்வடுக்கில் நுழைந்ததும் எரிவிக்கப்படுகின்றன.

## X. வாழ்க்கைத் திறன்கள்

**உன் பகுதியில் புவி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாக கற்பனை செய்து கொள். இடர்பாட்டில் சிக்கியுள்ளவர்களை மீட்பதில் உன் பங்கு என்ன? புவிஅதிர்ச்சி ஏற்படும் போது செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவைகளை பட்டியலிடுக.**

விடை: **செய்யக் கூடியவை :**

(i) மேசையின் அடியில் தரையில் மண்டியிட்டு அமர்ந்து மேசையின் காலை ஒரு கையால் பிடித்துக் கொண்டு ஒரு கையால் தலையை மூடிக்கொள்ளவும்.

(ii) கண்ணாடி சன்னல், வெளிக்கதவுகள், சுவர் மற்றும் எளிதில் விழக்கூடிய தொங்கும் மின்விளக்குகள் மற்றும் மரச்சமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.

(iii) நிலநடுக்கம் முடியும் வரை உள்ளே பாதுகாப்பாக இருக்கவும். அதன்பிறகு வெளியேறுவது பாதுகாப்பானது.

**செய்யக் கூடாதவை :**

(i) கட்டடங்கள், வெளிப்புறச் சுவர்கள், கண்ணாடிப் பொருட்கள் போன்றவற்றின் அருகில் இருக்கக் கூடாது.

(ii) நீர் சூழ்ந்து உள்ள இடங்களில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

(iii) மின் கம்பிகள், மின் விளக்குகள் மற்றும் மரங்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.

### உள்பாடப்பகுதி சிந்தனை வினா

**நில அதிர்வுகளும் எரிமலை வெடிப்பும் மிக அதிக அளவில் பசிபிக் நெருப்பு வளையத்தில் ஏன் காணப்படுகின்றன?**

விடை: பசிபிக் நெருப்பு வளையம் என அழைக்கப்படும் பசிபிக் பகுதியானது அதிக எண்ணிக்கையிலான செயல்படும் எரிமலைகளைக் கொண்டுள்ளது. இங்கு எரிமலைப் பகுதியும் நிலநடுக்கப் பகுதியும் ஒருங்கிணைந்து காணப்படுகின்றது. எனவே பசிபிக் நெருப்பு வளையத்தில் நில அதிர்வுகளும் எரிமலை வெடிப்பும் மிக அதிக அளவில் காணப்படுகின்றன.

This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## உள்பாடப்பகுதி செயல்பாடு

**1.** **இங்கு சில மலைகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நிலவரைப்பட புத்தகத்தின் உதவியுடன் இவைகள் அமைந்துள்ள இடங்களைக் கண்டறிக.**
**யூரல் மலைகள், ஆண்டீஸ் மலைகள், விந்திய மலைத்தொடர், ஆல்ப்ஸ் மலைகள் , சாத்பூரா மலைத்தொடர், ராக்கி மலைத்தொடர், சீரா நிவேடா.**




## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1.** **மெக்னீசியம் மற்றும் சிலிகான் ஆக்ஸைடு பாறை வகை கொண்ட புவி உள்ளமைப்பு**
அ) மேல்கவசம் ஆ) கீழ் கவசம் இ) வெளிக்கருவம் ஈ) உட்கருவம்
**[விடை: ஆ) கீழ் கவசம்]**

**2.** **புவியோட்டின் கிடைமட்ட நகர்வினால் மேலெழும்பும் நிலத்தோற்றம் ...................... .**
அ) பாஞ்சியா ஆ) தீப்பாறைகள்
இ) மலையாக்கம் ஈ) படிவுப்பாறைகள் **[விடை: இ) மலையாக்கம்]**

**3.** **பாறைக்குழம்பானது புவியின் மேலோட்டில் வெளிப்படுவதே ...................... எனப்படுகிறது.**
அ) செடிமெண்ட் ஆ) பசால்ட் இ) ஃபால்ட்டிங் ஈ) லாவா
**[விடை: ஈ) லாவா]**

**4.** **கிளிமஞ்சாரோ எரிமலை காணப்படும் நாடு ...................... .**
அ) மெக்சிக்கோ ஆ) தான்சானியா இ) ஜப்பான் ஈ) தாய்லாந்து
(iv) **[விடை: ஆ) தான்சானியா]**

புவியியல்


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

5. ‘வல்கேன்’ (vulcan) என்ற சொல், ...................... நெருப்புக் கடவுளின் பெயராகும்.
அ) ரோமானிய ஆ) ஜப்பானிய இ) கிரேக்க ஈ) பிலிப்பைன்ஸ்
[விடை: அ) ரோமானிய]

6. சுனாமி அலைகள், சராசரியாக மணிக்கு ...................... கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும்.
அ) 50 ஆ) 100 இ) 300 ஈ) 500
[விடை: ஈ) 500]

7. பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட கட்டிடக்கலைச் சான்றுகளில் ஒன்றான பதாமி கோவில் உள்ள மாநிலம் ...................... .
அ) மஹாராஷ்டிரா ஆ) கர்நாடகா இ) ஒடிசா ஈ) குஜராத்
[விடை: ஆ) கர்நாடகா]

## II. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | செயல்படும் எரிமலை | - | (i) | பாரிக்கியூட்டின் எரிமலை, மெக்சிகோ |
| ஆ) | உறங்கும் எரிமலை | - | (ii) | மௌனலோவா எரிமலை, ஹவாய் தீவு |
| இ) | தணிந்த எரிமலை | - | (iii) | ஃபியூஜி எரிமலை, ஜப்பான் |
| ஈ) | கும்மட்ட எரிமலை | - | (iv) | கிளிமஞ்சாரோ எரிமலை, தான்சானியா |
| உ) | கேடய எரிமலை | - | (v) | செயிண்ட் ஹெலன்ஸ் எரிமலை, அமெரிக்கா |

[விடை: அ) - v, ஆ) - iii, இ) - iv, ஈ) - i, உ) - ii]

## III. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:



1. **கூற்று : 26 டிசம்பர் 2004 -இல் இந்தியப் பெருங்கடலில் ஆழிப்பேரலை உண்டானது.**
**காரணம் : இந்தோ-ஆஸ்திரேலியத் தட்டு யுரேசியத் தட்டின் கீழ் அமிழ்ந்தது.**
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
இ) கூற்று தவறு, காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு [விடை: அ) கூற்று, காரணம் இரண்டும் சரி.]

## IV சுருக்கமான விடையளி:

1. **மண்கோளம் என்றால் என்ன?**

விடை: (i) பாறைக்கோளத்தின் ஒரு பகுதி மண்கோளம் ஆகும்.

(ii) இது மண் மற்றும் தூசுக்களால் ஆனது. பாறைக்கோளம், வாயுக்கோளம், நீர்க்கோளம் மற்றும் உயிர்க்கோளம் சந்திக்குமிடத்தில் மண்கோளம் காணப்படுகிறது.

2. **‘மடிப்பு’ மற்றும் ‘பிளவு’ - சிறுகுறிப்பு வரைக.**

விடை: மடிப்பு: கிடைமட்ட அழுத்த விசையின் காரணமாக புவித்தட்டுகள் மேலும் கீழும் நகர்வதால் மடிப்புகள் உருவாகின்றன. பாறைகளில் ஏற்பட்ட மடிப்பின் காரணமாக உருவாகும் மலைகள் மடிப்பு மலைகள் எனப்படும். (எ.கா.) இமயமலை, ஆல்ப்ஸ் மலை.

பிளவு: புவித்தட்டுகளின் அசைவினால் பாறைகளின் மீது அழுத்தம் மற்றும் இறுக்கம் ஏற்பட்டு அவை விரிவடைகிறது. அதனால் பாறைகளில் விரிசல்கள் தோன்றுகின்றன. இப்பாறை விரிசல்கள் பிளவுகள் எனப்படும். (எ.கா.) கிழக்கு ஆப்பிக்காவில் உள்ள பிளவு பள்ளத்தாக்கு.

3. **பசிபிக் நெருப்பு வளையம் பற்றி எழுதுக.**

விடை: பசிபிக் பெருங்கடல் பகுதியில் பசிபிக் தட்டுடன் மற்ற கண்டத் தட்டுகள் இணையும் எல்லைகளில் எரிமலை வெடிப்பு அதிகமாக நிகழ்வதால் இப்பகுதி பசிபிக் நெருப்பு வளையம் (Pacific) என அழைக்கப்படுகிறது.

4. **பாறைக் கோளம் பற்றிய சிறு குறிப்பு வரைக.**

விடை: (i) ‘பாறைக்கோளம்’ மற்றும் ‘புவிமேலோடு’ ஆகிய இரண்டும் வெவ்வேறானவை ஆகும். புவி மேலோட்டினையும், கவசத்தின் மேற்பகுதியையும் உள்ளடக்கியதே பாறைக்கோளமாகும்.

(ii) புவிநிகர் கோள்கள் (Terrestial Planets) அனைத்தும் பாறைக்கோளத்தைக் கொண்டுள்ளன. புதன், வெள்ளி மற்றும் செவ்வாய்க் கோள்களின் பாறைக்கோளம், புவியின் பாறைக்கோளத்தை விட தடிமனாகவும், கடினமாகவும் உள்ளது.

**5. உருமாறியப் பாறைகள் என்றால் என்ன? விவரி?**

விடை: (i) 'மெட்டமார்பிக்' என்ற சொல் 'மெட்டமார்பிசஸ்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் உருமாறுதல் என்பதாகும்.

(ii) தீப்பாறைகளும், படிவுப்பாறைகளும் அதிக வெப்பத்திற்கும், அழுத்தத்திற்கும் உட்படும் போது அதனுடைய அமைப்பும், குணாதிசயங்களும் மாற்றம் அடைகின்றன. இவ்வாறு உருவாகும் பாறைகள் உருமாறியப் பாறைகள் எனப்படுகின்றன.

(iii) கிரானைட், நீஸ் ஆகவும், பசால்ட, சிஸ்ட ஆகவும், சுண்ணாம்புப் பாறை சலவைக் கல்லாகவும் மணற்பாறை, குவார்ட்சைட் பாறையாகவும் உருமாறுகிறது.

(iv) பாறை சுழற்சியானது ஒரு தொடர் நிகழ்வாகும். இச்சுழற்சியினால் தீப்பாறை, படிவுப்பாறை, உருமாறியப்பாறைகள் ஒரு அமைப்பிலிருந்து, மற்றொன்றாக உருமாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றன.

**6. இமயமலை, ஆல்ப்ஸ்மலை ஆகியன தோன்றிய விதத்தைக் கூறுக.**

விடை: (i) கிடைமட்ட அழுத்த விசையின் காரணமாக புவித்தட்டுகள் மேலும் கீழும் நகர்வதால் மடிப்புகள் (Folding) உருவாகின்றன.

(ii) பாறைகளில் ஏற்பட்ட மடிப்பின் காரணமாக உருவாகும் மலைகள் மடிப்பு மலைகள் எனப்படுகின்றன.

(iii) இந்நிகழ்வினால் உலகின் உயரமான மலைத்தொடர்களான இமயமலையும், ஆல்ப்ஸ் மலையும் தோன்றின.

## V. பின்வரும் வினாக்களுக்கு காரணம் கண்டறிக:

**1. புவியின் ஈர்ப்பு விசை.**

விடை: புவியின் கருவத்தில் (core) அதிகமாக இரும்பு காணப்படுகிறது. இது ஈர்ப்பு விசைக்கு காரணமாகிறது.

**2. புவியின் காந்தபுலம்.**

விடை: புவி தன் அச்சில் சுழலும் போது, திட நிலையில் உள்ள உட்கருவத்தின் மேல், திரவ நிலையிலுள்ள வெளிக்கருவம் சுழலுவதால், காந்தப்புலம் உருவாகிறது.

## VI. வேறுபடுத்துக:

**1. உறங்கும் எரிமலை மற்றும் தணிந்த எரிமலை**

விடை:

| | உறங்கும் எரிமலை | தணிந்த எரிமலை |
|---|---|---|
| (i) | நீண்ட காலமாக எரிமலைச் செய்கைகள் ஏதும் இல்லாமல் காணப்படும் எரிமலைகள் உறங்கும் எரிமலை எனப்படும். | எந்த வித எரிமலைச் செயல்பாடுகளுமின்றி காணப்படும் எரிமலைகள் தணிந்த எரிமலைகள் ஆகும். |
| (ii) | இவை திடீரென்று வெடிக்கும் தன்மையுடையது. இவ்வாறான எரிமலைகள் வெடிக்கும் பொழுது அதிகமான உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. | |
| (iii) | உதாரணம்– ஃபியூஜி எரிமலை – ஜப்பான். | உதாரணம் – கிளிமஞ்சாரோ எரிமலை – தான்சானியா. |

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**2. புவிமேலோடு மற்றும் கவசம்.**

| | புவிமேலோடு (Crust) | கவசம் (Mantle) |
|---|---|---|
| (i) | நாம் வாழும் புவியின் மேல் அடுக்கு மேலோடு ஆகும் | புவி மேலோட்டின் கீழேயுள்ள பகுதி இது. |
| (ii) | இவ்வடுக்கு சியால் (SIAL) என்று அழைக்கப்படும். | இவ்வடுக்கு சிமா (SIMA) எனப்படும். |
| (iii) | இதில் சிலிகா (SI) மற்றும் அலுமினியம் (AL) அதிகம் காணப்படும். | இதில் சிலிகா (Si) மற்றும் மக்னீசியம் (Mg) அதிகமாகக் காணப்படும். |

## VII. விரிவான விடையளி:

**1. பாறைகளின் வகைகளை விவரி.**

**விடை: பாறைகளின் வகைகள்:**

பாறைகள் உருவாகும் விதத்தின் அடிப்படையில், அவற்றைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

அ) தீப்பாறைகள் (Igneous Rocks)

ஆ) படிவுப் பாறைகள் (Sedimentary Rock)

இ உருமாறிய பாறைகள் (Metamorphic Rocks)

**அ) தீப்பாறைகள்:**

(i) இக்னிஸ்'(Ignis) என்ற இலத்தீன் சொல்லிற்கு 'நெருப்பு' என்பது பொருளாகும்.

(ii) புவியின் உள் ஆழத்தில் பாறைகள் உருகிய நிலையில் காணப்படுவதே 'பாறைக்குழம்பு'(Magma). எனப்படும். பாறைக் குழம்பானது புவியின் மேலோட்டில் வெளிப்படுவதே 'லாவா' எனப்படுகிறது.

(iii) பாறைக் குழம்பு வெப்பம் தணிவதால் குளிர்ந்து பாறையாகிறது. குளிர்ந்த இப்பாறைகள் தீப்பாறைகள் என்று அழைக்கப்படுகின்றன.

(iv) தக்காண பீடபூமி தீப்பாறைகளால் உருவானதாகும். (உதாரணம்) கருங்கல், பசால்ட்.

(v) தீப்பாறைகள் 'முதன்மைப் பாறைகள்' என்றும் 'தாய்ப்பாறைகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. ஏனென்றால் மற்ற பாறைகள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இப்பாறைகளிலிருந்தே உருவாகின்றன.

**ஆ) படிவுப்பாறைகள்:**

(i) "செடிமென்ட்" (sediment) என்ற இலத்தீன் சொல்லிற்கு 'படிதல்' என்பது பொருளாகும் பாறைகள் சிதைவுற்று துகள்களாகி ஆறுகள், பனியாறுகள், காற்று போன்றவற்றால் கடத்தப்பட்ட படிவுகள் அடுக்கடுக்காகப் படியவைக்கப்படுகின்றன.

(ii) இவ்வாறு படியவைக்கப்பட்ட படிவுகள் பல மில்லியன் வருடங்களுக்கு பிறகு படிவுப் பாறைகளாக உருவாகின்றன.

(iii) இப்படிவுகளில் தாவரங்கள், விலங்கினங்கள் படிந்து தொல்லுயிர் எச்சப் படிமங்களாக (Fossils) மாறுகின்றன.

(iv) படிவுப்பாறைகளுக்கான உதாரணம்:- மணற்பாறை, சுண்ணாம்புப்பாறை, சுண்ணாம்பு, ஜிப்சம், நிலக்கரி மற்றும் கூட்டுப்பாறைகள்(Conglomerate).

**இ) உருமாறிய / மாற்றுருவப் பாறைகள் (Metamorphic Rocks):**

(i) 'மெட்டமார்பிக்' என்ற சொல் 'மெட்டமார்பிசஸ்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் உருமாறுதல் என்பதாகும்.

(ii) தீப்பாறைகளும், படிவுப்பாறைகளும் அதிக வெப்பத்திற்கும், அழுத்தத்திற்கும் உட்படும் போது அதனுடைய அமைப்பும், குணாதிசயங்களும் மாற்றம் அடைகின்றன.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

(iii) இவ்வாறு உருவாகும் பாறைகளே உருமாறியப் பாறைகள் எனப்படுகின்றன.

(iv) கிரானைட், நீஸ் ஆகவும், பசால்ட், சிஸ்ட் ஆகவும், சுண்ணாம்புப் பாறை சலவைக் கல்லாகவும் மணற்பாறை, குவார்ட்சைட் பாறையாகவும் உருமாறுகிறது.

(v) பாறை சுழற்சியானது ஒரு தொடர் நிகழ்வாகும். இச்சுழற்சியினால் தீப்பாறை, படிவுப்பாறை, உருமாறியப்பாறைகள் ஒரு அமைப்பிலிருந்து, மற்றொன்றாக உருமாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றன.

✶ ✶ ✶

# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25



## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க எழுதுக. (4 × 1 = 4)

1. பாறைக்குழம்பு __________ எனப்படுகிறது.
(அ) புவிமேலோடு (ஆ) கவசம்
(இ) கருவம் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

2. எரிமலை மேல்பகுதியில் கிண்ணம் போன்ற பள்ளமான அமைப்பினை __________ என்று அழைக்கின்றோம்.
(அ) எரிமலை வாய் (ஆ) துவாரம்
(இ) பாறைக்குழம்புத் தேக்கம் (ஈ) எரிமலைக் கூம்பு

3. 'வல்கேன்' என்ற சொல், __________ நெருப்புக் கடவுளின் பெயராகும்.
(அ) ரோமானிய (ஆ) ஜப்பானிய
(இ) கிரேக்க (ஈ) பிலிப்பைன்ஸ்

4. சுனாமி அலைகள், சராசரியாக மணிக்கு __________ கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும்.
(அ) 50 (ஆ) 100
(இ) 300 (ஈ) 500

## II. பொருத்துக. (5 × 1 = 5)

| | | | |
|---|---|---|---|
| 1. கவசம் | – | (அ) | பசிபிக் பெருங்கடல் |
| 2. புவி அதிர்ச்சி | – | (ஆ) | மெக்சிகோ |
| 3. கூட்டு எரிமலை | – | (இ) | அமெரிக்கா |
| 4. கும்மட்ட எரிமலை | – | (ஈ) | நில அதிர்வு அளவைப் படம் |
| 5. செயல்படும் எரிமலை | – | (உ) | சிமா |

## III. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: (3 × 1 = 3)

1. **கூற்று** : பாறைக்குழம்பு துவாரம் வழியாக வெளியேறும்.
**காரணம்** : புவியின் உட்பகுதி அழுத்தப்பட்ட பாறைக் குழம்பினைக் கொண்டிருக்கும்.
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி
ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

2. **கூற்று I** : புவித்தட்டுகள் ஒன்றோடொன்று மோதுவதால் மலைத் தொடர்கள் தோற்றுவிக்கப் படுகின்றன.
**கூற்று II** : கவசத்தின் வெப்பத்தின் காரணமாக புவித்தட்டுகள் நகருகின்றன.
அ) கூற்று I தவறு II சரி ஆ) கூற்று I மற்றும் II தவறு
இ) கூற்று I சரி II தவறு ஈ) கூற்று I மற்றும் II சரி

www.Padasalai.Net This is Only for Sample
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


3. **கூற்று** : 26 டிசம்பர் 2004-இல் இந்தியப் பெருங்கடலில் ஆழிப்பேரலை உண்டானது.
காரணம் : இந்தோ-ஆஸ்திரேலியத் தட்டு யுரேசியத் தட்டின் கீழ்ந அமி;ழ்ந்தது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

**IV. சுருக்கமாக விடையளி.** **(2 × 2 = 4)**

1. புவியின் உள் அடுக்குகள் யாவை?
2. மடிப்பு மற்றும் பிளவு – சிறு குறிப்பு வரைக.

**V. வேறுபடுத்துக.** **(2 × 2 = 4)**

1. கருவம் மற்றும் மேலோடு.
2. கவச எரிமலை மற்றும் கும்மட்ட எரிமலை

**VI. விரிவான விடை தருக.** **(1 × 5 = 5)**

1. புவி அமைப்பை விவரி.

## விடைகள்

**I.** **1.** (ஆ) கவசம்
**2.** (அ) எரிமலை வாய்
**3.** (அ) ரோமானிய
**4.** (ஈ) 500

**II.** **1.** – (உ), **2.** – (ஈ), **3.**– (அ), **4.** – (ஆ), **5.** – (இ)

**III.** **1.** (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி
**2.** (ஈ) கூற்று I மற்றும் II சரி
**3.** (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி

**IV.** **1.** பார்க்க, வினா எண் IV - 2
**2.** பார்க்க, வினா எண் IV (Addl.) - 2

**V.** **1.** பார்க்க, வினா எண் VI - 1
**2.** பார்க்க, வினா எண் VI - 5

**VI.** **1.** பார்க்க, வினா எண் VII - 1

✶ ✶ ✶




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



அலகு 2

# நிலக்கோளம் - II
# புவி புறச்செயல்முறைகள்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க .**

**1. பாறைகளின் சிதைவுறுதலும் அழிதலும் ..................... என்று அழைக்கப்படுகிறது.**

அ) வானிலைச் சிதைவு　　ஆ) அரித்தல்
இ) கடத்துதல்　　ஈ) படியவைத்தல்

[விடை: அ) வானிலைச் சிதைவு]

**2. இயற்கைக் காரணிகளால் நிலம் சமப்படுத்தப்படுதலை ..................... என்று அழைக்கின்றோம்.**

அ) படிவுகளால் நிரப்பபடுதல்　　ஆ) அரிப்பினால் சமப்படுத்துதல்
இ) நிலத்தோற்ற வாட்டம் அமைத்தல்　　ஈ) ஏதுமில்லை

[விடை: இ) நிலத்தோற்ற வாட்டம் அமைத்தல்]

**3. ..................... ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்.**

அ) துள்ளல்　　ஆ) வண்டல் விசிறி　　இ) டெல்டா　　ஈ) மலை இடுக்கு

[விடை: இ) டெல்டா]

**4. சுண்ணாம்புப் பாறை நிலத்தோற்றங்கள் உருவாவதற்கு காரணம் ..................... .**

அ) பனியாறு　　ஆ) காற்று　　இ) கடல்அலைகள்　　ஈ) நிலத்தடி நீர்

[விடை: ஈ) நிலத்தடி நீர்]

**5. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலத்தோற்றங்களில் எது பனியாறுகளின் படியவைத்தலால் உருவாக்கப்படவில்லை.**

அ) சர்க்　　ஆ) மொரைன்　　இ) டிரம்லின்　　ஈ) எஸ்கர்

[விடை: அ) சர்க்]

**6. காற்றின் படியவைத்தலால் உருவாக்கப்படும் மென்படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம் ..................... ஆகும்.**

அ) காற்றடி வண்டல்　　ஆ) பர்கான்　　இ) ஹமாடா　　ஈ) மணல் சிற்றலைகள்

[விடை: அ) காற்றடி வண்டல்]

**7. கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் ..................... .**

அ) கடல் அலை அரித்தல்　　ஆ) ஆற்று நீர் அரித்தல்
இ) பனியாறு அரித்தல்　　ஈ) காற்றின் படியவைத்தல்

[விடை: அ) கடல் அலை அரித்தல்]

**8. ..................... ன் அரித்தல் செய்கையினால் சர்க்குகள் உருவாக்கப்படுகின்றன.**

அ) காற்று　　ஆ) பனியாறு　　இ) ஆறு　　ஈ) நிலத்தடி நீர்.

[விடை: ஆ) பனியாறு]

**9. கீழ்க்கண்டவற்றில் எது இரண்டாம் நிலை நிலத்தோற்றம்?**

அ) ஆசியா　　ஆ) தக்காண பீடபூமி　　இ) குலு பள்ளத்தாக்கு　　ஈ) மெரினா கடற்கரை.

[விடை: ஆ) தக்காண பீடபூமி]



Padasalai www.surabooks.com
orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## II. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | கிளையாறு | – 1. | பனியாற்றின் செயல்பாடு |
| ஆ) | காளான் பாறை | – 2. | கடல் அலைச் செயல் |
| இ) | எஸ்கர் | – 3. | ஆற்றின் மூப்பு நிலை |
| ஈ) | கல் விழுது | – 4. | ஏயோலியன் |
| உ) | ஓங்கல் | – 5. | சுண்ணாம்புப் பாறை |

[விடை: அ) - 3, ஆ) - 4, இ) - 1, ஈ) - 5, உ) - 2]

## III. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்து சரியான விடையை தேர்ந்து எடுக்கவும்:

**1.** **1. 'I' வடிவ பள்ளத்தாக்கு ஆறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.**
**2. 'U' வடிவ பள்ளத்தாக்கு பனியாறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.**
**3. 'V' வடிவ பள்ளத்தாக்கு பனியாறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.**

அ) 1, 2 மற்றும் 3ம் சரி ஆ) 1, 2 சரி
இ) 1 மற்றும் 3ம் சரி ஈ) 1 மட்டும் சரி

★ சரியான விடை: 2 மட்டும் சரி

**2.** **வாக்கியம் I** : ஆறுகள் சமன்படுத்துதலின் முக்கிய காரணியாகும்.
**வாக்கியம் II** : ஆறுகள் ஓடும் சரிவுகளை பொருத்து அதன் செயல்பாடு இருக்கும்.

அ) வாக்கியம் I தவறு II சரி ஆ) வாக்கியம் I மற்றும் II தவறு
இ) வாக்சியம் I சரி வாக்கியம் II தவறு ஈ) வாக்கியம் I மற்றும் II சரி

[விடை: ஈ) வாக்கியம் I மற்றும் II சரி]

**3.** **வாக்கியம்** : சுண்ணாம்பு பாறை பகுதிகளில் நிலத்தடி நீர் குறைவாக இருக்கும்.
**காரணம்** : நீர் சுண்ணாம்பு பாறையில் உட்புகாது.

அ) வாக்கியம் சரி, காரணம் தவறு ஆ) வாக்கியம் தவறு, காரணம் சரி
இ) வாக்கியம் மற்றும் காரணம் தவறு ஈ) வாக்கியம் மற்றும் காரணம் சரி

[விடை: இ) வாக்கியம் மற்றும் காரணம் தவறு]



## IV. சுருக்கமாக விடையளி.

**1. வானிலைச் சிதைவு - வரையறு.**

**விடை: வானிலைச் சிதைவு:**

வளிமண்டல நிகழ்வுகளோடு புவியின் மேற்பரப்பு நேரடியாகத் தொடர்பு கொள்வதால் பாறைகள் சிதைவடைதலுக்கும் (Disintegration), அழிதலுக்கும் (Decomposition) உட்படுகின்றன. இச்செயல்பாடுகளையே வானிலைச் சிதைவு என அழைக்கின்றோம்.

**2. உயிரினச்சிதைவு என்றால் என்ன?**

**விடை:** தாவரங்களின் வேர்கள் பாறைகளின் விரிசல்களின் வழியே ஊடுருவிச் சென்று பாறைகளை விரிவடையச் செய்கிறது. மண்புழுக்களாலும், விலங்கினங்களாலும் (எலி மற்றும் முயல்) மற்றும் மனிதச் செயல்பாடுகளினாலும் பாறைகள் சிதைவுறுதலே உயிரினச் சிதைவு எனப்படும்.

**3. ஆற்றின் மூன்று நிலைகள் யாது? அதனோடு தொடர்புடைய இரண்டு நிலத்தோற்றங்களைக் கூறுக.**

**விடை: ஆற்றின் மூன்று நிலைகள்:**

(i) இளநிலை (The upper Course) – V வடிவ பள்ளத்தாக்குகள், மலையிடுக்குகள், குறுகிய பள்ளத்தாக்குகள், துள்ளல், குடக்குழிகள்

(ii) முதிர் நிலை (The Middle Course ) – வண்டல் விசிறிகள், வெள்ளச் சமவெளிகள், ஆற்று வளைவுகள், குருட்டு ஆறுகள்

(iii) மூப்பு நிலை (The Lower Course) – டெல்டாக்கள், ஓத பொங்கு முகங்கள்

**4. குறுட்டு ஆறு என்றால் என்ன?**

விடை: **குறுட்டு ஆறு அல்லது குதிரை குளம்பு ஏரி (Oxbow Lake)**

ஆற்று வளைவுகள் காலப்போக்கில் பெரிதாகி இறுதியில் ஒரு முழு வளையமாக மாறுகிறது. இம்முழு வளைவுகள் முதன்மை ஆற்றிலிருந்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு ஒரு ஏரியைப் போன்று காட்சி அளிக்கும். இதுவே குருட்டு ஆறு எனப்படுகிறது.

**5. கடற்குகை எவ்வாறு கடல் வளைவிலிருந்து வேறுபடுகிறது?**

விடை: அ) **கடற்குகை (Sea Cave):**

கடல் அலைகள் தொடர்ந்து கடல் ஓங்கல்களின் மீது மோதுவதால் அடிப்பகுதி அரிக்கப்பட்டு துவாரம் போன்ற அமைப்பை ஏற்படுத்துகின்றன. இவையே கடல் குகைகள் எனப்படுகின்றன.

ஆ) **கடல் வளைவு (Sea Arch):**

அருகருகிலுள்ள இரு கடற்குகைகளின் நீட்டு நிலங்கள் மேலும் அரிக்கப்படுவதால் அவை இணைந்து ஒரு வளைவு போன்ற அமைப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வளைவுகள் கடல் வளைவுகள் எனப்படுகின்றன. உதாரணம் – நீல் தீவு (அந்தமான் நிக்கோபார்).

**6. இந்தியாவில் காணப்படும் ஏதேனும் நான்கு சுண்ணாம்புப்பாறை பிரதேசங்களை பட்டியலிடுக.**

விடை: **இந்தியாவின் உள்ள சுண்ணாம்பு பிரதேச நிலத்தோற்றங்கள்:**

(i) மேற்கு பீஹார் – குப்ததாம் குகைகள்.
(ii) உத்தரகாண்ட் – ராபர்ட் குகை மற்றும் தப்கேஷ்வர் கோவில்.
(iii) மத்தியப்பிரதேசம் – பச்மாரி மலைகள், பாண்டவர் குகைகள்
(iv) சத்தீஸ்கர் (பஸ்தர்) – குடும்சர் குகைகள்.
(v) ஆந்திர பிரதேசம் (விசாகப்பட்டினம்) – போரா குகைகள்.

**7. தொங்கும் பள்ளத்தாக்கு என்றால் என்ன?**

விடை: முதன்மை பனியாற்றினால் உருவாக்கப்பட்ட பள்ளத்தாக்கின் மீது அமைந்திருக்கும் துணைப் பனியாற்றின் பள்ளத்தாக்கு தொங்கும் பள்ளத்தாக்கு ஆகும்.

**8. வரையறு - அ) மொரைன் ஆ) டிரம்லின் இ) எஸ்கர்.**

விடை: அ) **மொரைன்:** பள்ளத்தாக்கு அல்லது கண்டப்பனியாறுகளால் படியவைக்கப்பட்டு உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் மொரைன்கள் எனப்படுகின்றன.

ஆ) **டிரம்லின்:** கவிழ்த்து வைக்கப்பட்ட மிகப்பெரிய கரண்டியைப் போன்றோ அல்லது பாதியாக வெட்டப்பட்ட முட்டையைப் போன்றோ காட்சியளிக்கும் மொரைன்கள் டிரம்ளின்கள் எனப்படுகின்றன.

இ) **எஸ்கர்:** பனியாறுகள் உருகுவதால் அவை கொண்டு வரும் கூழாங்கற்கள், சரளைகற்கள் மற்றும் மணல் ஒரு நீண்ட குறுகிய தொடர் குன்று போன்று பனியாற்றுக்கு இணையாகப் படிய வைக்கப்படுகிறது. இவ்வாறு படியவைக்கப்படும் குறுகிய தொடர் குன்றுகளே எஸ்கர்கள் எனப்படுகின்றன.

**9. காற்றின் அரித்தல் செய்கையால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்களை பட்டியலிடு.**

விடை: காற்று அரித்தலால் உருவாக்கப்படும் நிலத் தோற்றங்கள் காளான் பாறை (Mushroom Rock), இன்சல்பர்க் (Inselberg), மற்றும் யார்டங் (Yardarg) போன்றவையாகும்.

**10. கடல் அலை அரிமேடை என்றால் என்ன?**

விடை: ஓங்கல்களின் மீது அலைகள் மோதுவதால் சற்று உயரத்தில் அரித்தல் ஏற்பட்டு அலை அரிமேடை தோன்றுகிறது. அலை அரிமேடை, பென்ச், திட்டு (Shelf) திடல் (Terrace), சமவெளி (Plain) எனவும் அழைக்கப்படுகின்றன.

## V. காரணம் கூறு:

**1. வெப்பம் மற்றும் ஈரப்பதம் நிறைந்த மண்டலங்களில் இரசாயனச் சிதைவு அதிகமாக ஏற்படுகிறது.**

விடை: வெப்பம் மற்றும் ஈரப்பதம் நிறைந்த மண்டலங்களில் இரசாயன சிதைவு அதிகமாக ஏற்படுகிறது காரணம் ஆக்ஸிகரணம் கார்பனாக்கம், கரைதல், நீர்க்கொள்ளல் ஆகிய செயல்பாடுகளினால் இரசாயனச் சிதைவு ஏற்படுகிறது.

**2. ஓதப்பொங்கு முகங்களில் மென்மையான வண்டல் படிவுகள் குறைவாக படியவைக்கப்படுகிறது.**

விடை: ஓதப்பொங்கு முகங்களில் மென்மையான வண்டல் படிவுகள் குறைவாக படிய வைக்கப்படுகிறது ஏன் என்றால் ஓதப்பொங்கு முகம் ஆறு கடலில் சேறுமிடங்களை உருவாகிறது. அலைகளின் அரித்தல் காரணமாக இங்கு டெல்மிக்கள் போல் படிய வைத்தல் நடைபெறாது.

**3. துருவப்பகுதிகளில் உறை பனிக்கோடு கடல்மட்டத்திற்கு இணையாக உள்ளது.**

விடை: துருவப்பகுதியில் உறை பனிக்கோடு கடல் மட்டத்திற்கு இணையாக உள்ளது. காரணம் உயரமான பகுதிகளிலும், உயர் அட்சங்களிலும் நிரந்தரமாக பனி மூடியிருக்கும் பகுதியின் எல்லைக் கோடே உறை பனிக்கோடு எனப்படும். உயர் அட்சங்களுக்கும் மேலே செல்லச் செல்ல உறை பனிக்கோடு கடல் மட்டத்திற்கு இணையாக உள்ளபடி இருக்கும்.

**4. பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு.**

விடை: பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு ஏன் என்றால் புவியின் மேற்பரப்பில் காற்று கிடைமட்டமாக நகர்வதால் காற்றின் செயல்பாடு அதிகமாக இருக்கும்.

**5. சுண்ணாம்புப்பாறை பிரதேசங்களின் மேற்பரப்பில் வடிகால் குறைவாக இருக்கும்.**

விடை: புவியின் மேற்பரப்பில் உள்ள பாறைகளின் துவாரங்கள் மற்றும் விரிசல்கள் சுண்ணாம்புப் பாறை பிரதேசங்களில், கால்சியம் கார்பனேட், டாலமைட், ஜிப்சம் போன்றவை காணப்படுகின்றன. இவை நீரில் எளிதில் கரையும் தன்மையுடையவை.

## VI. வேறுபடுத்துக:

**1. இயற்பியல் சிதைவு மற்றும் இராசயனச் சிதைவு**

விடை:

| வ.எண் | இயற்பியல் சிதைவு | இராசயனச் சிதைவு |
|---|---|---|
| (i) | இயற்பியல் சக்திகளால் பாறைகள் இராசயன மாற்றம் ஏதும் அடையாமல் உடைபடுவதே இயற்பியல் சிதைவு எனப்படுகிறது. | பாறைகளில் இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதால் அவை உடைந்து சிதைவுறுகின்றன இதுவே இரசாயனச் சிதைவு எனப்படுகிறது. |
| (ii) | பகல் நேரத்தில் அதிக வெப்பம் காரணமாக பாறைகள் விரிவடைகின்றன, இரவு நேரத்தில் அதிகக் குளிரின் காரணமாக சுருங்குகின்றன. இத்தொடர்ச்சியான நிகழ்வுகளால் பாறைகளில் விரிசல் ஏற்பட்டு அவை உடைந்து சிதறுகின்றன. | ஆக்ஸிகிரணம் (Oxidation)<br>கார்பனாக்கம் (Carbonation)<br>கரைதல் (Solution)<br>நீர்க்கொள்ளல் (Hydratin)<br>ஆகிய செயல்பாடுகளினால் இராசயன சிதைவு ஏற்படுகிறது. |

**2. டெல்டா மற்றும் ஓத பொங்கு முகம்**

விடை:

| | டெல்டா | ஓத பொங்கு முகம் |
|---|---|---|
| (i) | ஆற்றின் முகத்துவாரத்தில் படிவுகள் முக்கோண வடிவில் படிய வைக்கப்படுகின்றன இவை டெல்டா எனப்படும். | ஓதப்பொங்கு முகமானது ஆறு கடலில் சேறும் இடங்களில் உருவாகிறது. |
| (ii) | உதாரணம் – காவிரி டெல்டா – தமிழ்நாடு | உதாரணம் – இந்தியாவின் நர்மதா மற்றும் தபதி. |

அலகு 2

**3. கல்விழுது மற்றும் கல்முளை.**

**விடை:**

| வ.எண் | கல்விழுது | கல்முளை |
|---|---|---|
| (i) | இது நிலத்தடி நீர் படிவுகள் நிலத் தோற்றமாகும். | இதுவும் நிலத்தடி நீர் படிவ நிலத் தோற்றமாகும். |
| (ii) | குகைகளின் கூரைகளிலிருந்து ஒழுகும் கால்சியம் கார்பனேட் கலந்த நீர் நீராவியாகும் போது கால்சைட் விழுதுகள் போன்று காட்சியளிக்கும். இது கல்விழுது என்று அழைக்கப்படுகிறது. | கால்சியம் கார்பனேட் கலந்த நீர் தரையில் படிந்து மேல் நோக்கி வளர்வது கல்முளை எனப்படுகிறது. |

**4. நீண்ட மணற்குன்று மற்றும் குறுக்கு மணற்குன்று.**

**விடை:**

| வ.எண் | நீண்ட மணற்குன்று | குறுக்கு மணற்குன்று |
|---|---|---|
| (i) | நீண்ட மணல் மேடுகள் குறுகிய மணற்தொடர்களாக நீண்டு காணப்படும். | குறுக்கு மணல் மேடுகள் சமச்சீரற்ற வடிவத்தில் காணப்படும். |
| (ii) | இம்மணற் தொடர்கள் காற்று வீசும் திசைக்கு இணையாகக் காணப்படும். | காற்று வேகமாகவும், மிதமாகவும் மாறி, மாறி ஒரே திசையில் வீசும் போது குறுக்கு மணல் மேடுகள் உருவாகின்றன. |

**5. இன்சல்பர்க் மற்றும் யார்டங்**

**விடை:**

| இன்சல்பர்க் | யார்டங் |
|---|---|
| வறண்ட பிரதேசங்களில் காணப்படும் தீப்பாறைகள் காற்றின் அரிப்புக்கு உட்படாமல் சுற்றியிருக்கும் பகுதியை விட தனித்து உயர்ந்து காணப்படும் நிலத்தோற்றமே இன்சல்பர்க் ஆகும். | வறண்ட பிரதேசங்களில் செங்குத்தாக அமைந்திருக்கும் சில பாறைகள் கடின மற்றும் மென் பாறை என மாறி மாறி அமைந்திருக்கும். காற்றினால் அரிக்கப்படாத கடினபாறைகள் ஒழுங்கற்ற முகடுகள் போன்று இருக்கும். இவையே யார்டங் எனப்படும். |

**6. நீண்ட மணல்திட்டு மற்றும் மணல் திட்டு.**

**விடை:**

| வ.எண் | நீண்ட மணல்திட்டு | மணல் திட்டு |
|---|---|---|
| (i) | மணல் திட்டின் ஒருமுறை நிலத்தோடு இணைந்தும் மறுமுனை கடலை நோக்கி நீண்டும் காணப்படும். | கடற்கரையில் மணற் படிவுகளால் ஆன நீண்ட நிலத்தோற்றமே மணல் திட்டு எனப்படும். |
| (ii) | நீண்ட மணல் திட்டுகள் பொதுவாக ஓத பொங்கு முகங்களில் காணப்படும். | இம்மணல் திட்டு பெரும்பாலும் கடற்கரைக்கு இணையாகக் காணப்படும். |

## VII. விரிவான விடையளி:

**1. வானிலை சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.**

**விடை: வானிலை சிதைவு:**

வளிமண்டல நிகழ்வுகளோடு புவியின் மேற்பரப்பு நேரடியாகத் தொடர்பு கொள்வதால் பாறைகள் சிதைவடைதலுக்கும் அழிதலுக்கும் உட்படுகின்றன, இச்செயல்பாடுகளையே வானிலைச் சிதைவு என அழைக்கின்றோம்.

வானிலைச் சிதைவு மூன்று வகைப்படும்.

அ) இயற்பியல் சிதைவு ஆ) இரசாயனச் சிதைவு இ) உயிரினச் சிதைவு

புவியியல்

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**அ) இயற்பியல் சிதைவு:**

(i) இயற்பியல் சக்திகளால் பாறைகள் இரசாயன மாற்றம் ஏதும் அடையாமல் உடைபடுவதே இயற்பியல் சிதைவு எனப்படுகிறது.

(ii) பகல் நேரத்தில் அதிக வெப்பத்தின் காரணமாக பாறைகள் விரிவடைகின்றன. இரவு நேரத்தில் அதிகக் குளிரின் காரணமாக அவை சுருங்குகின்றன.

(iii) இத்தொடர்ச்சியான நிகழ்வின் காரணமாக பாறைகளில் விரிசல் ஏற்பட்டு அவை உடைந்து சிதறுகின்றன.

(iv) பாறை உரிதல், பாறைப் பிரிந்துடைதல் மற்றும் சிறுத்துகள்களாக சிதைவுறுதல் ஆகியன இயற்பியல் சிதைவின் வகைகளாகும்.

**ஆ) இரசாயனச் சிதைவு:**

(i) பாறைகளில் இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதால் அவை உடைந்து சிதைவுறுகின்றன. இச்சிதைவுறுதலே இரசாயனச் சிதைவு எனப்படுகிறது.

(ii) அதிக வெப்பமும், ஈரப்பதமும் கொண்ட நில நடுக்கோட்டுப் பகுதிகள், வெப்பமண்டலப் பகுதிகள் மற்றும் மிதவெப்பமண்டல பகுதிகளில் இரசாயனச் சிதைவுறுதல் அதிகமாக நடைபெறுகிறது.

(iii) ஆக்ஸிகரணம், கார்பனாக்கம், கரைதல், நீர்க்கொள்ளல் ஆகிய செயல்பாடுகளினால் இரசாயனச் சிதைவு ஏற்படுகிறது.

(iv) ஆக்ஸிஜன், கார்பன் – டை – ஆக்சைடு மற்றும் ஹைட்ரஜன் இரசாயனச் சிதைவுறுதலின் முக்கியக் காரணிகளாக அமைகின்றன.

**இ) உயிரினச் சிதைவு:**

(i) தாவரங்களின் வேர்கள் பாறைகளின் விரிசல்களின் வழியே ஊடுருவிச் சென்று பாறைகளை விரிவடையச் செய்கிறது.

(ii) மண்புழுக்களாலும், விலங்கினங்களாலும் (எலி மற்றும் முயல்) மற்றும் மனிதச் செயல்பாடுகளினாலும் பாறைகள் சிதைவுறுதலே உயிரினச் சிதைவு எனப்படும்.



**2. நிலத்தடி நீரின், அரித்தலால் உண்டாகும் நிலத்தோற்றங்களை விவரி.**

விடை: **நிலத்தடி நீரின் அரித்தலால் உருவாகும் நிலத்தோற்றங்கள்:**

(i) **டெர்ரா ரோஸா (இத்தாலிய மொழியில் செம்மண்) :** சுண்ணாம்பு நிலப்பிரதேசங்களில் உள்ள சுண்ணாம்பு மண் கரைந்து சிதைவுற்ற பின்னர் அதிலுள்ள எஞ்சிய செம்மண் இங்கு படியவைக்கப்படுவதால் இந்நிலத்தோற்றம் உருவாக்கப்படுகிறது. இம்மண் சிகப்பு நிறமாக காணப்படுவதற்கு அதிலுள்ள இரும்பு ஆக்ஸைடு காரணமாகும்.

(ii) **லேப்பீஸ் :** கரடு முரடாக உள்ள சுண்ணாம்புப் பாறைகளிடையே நிலத்தடி நீர் நெளிந்து ஓடும் போது நீண்ட அரிப்புக் குடைவுகள் ஏற்படுகின்றன. இக்குடைவுகளே லேப்பீஸ்கள் என்று அழைக்கப்படுகின்றன.

(iii) **உறிஞ்சு துளைகள் :** சுண்ணாம்பு பாறைகள் கரைதலினால் ஏற்படும் புனல் வடிவப் பள்ளங்கள் உறிஞ்சு துளைகள் எனப்படுகின்றன. இதன் சராசரி ஆழம் 3 முதல் 9 மீட்டர் வரை காணப்படும்.

(iv) குகைகள் மற்றும் அடிநிலக் குகைகள் – குகைகளும், அடிநிலக் குகைகளும் சுண்ணாம்பு பிரதேசங்களில் நிலத்தடியில் காணப்படும் நிலத் தோற்றங்களாகும். கரியமில அமிலம் சுண்ணாம்பு பாறைகளில் வினைபுரிவதால் ஏற்படும் வெற்றிடம் குகை எனப்படுகிறது. இவை உருவத்திலும் அளவிலும் வேறுபட்டுக் காணப்படும். அடிநிலைக் குகைகளின் தரைப்பகுதி சமமற்றுக் காணப்படும். (உதாரணம்) மேற்கு பீஹாரிலுள்ள குப்ததாம்.

(v) குகைகளிலும், அடிநிலக்குகைகளிலும் படிய வைத்தலால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் ஸ்பீலியோதெம்ஸ் என அழைக்கப்படுகின்றன. ட்ரேவர்டைன், டூஃபா மற்றும் சொட்டுப்படிவுகள் ஸ்பீலியோதெம்ஸில் அடங்கும்.

(vi) குகைகள், யுவாலாக்கள், டோலின்கள், போல்ஜேக்கள் போன்ற நிலத்தோற்றங்கள் உலகின் பிற பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்பு நிலப்பிரதேச நிலத்தோற்றங்கள் ஆகும்.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**3. பனியாறு என்றால் என்ன?**

**விடை: பனியாறு:**

(i) பனிக்கருவியல் மண்டலத்திலிருந்து பெரிய அளவிலான பனிக்கட்டிகள் மெதுவாக நகர்வதே பனியாறு எனப்படுகிறது.

(ii) பனிக்குவிந்து காணப்படும் இடம் பனிவயல் என அழைக்கப்படுகிறது.

(iii) உயரமான பகுதிகளிலும், உயர் அட்சங்களிலும் நிரந்தரமாக பனி மூடியிருக்கும் பகுதியின் எல்லைக்கோடே உறை பனிக்கோடு எனப்படுகிறது.

(iv) உயர் அட்சங்களுக்குச் செல்லச் செல்ல உறைபனிக் கோட்டின் எல்லைக்கோடு கடல் மட்டத்திற்கு அருகில் காணப்படும்.

**பனியாறுகளின் வகைகள்:**

பனியாறுகள் அவை உற்பத்தியாகும் இடங்களை அடிப்படையாகக் கொண்டு கண்டப் பனியாறு மற்றும் பள்ளத்தாக்குப் பனியாறு என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- பனியாறுகளின் வகைகள்
  - கண்டப் பனியாறுகள்
    - கண்டங்களில் அடர்ந்த பனியால் மூடப்பட்டிருக்கும் பரந்த நிலப்பரப்பு கணடப் பனியாறு எனப்படுகிறது.
  - பள்ளத்தாக்குப் பனியாறுகள்
    - பனிமூடிய மலைத்தொடர்களில் இருந்து உற்பத்தியாகும் பனியாறு, பள்ளத்தாக்கு பனியாறு எனப்படுகிறது.

**4. காற்று படியவைத்தல் செயலினை விவரி.**

**விடை:** புதர்கள், காடுகள் மற்றும் பாறைகள் காற்று வீசும் திசைக்கு குறுக்கே அமைந்து அதன் வேகத்தை தடை செய்கிறது. இத்தடைகள் காற்றினால் கடத்தப்பட்ட படிவுகளை காற்று வீசும் பக்கங்களிலும், அதன் மறுபக்கத்திலும் படிய வைக்கிறது. மணல் குன்று, பர்கான் மற்றும் காற்றடி வண்டல் போன்றவை காற்றின் படியவைத்தலால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் ஆகும்.

மணல் மேடு **(Sand dune):**

பாலைவனங்களில் வீசும் மணல்புயல் மிக மிக அதிக அளவில் மணலைக் கடத்துகின்றன. காற்றின் வேகம் குறையும்போது கடத்தப்பட்ட படிவுகள் மிக அதிக அளவில் குன்று போல் படிய வைக்கப்படுகின்றது. இவ்வாறு குன்று அல்லது மேடாகக் காணப்படும் நிலத் தோற்றம் மணல்மேடு எனப்படுகிறது. மணல் மேடுகள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(i) பர்கான் **(Barchan):**

பிறை வடிவத்தில் தனித்துக் காணப்படும் மணல் மேடுகள் பர்கான்கள் என அழைக்கப்படுகின்றன. அவை காற்று வீசும் பக்கத்தில் மென் சரிவையும், காற்று வீசும் திசைக்கு எதிர் பக்கத்தில் வன் சரிவையும் கொண்டிருக்கும்.

(ii) குறுக்கு மணல்மேடு **(Transverse dune):**

குறுக்கு மணல்மேடுகள் சமச்சீரற்ற வடிவத்தில் காணப்படும். காற்று வேகமாகவும், மிதமாகவும் மாறி, மாறி ஒரே திசையில் வீசும் போது குறுக்கு மணல் மேடுகள் உருவாகின்றன.

(iii) நீண்ட மணல் மேடுகள் **(Longiitudinal dune):**

நீண்ட மணல் மேடுகள் குறுகிய மணற் தொடர்களாக நீண்டு காணப்படும். இம்மணற் தொடர்கள் காற்று வீசும் திசைக்கு இணையாகக் காணப்படும் இவை சகாராவில் செய்ப்ஸ் ( Seifs ) என்று அழைக்கப்படுகிறது.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**(iv) காற்றடி வண்டல் (Loess):**

பரந்த பிரதேசத்தில் படிய வைக்கப்படும் மென்மையான மற்றும் நுண்ணியப் படிவுகளே காற்றடி வண்டல் எனப்படும். காற்றடி வண்டல் காணப்படும் இடங்கள் – வடக்கு மற்றும் மேற்கு சீனா, அர்ஜென்டைனாவின் பாம்பாஸ், உக்ரைன் மற்றும் வட அமெரிக்காவில் மிசிசிபி பள்ளத்தாக்கு.

## VIII. நில வரைபடப் பயிற்சி

**கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும் [நில வரைபடப் புத்தக உதவியுடன்].**

(i) ஏதேனும் இரண்டு டெல்டாக்கள்

(ii) அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள சுண்ணாம்புப் பிரதேச பகுதி

(iii) உலகில் காணப்படும் ஏதேனும் இரண்டு வெப்ப மற்றும் குளிர் பாலைவனங்களைக் குறிக்கவும்.







orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## IX. உயர் சிந்தனை வினாக்கள்

1. **பாலைவனங்களில் சமன்படுத்துதலின் ஒரே காரணி காற்றாகும்.**

விடை: காற்றின் செயல்பாடுகளான அரித்தல், கடத்துதல் மற்றும் படிய வைத்தல் பாலைவனம் பகுதிகளில் அதிகமாக காணப்படுவதால் பாலைவனங்களில் சமன்படுத்துதலின் ஒரே காரணியாக காற்று விளங்குகிறது.

2. **சுண்ணாம்பு பாறைப் பகுதிகளில் மேற்பரப்பில் வழிந்தோடும் நீரை விட நிலத்தடி நீர் அதிகம் ஏன்?**

விடை: சுண்ணாம்பு பாறையில் கால்சியம் கார்பனேட் அதிக அளவில் உள்ளது. அது நீரில் கரையக்கூடியது. ஆகவே கால்சியம் கார்பனேட் கலந்த நீர் தரையில் படிந்து விடுகிறது.

3. **மூப்பு நிலையில் ஆறுகள் இளநிலையை விட அகன்று காணப்படுகிறது.**

விடை: காரணம்: இளநிலை மற்றும் முதிர் நிலையில் அரித்து கடத்தி வரப்பட்ட பொருட்கள் தாழ்நில சமவெளிகளில் படிய வைக்கப்படுகின்றன. இவ்வாறு படிவுகள் நிரப்பப்படுவதால் முதன்மை ஆறு மூப்பு நிலையில் அகன்று காணப்படுகிறது.



## X. புவியியல் பதங்கள் எழுதுக:

அ) சுண்ணாம்பு நிலத்தில் உள்ள கால்சியம் கார்பனேட் பாறைகளில் ஏற்படும் வேதியல் மாற்றம்.

விடை: உறிஞ்சு துறைகள்

ஆ) ஓங்கலுக்கு அருகில் காணப்படும் தட்டையான நிலப்பரப்பு.

விடை: அலை அரிமேடை

இ) அரித்தல் + கடத்துதல் + படியவைத்தல் =

விடை: சமன்படுத்துதல்

ஈ) பனிவயலின் எல்லைக் கோடு

விடை: உறைபனிக் கோடு

### உள்பாடப்பகுதி சிந்தனை வினா

1. **மண் உருவாக வானிலைச் சிதைவு ஒரு முக்கியத் தேவையா?**

விடை: வானிலை காரணிகளால் பாறை படிப்படியாகச் சிதைவடைந்து மண் மற்றும் கனிமங்கள் தோன்றும் செயற்பாட்டுத் தொடர் வானிலையாலழிதல் எனப்படும். உடைந்த பாறைகள் வானிலைச் சிதைவுக்கு உட்பட்டு மண்ணாக மாறுகிறது. சிடைவடைந்த நுண்ணிய பாறைத் துகள்கள் மற்றும் சிதைத்த உயிரினங்களின் கலவையே மண்ணாகும்.

2. **ஆல்ப்ஸ் மலைகளில் உறை பனிக் கோடு 2700 மீட்டர் ஆகும். ஆனால் கிரீன்லாந்தில் உறை பனிக்கோடு 600 மீட்டர் ஆகும். காரணம் அறிக.**

விடை: (i) பனிச்சதுரம் என்பது குறைந்த அளவிலான நிரந்தரமான பனிப்பகுதியை இழுக்கும் உயரமாகும்.

(ii) நிலவிலிருந்து அல்லது வெப்பமண்டலங்களிலிருந்து தொலைவில் உள்ள பல காரணிகள் காரணமாக பனிநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

(iii) ஆல்ப்ஸ் மலைத்தொடர் வெப்ப மண்டலத்திற்கு அருகில் உள்ளது. எனவே, இதன் உறைபனிக்கோடு 2700 மீட்டர் ஆகும்.

(iv) கிரீன்லாந்து வடக்கு துருவத்திற்கு அருகில் உள்ளது. எனவே இதன் உறைபனிக்கோடு 600 மீட்டர் ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1. இரசாயன மற்றும் ஏதும் அடையாமல் பாறைகள் உடைபடுவது .................... எனப்படுகிறது.**
அ) இயற்பியல் சிதைவு ஆ) இரசாயன சிதைவு
இ) உயிரினச் சிதைவு ஈ) சமன்படுத்துதல்
[விடை: அ) இயற்பியல் சிதைவு]

**2. உலகிலேயே மிக அதிக உயரமான நீர்வீழ்ச்சி .................... நீர்வீழ்ச்சியாகும்.**
அ) நயாகரா ஆ) ஏஞ்சல் இ) விக்டோரியா ஈ) ஜோக்
[விடை: ஆ) ஏஞ்சல்]

**3. உலகின் மிகப் பெரிய டெல்டா, .................... டெல்டா ஆகும்.**
அ) நைல் ஆ) கங்கை, பிரம்மபுத்திரா
இ) மஞ்சள் ஆறு ஈ) மிசிசிப்பி
[விடை: ஆ) கங்கை, பிரம்மபுத்திரா]

**4. சுண்ணாம்பு பிரதேச நிலத்தோற்றங்களில் ஒன்றான போரா குகைகள் காணப்படும் மாநிலம் .................... .**
அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) சத்தீஸ்கர் இ) உத்தராகண்ட் ஈ) பீஹார்
[விடை: அ) ஆந்திரப் பிரதேசம்]

**5. உலகின் மிக ஆழமான உறிஞ்சு துளை (sink hole) .................... -வில் 2172 அடி ஆழத்தில் காணப்படுவதாகும்.**
அ) வியன்னா ஆ) அமெரிக்கா
இ) சீனா ஈ) இந்தியா [விடை: இ) சீனா]

**6. பனியாறு அரித்தலால் உருவாகும் நிலத்தோற்றங்கள் .................... போன்ற நாடுகளில் அதிகம் காணப்படுகின்றன.**
அ) இங்கிலாந்து, அயர்லாந்து ஆ) சீனா, ரஷ்யா
இ) சுவிட்சர்லாந்து, நார்வே ஈ) ஸ்பெயின், டென்மார்க்
[விடை: இ) சுவிட்சர்லாந்து, நார்வே]

**7. முதுநிலையில் ஆறுகள் மிகவும் குறைவான வேகத்தில் வளைந்து செல்லுதல் .................... எனப்படும்.**
அ) எஸ்கர் ஆ) டிரம்ளின் இ) அரெட்டு ஈ) மியான்டர்
[விடை: ஈ) மியான்டர்]

### II. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | சர்க்கு | – 1. | பெரிய அளவிலான பனிக்கட்டிகள் நகர்வு |
| ஆ) | அரெட்டு | – 2. | கடலில் பகுதியாக அமிழ்ந்திருப்பவை |
| இ) | மேட்டர்ஹார்ன் | – 3. | நாற்காலி வடிவ பள்ளங்கள் |
| ஈ) | பனியாறு | – 4. | சிகரம் போன்ற பிரமிடு வடிவம் |
| உ) | பனியாறு குடா | – 5. | கத்தி முனை போன்ற கூரிய வடிவம் |

[விடை: அ) - 3, ஆ) - 5, இ) - 4, ஈ) - 1, உ) - 2]

### III. சுருக்கமாக விடையளி.

**1. பாறை உரிதல் என்றால் என்ன?**

விடை: பாறை உரிதல் (Exfoliation)

வெப்பம் மற்றும் குளிர்ச்சியின் மாறுபாடு காரணமாக உருண்டையான பாறைகளின் மேற்பரப்பு வெங்காயத் தோல் உரிவது போன்று அடுக்கடுக்காக உரித்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு பாறை சிதைவுறும் நிகழ்வு பாறை உரிதல் எனப்படுகிறது. பாறை மேல் தகடு உரிதல் (Sheeting) மற்றும் பாறை நொறுங்குதல் (Shattering) பாறை போன்றவையும் உரிதலின் வேறு வகைகளாகும்.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net
This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**2. நிலத்தோற்ற வாட்டம் அமைக்கும் செயல்முறைகள் என்றால் என்ன?**

**விடை:** (i) இயற்கை காரணிகளான ஆறுகள், நிலத்தடி நீர், காற்று, பனியாறுகள் மற்றும் கடலலைகள் புவியின் மேற்பரப்பை சமன்படுத்துகின்றன. இச்செயலே சமன்படுத்துதல் செயல்முறை (Gradation) எனப்படும். மேற்கண்ட காரணிகள் அதன் செயல்பாடுகளினால் நாளடைவில் புவியின் மேற்பரப்பில் பல்வேறு நிலத்தோற்றங்களை உருவாக்குகிறன.

(ii) நில வாட்டம் அமைக்கும் செயல்முறைகள் இரண்டு செயல்பாடுகளைக் கொண்டது. அரிப்பினால் சிதைவுறுதல் (Degradation) மற்றும் படிவுகளினால் நிரப்பப்படுதல் (Aggradation) ஆகும். நிலத்தின் மேற்பரப்பை தேய்வுறச் செய்தலே அரிப்பினால் சமப்படுத்துதல் (Degradation) எனப்படும். இயற்கைக் காரணிகளால் நிலத்தோற்றங்களை உருவாக்குதலே படிவுகளினால் நிரப்பப்படுதல் (Aggradation) எனப்படும்.

**3. காளான் பாறை எவ்வாறு உருவாகிறது? அது எங்கு காணப்படுகிறது?**

**விடை: காளான் பாறை:**

மென் மற்றும் கடினப் பறைகளைக்கொண்ட பாறை அடுக்குகளின் அடிப்பகுதியில் காணப்படும் மென்பாறைகள் காற்றினால் தொடர்ந்து அரிக்கப்படும் போது அப்பாறைகள் காளான் போன்ற வடிவத்தைப் பெறுகின்றன. இவ்வாறு அரிக்கப்பட்டு உருவான பாறைகள் காளான் பாறைகள் அல்லது பீடப்பாறைகள் (Pedestal rocks) எனப்படுகின்றன. இவ்வகையானப் பாறைகள் இராஜஸ்தானில் உள்ள ஜோத்பூரில் காணப்பப்படுகின்றன.

**4. டெட்ரா ரோஸா என்றால் என்ன?**

**விடை: டெட்ரா ரோஸா (இத்தாலிய மொழியில் 'செம்மண்'):**

சுண்ணாம்பு நிலப்பிரதேசங்களில் உள்ள சுண்ணாம்பு மண் கரைந்து சிதைவுற்ற பின்னர் அதிலுள்ள எஞ்சிய செம்மண் இங்கு படியவைக்கப்படுவதால் இந்நிலத்தோற்றம் உருவாக்கப்படுகிறது. இம்மண் சிகப்பு நிறமாக காணப்பப்படுவதற்கு அதிலுள்ள இரும்பு ஆக்ஸைடு (Iron Oxide) காரணமாகும்.

## IV. வேறுபடுத்துக.

**1. கண்டப்பனியாறு மற்றும் பள்ளத்தாக்குப் பனியாறு.**

**விடை:**

| கண்டப்பனியாறு | பள்ளத்தாக்குப் பனியாறு |
|---|---|
| கண்டங்களில் அடர்ந்த பனியால் மூடப்பட்டிருக்கும் பரந்த நிலப்பரப்பு கண்டப்பனியாறு எனப்படுகிறது. | பனி மூடிய மலைத் தொடர்களில் இருந்து உற்பத்தியாகும் பனியாறு பள்ளத்தாக்கு பனியாறு எனப்படுகிறது. |

**2. 'V' வடிவப் பள்ளத்தாக்கு மற்றும் 'U' வடிவப் பள்ளத்தாக்கு**

**விடை:**

| வ.எண் | 'V' வடிவப் பள்ளத்தாக்கு | 'U' வடிவப் பள்ளத்தாக்கு |
|---|---|---|
| (i) | ஆற்றின் அரித்தல் செய்கையால் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றம். | பனியாறுகளால் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றம் |
| (ii) | ஆற்றின் செங்குத்தான அரித்தல் செய்கையால் மலைகளில் உருவாக்கப்படுகிறது. ஆழமான மற்றும் அகலமான நிலத்தோற்றம் கொண்டது. | ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் வழியே பனியாறுகள் நகரும்போது அப்பள்ளத்தாக்குகள் மேலும் ஆழமாகவும், அகலமாகவும் அரிக்கப்படுகின்றன. இவ்வாறு இவை உருவாக்கப்படுகின்றன. |




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

3. துணை ஆறு மற்றும் கிளை ஆறு

விடை:

| வ.எண் | துணை ஆறு | கிளை ஆறு |
|---|---|---|
| (i) | முதன்மை ஆற்றுடன் இணையும் அனைத்து சிற்றாறுகளும் துணை ஆறுகள் ஆகும். | முதன்மை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஆறுகள். |
| (ii) | எ.கா. பவானி ஆறு | எ.கா. கொள்ளிடம் ஆறு |

## V. காரணம் கூறு.

1. **இயற்பியல் சக்திகளால் பாறைகள் இரசாயன மாற்றம் ஏதும் அடையாமல் உடைபடுகின்றன.**

விடை: பகல் நேரத்தில் அதிக வெப்பத்தின் காரணமாக பாறைகள் விரிவடைகின்றன. இரவு நேரத்தில் அதிகக் குளிரின் காரணமாக அவை சுருங்குகின்றன. இத்தொடர்ச்சியான நிகழ்வின் காரணமாக பாறைகளில் விரிசல் ஏற்பட்டு அவை உடைந்து சிதறுகின்றன.

2. **டெல்டா பகுதி வேளாண்மை அதிக லாபத்தைத் தருகிறது.**

விடை: டெல்டாக்களில் உள்ள வண்டல் படிவுகள் மென்மையானதாகவும், தாதுக்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. (உதாரணம்) காவிரி டெல்டா.

## VI. விரிவான விடையளி.

1. **நிலத்தோற்றங்களின் மூன்று நிலைகளை விவரி.**

விடை: **முக்கிய நிலத்தோற்றங்கள்:**

(i) முதல் நிலை நிலத்தோற்றம் கண்டங்களும், கடல்களும்.

(ii) இரண்டாம் நிலை நிலத்தோற்றம் – கண்டங்களிலும், கடல்களிலும் காணப்பப்படும் மலைகள், பீடபூமிகள், சமவெளிகள்.

(iii) குறு நிலத்தோற்றங்கள்.

(iv) மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் – டெல்டா, பனியாறு குடாக்கள், மணல்மேடுகள், கடற்கரை, பள்ளத்தாக்கு, சர்க், காளான் பாறை, சுண்ணாம்புப் பாறை, குகை போன்றவை.



2. **அலைகளின் அரித்தலால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்களை விவரி.**

விடை: **அலைகளின் அரித்தலால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் (Erosional landforms)**

கடல் ஓங்கல், அலை அரிமேடை, கடல் குகை, கடல் வளைவு, கடல் தூண், கடற்கரை மணல் திட்டு மற்றும் நீண்ட மணல் திட்டு போன்றவை கடல் அலை அரித்தலால் உருவாக்கப்படும் நிலத்தோற்றங்கள் ஆகும்.

**கடல் குகை (Sea cave):**

கடல் அலைகள் தொடர்ந்து கடல் ஓங்கல்களின் மீது மோதுவதால் அடிப்பகுதி அரிக்கப்பட்டு துவாரம் போன்ற அமைப்பை ஏற்படுத்துகின்றன. இவையே கடல் குகைகள் எனப்படுகின்றன.

**கடல் வளைவு (Sea Arch):**

அருகருகிலுள்ள இரு கடற்குகைகளின் நீட்டு நிலங்கள் மேலும் அரிக்கப்படுவதால் அவை இணைந்து ஒரு வளைவு போன்ற அமைப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வளைவுகள் கடல் வளைவுகள் எனப்படுகின்றன. உதாரணம்: நீல் தீவு (அந்தமான் நிக்கோபார்)

**கடல் தூண் (Stack):**

கடல் வளைவுகள் மேலும் அரிக்கப்படும் போது அதன் வளைவுகள் உடைந்து விழுகின்றன. இவ்வாறு உடைந்து விழுந்த கடல்வளைவின் ஒரு பகுதி கடலை நோக்கி அமைந்து, ஒரு தூண் போன்று காட்சியளிக்கும். இதுவே கடல் தூண் (Stack) எனப்படும். உதாரணம் – ஸ்காட்லாந்தில் உள்ள ஓல்ட் மேன் ஆஃப் ஹோய் (Old man of hoy).

**கடல் ஓங்கல் (Sea cliffs):**

கடலை நோக்கி இருக்கும் பாறைகள் மீது கடல் அலைகள் மோதுவதால் அப்பாறைகள் அரிக்கப்பட்டு வன்சரிவைக் கொண்ட செங்குத்துப் பாறைகள் உருவாகின்றன. செங்குத்தான சுவர் போன்று காணப்படும் இப்பாறைகள் ஓங்கல்கள் எனப்படுகின்றன.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**அலை அரிமேடை (Wave cut platforms):**
ஓங்கல்களின் மீது அலைகள் மோதுவதால் சற்று உயரத்தில் அரித்தல் ஏற்பட்டு அலை அரிமேடை தோன்றுகிறது. அலை அரிமேடை, பென்ச், திட்டு (Shelf), திடல் (Terrace), சமவெளி (Plain) எனவும் அழைக்கப்படுகின்றன.

3. **அலையின் படிவு நிலத்தோற்றங்களை விளக்குக.**

**விடை: அலையின் படிவு நிலத்தோற்றங்கள்:**

**கடற்கரை (Beach):**
கடல் அலைகளால் அரிக்கப்பட்ட மணல் மற்றும் சரளைக்கற்கள் கடலோரத்தில் படியவைக்கப்படுவதே கடற்கரையாகும். இது கடல் அலைகளின் மிக முக்கியமான ஆக்கச்செயலாகும். உதாரணம்-மும்பையின் ஜுஹு கடற்கரை, சென்னையின் மெரினா கடற்கரை, ஒடிசாவின் பூரி கடற்கரை.

**மணல் திட்டு (Bar):**
கடற்கரையில் மணற் படிவுகளால் ஆன நீண்ட நிலத்தோற்றமே மணல் திட்டு எனப்படும். இம்மணல் திட்டு பெரும்பாலும் கடற்கரைக்கு இணையாகக் காணப்படும்.

**நீண்ட மணல் திட்டு (Spit):**
மணல் திட்டின் ஒரு முனை நிலத்தோடு இணைந்தும் மறுமுனை கடலை நோக்கி நீண்டும் காணப்படும். இந்நீண்ட நிலத்தோற்றம் நீண்ட மணல் திட்டு எனப்படும். நீண்ட மணல் திட்டுகள் பொதுவாக ஓத பொங்கு முகங்களில் காணப்படும். இவ்வகை நிலத்தோற்றம் ஆந்திராவில் உள்ள காக்கிநாடாவில் காணலாம்.



✶ ✶ ✶

## அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க எழுதுக.** **(4 × 1 = 4)**

1. பாறைகளின் சிதைவுறுதலும் அழிதலும் .................... என்று அழைக்கப்படுகிறது.
   அ) வானிலைச் சிதைவு ஆ) அரித்தல்
   இ) கடத்துதல் ஈ) படியவைத்தல்
2. கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் .................. .
   அ) கடல் அலை அரித்தல் ஆ) ஆற்று நீர் அரித்தல்
   இ) பனியாறு அரித்தல் ஈ) காற்றின் படியவைத்தல்
3. உலகிலேயே மிக அதிக உயரமான நீர்வீழ்ச்சி .................. நீர்வீழ்ச்சியாகும்.
   அ) நயாகரா ஆ) ஏஞ்சல்
   இ) விக்டோரியா ஈ) ஜோக்
4. முதுநிலையில் ஆறுகள் மிகவும் குறைவான வேகத்தில் வளைந்து செல்லுதல் .................... எனப்படும்.
   அ) எஸ்கர் ஆ) டிரம்ளின்
   இ) அரெட்டு ஈ) மியான்டர்

**II. பொருத்துக** **(5 × 1 = 5)**

| | | | |
|---|---|---|---|
| 1. காளான் பாறை | - | (அ) | கடல் அலைச் செயல் |
| 2. எஸ்கர் | - | (ஆ) | நாற்காலி வடிவ பள்ளங்கள் |
| 3. ஓங்கல் | - | (இ) | கத்திமுனை போன்ற கூரிய வடிவம் |
| 4. சர்க்கு | - | (ஈ) | பணியாற்றின் செயல்பாடு |
| 5. அரெட்டு | - | (உ) | ஏயோலியன் |


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**III. சுருக்கமாக விடையளி** **(2 × 2 = 4)**

1. வானிலைச் சிதைவு வரையறு.
2. குறுட்டு ஆறு என்றால் என்ன?

**IV. வேறுபடுத்துக.** **(2 × 2 = 4)**

1. டெல்டா மற்றும் ஓத பொங்கு முகம்.
2. கல்விழுது மற்றும் கல்முளை

**V. காரணம் கூறுக.** **(2 × 2 = 4)**

1. வெப்பம் மற்றும் ஈரப்பதம் நிறைந்த மண்டலங்களில் இரசாயனச் சிதைவு அதிகமாக ஏற்படுகிறது.
2. பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு.

**VI. விரிவான விடையளி** **(1 × 4 = 4)**

1. வானிலை சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.

## விடைகள்

**I.** 1. (அ) வானிலைச் சிதைவு

2. (அ) கடல் அலை அரித்தல்

3. (ஆ) ஏஞ்சல்

4. (ஈ) மியான்டர்

**II.** 1. – (உ), 2. – (ஈ), 3. – (அ), 4. – (ஆ), 5. – (இ)

**III.** 1. பார்க்க, வினா எண் IV - 1

2. பார்க்க, வினா எண் IV - 4

**IV.** 1. பார்க்க, வினா எண் VI - 2

2. பார்க்க, வினா எண் VI - 3

**V.** 1. பார்க்க, வினா எண் V - 1

2. பார்க்க, வினா எண் VI - 4

**VI.** 1. பார்க்க, வினா எண் VII - 1

✶ ✶ ✶




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# அலகு 3

# வளிமண்டலம்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. ...................... உயிர் வாழ இன்றியமையாத வாயுவாகும்.**
அ) ஹீலியம் ஆ) கார்பன்-டை ஆக்ஸைடு
இ) ஆக்சிஜன் ஈ) மீத்தேன் **[விடை: இ) ஆக்சிஜன்]**

**2. வளிமண்டலத்தில் கீழாக உள்ள அடுக்கு ...................... ஆகும்.**
அ) கீழடுக்கு ஆ) மீள் அடுக்கு இ) வெளியடுக்கு ஈ) இடையடுக்கு
**[விடை: அ) கீழடுக்கு]**

**3. ...................... வானொலி அலைகளை பிரதிபலிக்கிறது.**
அ) வெளியடுக்கு ஆ) அயன அடுக்கு இ) இடையடுக்கு ஈ) மீள் அடுக்கு
**[விடை: இ) இடையடுக்கு]**

**4. புவியின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தின் சராசரி அளவு ..................**
அ) 12° C ஆ) 13° C இ) 14° C ஈ) 15° C
**[விடை: ஆ) 13° C]**

**5. வாயு நிலையிலிருந்து திரவ நிலைக்கு நீரானது மாறுகின்ற செயல்பாட்டினை ...................... என்று அழைக்கிறோம்.**
அ) பொழிவு ஆ) ஆவியாதல் இ) நீராவிப்போக்கு ஈ) சுருங்குதல்
**[விடை: அ) பொழிவு]**

**6. ...................... புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.**
அ) சூரியன் ஆ) சந்திரன் இ) நட்சத்திரங்கள் ஈ) மேகங்கள்
**[விடை: அ) சூரியன்]**

**7. அனைத்து வகை மேகங்களும் ...................... ல் காணப்படுகிறது.**
அ) கீழடுக்கு ஆ) அயன அடுக்கு இ) இடையடுக்கு ஈ) மேலடுக்கு
**[விடை: அ) கீழடுக்கு]**

**8. ...................... செம்மறி ஆட்டு மேகங்கள் என்று அழைக்கப்படுகிறது.**
அ) இடைப்பட்ட திரள் மேகங்கள் ஆ) இடைப்பட்ட படை மேகங்கள்
இ) கார்படை மேகங்கள் ஈ) கீற்றுப்படை மேகங்கள்
**[விடை: அ) இடைப்பட்ட திரள் மேகங்கள்]**

**9. பருவக்காற்று என்பது ...................... .**
அ) நிலவும் காற்று ஆ) காலமுறைக் காற்றுகள்
இ) தலக்காற்று ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
**[விடை: ஆ) காலமுறைக் காற்றுகள்]**

Padasalai
www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**3. இந்தியாவில் மக்களாட்சிப் பற்றிய உங்களது கருத்து என்ன?**

விடை: (i) சமுத்துவம், சுதந்திரம், சமூக நீதி, பொறுப்புணர்வு மற்றும் அனைவருக்கும் மதிப்பளித்தல் போன்ற அடிப்படை மக்களாட்சிப் பண்புகளை மக்கள் மனதில் கொண்டு செயல்படும் போது மக்களாட்சி மேலும் துடிப்பானதாகவும் வெற்றிகரமானதாகவும் இருக்கும்.

(ii) மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள் மற்றும் நடத்தைகள் ஆகியவை மக்களாட்சியின் தலையாய கொள்கைகளுடன் பொருத்திச் செயல்பட வேண்டும்.

(iii) எனவே மக்களாட்சியின் இலக்குகளை நடைமுறைபடுத்த மக்களே தங்களை முன்மாதிரியாக பங்கெடுத்துக் கொள்ளவும், கடமையுணர்வோடு செயல்படவும், தங்களுக்குள் பொறுப்புணர்வை உருவாக்கவும், தமக்களிக்கப்பட்ட வாய்ப்புகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும்.

## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்:

**1. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன என்பதை வகுப்பறையில் கலந்துரையாடு.**

விடை: வயது வந்தோர் வாக்குரிமை என்பது இந்தியாவில் 18 வயது நிரம்பிய அனைவரும் தேர்தல்களின் தங்கள் வாக்குகளைச் செலுத்த உரிமையுள்ளவர்கள் ஆவர். இதுவே வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பதாகும்.

முக்கியத்துவம் - இதன் மூலம் நல்ல தலைவர்கள், ஆட்சியாளர்கள் யார் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு வாக்களிக்க முடியும். ஊழல் புரிகின்ற அரசியல்வாதிகளை விடுத்து அவர்களுக்கு வாக்களிக்காமல் செய்யலாம். இதன் மூலம் நல்ல மக்களாட்சி பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க முடியும்.

**2. மக்களாட்சி என்பது “சிறுபான்மையினரை மதிக்கும் பெரும்பான்மையினரின் ஆட்சி”- கலந்துரையாடு.**

விடை: (i) பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்தாலும், சிறுபான்மையினத்தவரின் உரிமைகளை பாதுகாப்பதுதான் மக்களாட்சி.

(ii) இந்திய அரசியலமைப்புச் சட்டம் எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளை வழங்குகிறது.

(iii) இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்ற கொள்கையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

(iv) மதச்சார்பான, மொழிசார்பான சிறுபான்மையினருக்கு, அவர்களின் சொந்த கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி நடத்திக் கொள்ள உரிமை வழங்கப்பட்டுள்ளது.

(v) மதம், ஜாதி, மொழி ஆகியவற்றில் எந்த பாகுபாடும் இன்றி அரசாங்கம் செயல்படும்.

(vi) அரசியலமைப்பின் பிரிவு 30-ன்படி, சிறுபான்மையினருக்கான உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(vii) எல்லா வகையான சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அரணாக இந்தியா விளங்குகிறது.

**3. உங்கள் வகுப்பறையில் மாதிரி தேர்தலை நடத்துக.**

விடை: மாதிரி தேர்தல் நடைமுறைகள் : தீர்வு – உங்கள் ஆசிரியர் உதவியுடன் கீழ்கண்ட நடைமுறைகளை பயன்படுத்தி வகுப்பறை மாதிரித் தேர்தலை நடத்தவும்.

(i) தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் விண்ணப்பங்கள் பெறுதல்.

(ii) வாக்குச் சீட்டுகளை தயாரித்தல்

(iii) தேர்தல் நாள் (தேர்தலை நடத்துதல்)

(iv) வாக்குகளை எண்ணுதல்

(v) முடிவுகளை அறிவித்தல்.

**4. இந்தியாவில் மக்களாட்சியின் நிறை, குறைகளைப் பற்றி வகுப்பறையில் குழு விவாதம் செய்க.**

விடை: **மக்களாட்சியின் நிறைகள்:**

(i) பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசாங்கம்.
(ii) சமத்துவம் சகோதரத்துவமும்.
(iii) மக்களிடையே பொறுப்புணர்ச்சி.
(iv) தல சுய ஆட்சி
(v) அனைவருக்கும் வளர்ச்சியும் வளமும்
(vi) மக்கள் இறையாண்மை
(vii) சகோதர மனப்பான்மை மற்றும் கூட்டுறவு

**மக்களாட்சியின் குறைகள்:**

(i) மறைமுக அல்லது பிரதிநிதித்துவ முறை கொண்ட மக்களாட்சி.
(ii) வாக்காளர்களிடையே போதிய ஆர்வமின்மை மற்றும் குறைந்த வாக்குப்பதிவு
(iii) சில சமயங்களில் நிலையற்ற அரசாங்கத்திற்கு வழி வகுக்கிறது.
(iv) முடிவெடுக்கும் முறையில் காலதாமதம்

**5. தற்போதைய தேர்தல் ஆணையர்களின் பெயர் மற்றும் படங்களைச் சேகரி.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

**6. குடியரசுத் தலைவர் மற்றும் துணைகுடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோரின் படங்களை கி.பி.1947 முதல் தற்பொழுது வரை சேகரித்து துணுக்குப் புத்தகம் தயாரிக்க.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.



## VII. சிந்தனை வினா:

**1. சர்வாதிகாரத்தின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறதா? அத்தகைய நாட்டில் பொதுமக்கள் கருத்து பற்றி என்ன அணுகுமுறை இருக்கும்?**

விடை: சர்வாதிகாரத்தின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை கண்டிப்பாக இல்லை என்றே கூறலாம். அத்தகைய நாட்டில் பொதுமக்களின் கருத்துக்களை சர்வாதிகார ஆட்சியில் உள்ளவர்கள் காது கொடுத்துக் கூட கேட்கமாட்டார்கள். ஏன் என்றால் மக்களின் கருத்துகளுக்கும் அவர்களின் உணர்வுகளுக்கும் அவர்கள் மதிப்பதில்லை. அவர்களை ஆட்சியில் உள்ளவர்கள் அடிமைகளாக கருதுகிறார்கள். ஆட்சியில் உள்ளவர்களின் சொல்லுக்கும் கட்டளைக்கும் மக்கள் விருப்பம் இல்லையென்றாலும் கூட கீழ்படிந்து நடக்க வேண்டும். இல்லை என்றால் கடுமையான தண்டனைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

**2. குடிமக்களின் அமைதியான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மக்களாட்சி எவ்வாறு வழிவகுக்கிறது? விளக்குக.**

விடை: மக்களாட்சி என்பது மக்கள் தங்கள் ஆட்சியாளர்களை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளிக்கும் ஆட்சி முறையே ‘மக்களாட்சி’ ஆகும். இம்முறையின் மக்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய கருத்துக்களைத் தெரிவிக்கவும், ஓர் அமைப்பை ஏற்படுத்தவும், போராட்டங்கள் நடத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர். மேலும் மக்கள் தங்களது பிரதிநிதிகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் அனைத்து மக்களுக்கும் சமத்துவம் சகோதரத்தும் கிடைக்க வழிவகைச் செய்கிறது. மக்கள் அனைவரும் பாதுகாப்பாகவும், உரிமைகள் நிலைநாட்டவும், இறையாண்மை மற்றும் அனைவருக்குமான வளர்ச்சியும் வளமும் கிடைக்க மக்களாட்சி வழிவகை செய்கிறது. குடிமக்களின் அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் மக்களாட்சி மிகவும் உறுதுணையாக உள்ளது.

**வாழ்வியல் திறன்:**

**குறிப்பிட்ட நாடுகளைகளைத் தேர்வு செய். ஒவ்வொரு நாட்டையும் ஆராய்ந்து அந்நாட்டின் அரசாங்கம்- உயர்குடியாட்சி, முடியாட்சி, தனிநபராட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்கள் ஆட்சி, மக்களாட்சி, குடியரசு - இவற்றில் எந்த வகையைச் சார்ந்தது என்பதைக் கூறவும்: பின்னர் அரசாங்க வகைகளைத் தீர்மானிக்க உதவும் பண்புகளை விவரி.**

**விடை:**

| நாட்டின் பெயர் | அரசாங்கத்தின் வகை | அரசாங்க வகைகளைத் தீர்மானிக்க உதவும் பண்புகள் |
|---|---|---|
| 1. ஸ்பெயின் | உயர்குடியாட்சி | உயர்குடியினரால் நடத்தப்பட்டு அமைக்கப்படும் அரசாங்கம். |
| 2. ஓமம் | முடியாட்சி | ஒரு நபரால் அமைக்கப்படும் அரசாங்கம் |
| 3. பிரான்ஸ் | மக்களாட்சி | மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும். |
| 4. வடகொரியா | தனிநபர் ஆட்சி | முழு அதிகாரம் கொண்ட ஒரு நபரால் அமைக்கப்படும். |
| 5. வெனிசுலா | சிறுகுழு ஆட்சி | மக்களின் சிறிய குழு ஒன்று ஒரு நாட்டையோ (அ) அமைப்பையோ கட்டுப்படுத்துவது |
| 6. வாட்டிகன் | மதகுருமார்களின் ஆட்சி | கடவுளின் பெயரால், மத குருமார்களே அமைக்கப்படும் அரசாங்கம் |
| 7. ஆஸ்திரேலியா | குடியரசு | மக்களிடமே அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடமும் உயரிய அதிகாரம் இருக்கின்ற அரசாங்க முறை |

## கூடுதல் வினாக்கள்



### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1. முன்னுரிமை பெற்ற சிலரால் நடத்தப்படும் ஆட்சிமுறை.**

அ) சிறுகுழு ஆட்சி ஆ) நாடாளுமன்றம்
இ) மக்களாட்சி ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை: அ) சிறுகுழு ஆட்சி]

**2. எந்த நாட்டில் மக்களாட்சித் தோன்றியது?**

அ) இந்தியா ஆ) சுவிட்சர்லாந்து
இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) ஏதென்ஸ்

[விடை: ஈ) ஏதென்ஸ்]

**3. உயர்குடியினரால் நடத்தப்பட்டு அமைக்கப்படும் அரசாங்கம்..........................**

அ) முடியாட்சி ஆ) சிறுகுழு ஆட்சி இ) உயர் குடியாட்சி ஈ) தனிநபர் ஆட்சி

[விடை: இ) உயர் குடியாட்சி]

**4. தம்மை கடவுளாக பாவித்துக்கொண்டோ [அல்லது] கடவுளின் பெயராலோ மதகுருமார்களே ஆட்சி செய்வது ........................ நாட்டில் நடைபெறுகிறது.**

அ) சவுதி அரேபியா ஆ) வெனிசுலா இ) வாட்டிகன் ஈ) ஓமன்

[விடை: இ) வாட்டிகன்]

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


5. **"உண்மையான மக்களாட்சி என்பது கீழ்நிலையிலுள்ள ஒவ்வொரு கிராம மக்களால் செயல்படுத்தப்படுவதாகும்" ...................... எனக் கூறியவர்.**
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மகாத்மா காந்தி இ) கிளெஸ்தனிஸ் ஈ) அரிஸ்டாட்டில்
[விடை: ஆ) மகாத்மா காந்தி]

6. **குடியரசு (Republic) எனும் சொல் முதன்முதலில் ...................... நாட்டில் வடிவமைக்கப்பட்டது.**
அ) கிரேக்கம் ஆ) இந்தியா இ) ரோம் ஈ) ஆஸ்திரேலியா
[விடை: இ) ரோம்]

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள் .......................... [விடை: 26, ஜனவரி]
2. இந்தியப் பிரதமரை .......................... நியமிக்கிறார். [விடை: குடியரசுத் தலைவர்]
3. மறைமுக மக்களாட்சி .......................... என்றும் அழைக்கப்படுகிறது.
[விடை: பிரதிநிதித்துவ மக்களாட்சி]

## III. பொருத்துக.

1. உயர்குடியாட்சி - அ) வடகொரியா
2. முடியாட்சி - ஆ) பிரான்ஸ்
3. தனி நபர் ஆட்சி - இ) பூடான்
4. சிறு குழு ஆட்சி - ஈ) இங்கிலாந்து
5. மக்களாட்சி - உ) சீனா

[விடை: 1. - ஈ), 2. - இ), 3. - அ), 4. - உ), 5. - ஆ)]

## IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி:

அலகு 1

1. **அரசாங்கம் என்பது என்ன?**

விடை: அரசாங்கம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியது. அவை உயர் குடியாட்சி, முடியாட்சி, தனி நபர் ஆட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்கள் ஆட்சி, மக்களாட்சி மற்றும் குடியரசு.

2. **மக்களாட்சி என்றால் என்ன?**

விடை: (i) மக்களாட்சி என்பது மக்கள் தங்கள் ஆட்சியாளர்களை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளிக்கும் முறையே "மக்களாட்சி" ஆகும்.

(ii) இம்முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மட்டுமே ஆட்சி செய்ய முடியும்.

(iii) மக்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய கருத்துக்களைத் தெரிவிக்கவும், ஓர் அமைப்பை ஏற்படுத்தவும், போராட்டங்களை நடத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

3. **சுதந்திரம் அடைந்த பின், இந்தியாவின் முதல் தேர்தல் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

விடை: இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், மக்களவையின் முதல் பொதுத் தேர்தல் 1951ம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் முதல் 1952ம் ஆண்டு பிப்ரவரி 21ம் நாள் வரை பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது. மொத்தம் இருந்த 489 இடங்களில் 364 இடங்களில் வெற்றி பெற்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சியை அமைத்தது. சுதந்திர இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## V. விரிவான விடையளி:

**1. இந்தியாவில் தேர்தல் நடைமுறைகளை விவரி.**

விடை: இந்திய அரசு பகுதி கூட்டாட்சி அமைப்பு முறையைப் பெற்றுள்ள நாடு. இங்கே நடுவண் அரசு (நாடாளுமன்றம்), மாநில அரசு (சட்டமன்றம்), உள்ளாட்சி அமைப்புகள் (ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி) ஆகிய நிலைகளில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தியாவில் பொதுத் தேர்தலை, இந்திய தேர்தல் ஆணையம் நடத்துகிறது. தேசிய அளவில், இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையான மக்களவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற பிரதம அமைச்சரை, இந்திய அரசின் தலைவரான குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல்கள் மூலம் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேலும் இரு ஆங்கிலோ–இந்தியர்களைக் குடியரசுத்தலைவர் மக்களவைக்கு நியமனம் செய்கிறார்.

நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவை உறுப்பினர்களை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும் கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறப்பாகச் சேவை புரிந்த 12 பேரை மாநிலங்கள் அவைக்கு குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்.

✶✶✶

# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. (4 × 1 = 4)

1. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். ளளள

அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
இ) பிரான்ஸ் ஈ) வாட்டிகன்

2. கூற்று (A) : நேரடி மக்களாட்சி சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ளது.
காரணம் (R) : மக்கள் நேரடியாக முடிவெடுப்பதில் பங்கு பெறுகிறார்கள்

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

3. வாக்குரிமையின் பொருள் :

அ) தேர்ந்தெடுப்பதற்கான உரிமை ஆ) ஏழைகளுக்கு வாக்களிக்கும் உரிமை
இ) வாக்களிக்கும் உரிமை ஈ) பணக்காரர்களுக்கு வாக்களிக்க உரிமை

4. முழு அதிகாரத்துடன் கொண்ட ஒரு அரசாங்க முறை

அ) சிறுகுழு ஆட்சி ஆ) மதகுருமார்களின் ஆட்சி
இ) மக்களாட்சி ஈ) தனிநபராட்சி

5. முன்னுரிமை பெற்ற சிலரால் நடத்தப்படும் ஆட்சிமுறை.

அ) சிறுகுழு ஆட்சி ஆ) நாடாளுமன்றம்
இ) மக்களாட்சி ஈ) இவற்றில் எதுவுமில்லை

www.Padasalai.Net
This is Only for Sample
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **(4 × 1 = 4)**

1. இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு ..................
2. இந்தியா ..................... மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.
3. இந்தியாவில் நாடாளுமன்ற கட்டிடத்தை வடிவமைத்தவர்கள் ..................... மற்றும் .................... ஆவர்.
4. இரண்டு வகையான மக்களாட்சி ............................ மற்றும் ..................... ஆகும்.
5. நேரடி மக்களாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு ..........

**III. பொருத்துக.** **(4 × 1 = 4)**

| | | |
|---|---|---|
| 1. வாக்குரிமை | - | (அ) சீனா |
| 2. சாணக்கியர் | - | (ஆ) பூடான் |
| 3. சிறுகுழு ஆட்சி | - | (இ) அர்த்த சாஸ்திரம் |
| 4. முடியாட்சி | - | (ஈ) 18 |

**IV. சுருக்கமாக விடையளி.** **(3 × 2 = 6)**

1. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
2. நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சியினை வேறுபடுத்துக.
3. மக்களாட்சி என்றால் என்ன?

**V. விரிவான விடையளி** **(1 × 5 = 5)**

1. மக்களாட்சியின் நிறை, குறைகள் யாவை?



## விடைகள்

**I.**
1. ஈ) வாட்டிகன்
2. அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது
3. இ) வாக்களிக்கும் உரிமை
4. ஈ) தனிநபராட்சி
5. அ) சிறுகுழு ஆட்சி

**II.**
1. நவம்பர் 26, 1949
2. மறைமுக
3. எட்வின் லுட்டியன்ஸ், ஹெர்பர்ட் பேக்கர்
4. நேரடி மக்களாட்சி, மறைமுக மக்களாட்சி
5. சுவிட்சர்லாந்து (அல்லது) கிரேக்க நகர அரசுகள்

**III.** 1. - (ஈ), 2. - (இ), 3.- (அ), 4. - (ஆ)

**IV.**
1. பார்க்க, வினா எண் IV - 1
2. பார்க்க, வினா எண் IV - 3
3. பார்க்க, கூடுதல் வினா எண் IV - 2

**V.** 1. பார்க்க, வினா எண் VI - 4

✶ ✶ ✶


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# அலகு 2 தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

1. **கீழ்க்கண்ட நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.**
அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
இ) கனடா ஈ) ரஷ்யா **[விடை: ஆ) இங்கிலாந்து]**

2. **இந்திய தேர்தல் ஆணையம் ஒரு**
அ) சுதந்திரமான அமைப்பு ஆ) சட்டபூர்வ அமைப்பு
இ) தனியார் அமைப்பு ஈ) பொது நிறுவனம்
**[விடை: அ) சுதந்திரமான அமைப்பு]**

3. **இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு.**
அ) பிரிவு 280 ஆ) பிரிவு 315 இ) பிரிவு 314 ஈ) பிரிவு 325
**[சரியான விடை : பிரிவு 324 என்பதாகும் (வினாவில் கொடுக்கப்படவில்லை]**

4. **இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி தேர்தல் ஆணையத்தைப் பற்றி கூறுகிறது?**
அ) பகுதி III ஆ) பகுதி XV இ) பகுதி XX ஈ) பகுதி XXII
**[விடை: ஆ) பகுதி XV]**

5. **பல்வேறு அரசியல் கட்சிகளைத் தேசியக் கட்சியாகவோ அல்லது மாநிலக் கட்சியாகவோ அங்கீகரிப்பவர்/ அங்கீகரிப்பது.**
அ) குடியரசுத் தலைவர் ஆ) தேர்தல் ஆணையம்
இ) நாடாளுமன்றம்
ஈ) தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர்
**[விடை: ஆ) தேர்தல் ஆணையம்]**

6. கூற்று (A) : **இந்திய அரசியலமைப்புச் சுதந்திரமாக செயல்படும் தேர்தல் ஆணையத்திற்கு வழிவகைச் செய்கிறது.**
காரணம் (R) : **இது நாட்டின் சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்த உறுதி செய்கிறது.**
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது
**[விடை: அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது]**

7. **நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு.**
அ) 2012 ஆ) 2013 இ) 2014 ஈ) 2015
**[விடை: இ) 2014]**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

8. **அழுத்தக்குழுக்கள் எனும் சொல்லினை உருவாக்கிய நாடு**

அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து

இ) முன்னாள் சோவியத் யூனியன் ஈ) இந்தியா

[விடை: அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்]

9. **கூற்று (A) : இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக்குழுக்கள் காணப்படுகின்றன.**
**காரணம் (R) : அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதை போல இந்தியாவில் அழுத்தக் குழுக்கள் வளர்ச்சியடையவில்லை.**

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை

இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

[விடை: ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. இந்திய தேர்தல் ஆணையம் ......................... உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. [விடை: மூன்று]
2. தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள்........................ [விடை: ஜனவரி 25]
3. இந்தியாவில் ........................... கட்சி முறை பின்பற்றப்படுகிறது. [விடை: பல]
4. 2017ல் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகளின் எண்ணிக்கை ..................... [விடை: ஏழு]
5. நர்மதா பச்சோவோ அந்தோலன் என்பது ஒரு .................... [விடை: அழுத்தக்குழு]

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசியக் கட்சி | (i) | வணிகக் குழுக்கள் |
| 2. | ஒரு கட்சி ஆட்சி முறை | (ii) | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 3. | இரு கட்சி ஆட்சி முறை | (iii) | சீனா |
| 4. | அழுத்தக் குழுக்கள் | (iv) | ஏழு |

[விடை: 1. - iv, 2. - iii, 3. - ii, 4. - i]



## IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி:

1. **இந்தியாவிலுள்ள தேர்தல் முறைப் பற்றி விவரி.**

விடை: (i) இந்திய தேர்தல் முறை, இங்கிலாந்தில் பின்பற்றப்படும் தேர்தல் முறையினைப் பின்பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(ii) இந்தியா ஒரு சமத்துவ, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடாகும் மற்றும் உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும்.

(iii) இந்திய அரசியலமைப்பின் ஓஏம் பகுதியில் காணப்படும், 324 முதல் 329 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள விதிமுறைக்கேற்ப தேர்தல் முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

2. **அரசியல் கட்சி என்பதன் பொருளை விளக்குக.**

விடை: (i) ஓர் அரசியல் கட்சி என்பது அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நிகழ்ச்சி நிரல்களையும், குறிப்பிட்டக் கொள்கைகளையும் கொண்ட மக்கள் குழுவின் அமைப்பாகக் காணப்படும்.

(ii) தலைவர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் எனும் மூன்று அங்கங்களை ஓர் அரசியல் கட்சி பெற்றுள்ளது.

3. **இரு கட்சி ஆட்சிமுறை மற்றும் பல கட்சி ஆட்சிமுறையினை வேறுபடுத்துக.**

விடை:

| | இருகட்சி ஆட்சிமுறை | பல கட்சி ஆட்சிமுறை |
|---|---|---|
| 1 | இரு முக்கிய கட்சிகள் மட்டுமே பங்கு பெறுவது ஆகும். | இரண்டிற்கும் மேற்பட்ட கட்சிகள் பங்கு பெறுவது ஆகும். |
| 2 | (எ.கா) அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து | (எ.கா) இந்தியா, இலங்கை, பிரான்ஸ், இத்தாலி |

**4. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?**

விடை: (i) அழுத்தக் குழுக்கள் என்ற சொல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் உருவாக்கப்பட்டது. பொது நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழு என்று அழைக்கப்படுகிறது.

(ii) அழுத்தக் குழுக்கள் 'நலக்குழுக்கள்' அல்லது தனிப்பட்ட நலக்குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

## V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி:

**1. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.**

விடை: **நிறைகள்:**

(i) வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகளை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதால் நேரடித் தேர்தல் முறையானது வலுவான மக்களாட்சி கொண்டதாகக் கருதப்படுகிறது.

(ii) தகுதியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

(iii) மக்கள் அரசியலில் முக்கிய பங்கு வகிக்க ஊக்கமளிக்கிறது.

(iv) மக்களைத் தீவிரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுகிறது.

**குறைகள்:**

(i) அதிக செலவு உடையது

(ii) எழுத்தறிவற்ற வாக்காளர்கள், பொய்யானப் பரப்புரைகளால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

(iii) சில நேரங்களில் சாதி, மதம் மற்றும் இன்ன பிற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் பிரச்சாரங்கள் மற்றும் பொய்யானப் பரப்புரைகளாலும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

(iv) சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையை உறுதி செய்வது என்பது தேர்தல் ஆணையத்திற்கு மிக பெரும் சவாலாக உள்ளது.

(v) சில அரசியல் கட்சி வேட்பாளர்கள், வாக்காளர்கள் மீது பணம், பொருள் அல்லது பணிகள் மூலமாக தங்களது செல்வாக்கைச் செலுத்துவது என்பது ஒரு சவாலாகும்.

(vi) தேர்தல் பரப்புரைகளின் போது சில நேரங்களில் வன்முறைகள், பதற்றங்கள், சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது.

**2. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை?**

விடை: **அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்:**

(i) கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. பெரும்பாலான மக்களாட்சி நாடுகளில் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் இடையேதான் கடும் போட்டிகள் நிலவுகின்றன.

(ii) கட்சிகள் தங்களைத் தேர்ந்தெடுக்க அவர்களது கொள்கைகளையும், திட்டங்களையும் தேர்தல் தொகுதிகளில் முன்னிறுத்துகின்றனர்.

(iii) நாட்டில் சட்டங்கள் இயற்றுவதில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன.

(iv) முறையாக சட்டங்கள் நாடாளுமன்றங்களிலும், சட்ட மன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

(v) அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினை அமைத்து, அவற்றை வழி நடத்துகின்றனர்.

(vi) தேர்தலின் தோல்வியடைந்த கட்சிகள் எதிர்கட்சியாக பங்களிப்புச் செய்கின்றன. இவை அரசின் குறைகள் மற்றும் தவறான கொள்கைகளை எதிர்த்து பல்வேறு விமர்சனம் செய்கின்றன.

(vii) மக்கள் கருத்திற்கு அரசியல் கட்சிகள் வடிவம் கொடுக்கின்றன. மேலும் அவை முக்கிய நிகழ்வுகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.

(viii) அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன.

**3. இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள் யாவை?**

விடை: அரசின் கொள்கையில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் குறிப்பிட்ட நலன்களைப் பெறச் செயல்படும் நலக் குழுக்கள் அழுத்தக் குழுக்கள் எனப்படும். அவை எந்த அரசியல் கட்சியுடனும் அணி சேருவதில்லை. ஆனால் மறைமுக முடிவுகள் எடுப்பதில் அதிக செல்வாக்கு உடையவை.

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


(i) அரசியல் பங்கேற்பு
(ii) கல்வி
(iii) கொள்கை உருவாக்கம், கொள்கை அமலாக்கம்
(iv) பிரதிநிதித்துவப் படுத்துதல் போன்ற பல வகையான செயல்பாடுகளை அழுத்தக் குழுக்கள் மேற்கொள்கின்றன.

**(i) அரசியல் பங்கேற்பு :**

(1) அரசியலில் மற்றொரு முகம் அழுத்தக் குழுக்கள் என்று கூறலாம்.
(2) மனுக்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்ற அரசியல் செயல்பாடுகள் மூலம் மக்கள் ஆதரவை திரட்டி தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்துகின்றன.
(3) இத்தகைய செயல்பாடுகள் இளைய சமுதாயத்தினரை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

**(ii) கல்வி:**

(1) பல அழுத்தக் குழுக்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது, இணையத்தளம் பராமரிப்பு, அரசுக் கொள்கைகள் மீது கருத்துகள் வெளியிடுவது மற்றும் உயர்நிலைக் கல்வியாளர்கள், அறிவியலாளர்கள் மட்டுமல்லாமல் முக்கிய பிரபலங்களின் கருத்தை திரட்டி வல்லுநர்களின் ஆதரவினைப் பெறுவது ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன.

**(iii) கொள்கை உருவாக்கம்:**

(1) அழுத்தக் குழுவினர் கொள்கைகளை உருவாக்குவர்கள் இல்லை என்ற போதிலும் அரசுக்குத் தகவல் அளிப்பதிலும், ஆலோசனைகளை வழங்குவதிலும் இந்த அழுத்தக் குழுவினர் வலுவான பங்களிப்புச் செய்து வருகின்றனர்.
(2) கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் தொடர்ந்து ஆலோசனை தருகின்றனர்.



## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்:

**1. தேசியக் கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சாதனைகளை ஒப்பிடுக.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

## VII. சிந்தனை வினா:

**1. தேர்தல்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் முக்கியத்துவமாகக் கருதப்படுகின்றது. ஏன்?**

விடை: **தேர்தல்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் முக்கியத்துவமாகக் கருதப்படுவது:**

(i) மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி 'மக்களாட்சி' என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார்.
(ii) உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாக இந்தியா விளங்குகிறது. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றன.
(iii) 18 வயது நிரம்பிய பல கோடி வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துகிறார்கள்.
(iv) நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டசபைக்கும் உறுப்பினர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல்களில் வாக்களிக்கிறார்கள்.
(v) தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் – அதாவது பிரதிநிதிகள் – அந்தந்த தொகுதி மக்களின் நல்வாழ்வு, முன்னேற்றம், தொகுதி மேம்பாடு, கட்டமைப்பு வளர்ச்சிகள் போன்றவற்றில் தங்கள் கடமையைச் செய்து, இந்தியா ஒரு சிறந்த வல்லரசு நாடாக பணியாற்றுவார்கள் என்பது மக்களின் நம்பிக்கை.
(vi) ஆகவே, மக்கள் பிரதிநிதிகளை தேர்தல்களின் மூலம் தேர்ந்தெடுப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**2. வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் முக்கியத்துவம் என்ன?**

விடை: வயது வந்தோர் வாக்குரிமை என்பது இந்தியாவில் 18 வயது நிரம்பிய அனைவரும் தேர்தல்களின் தங்கள் வாக்குகளைச் செலுத்த உரிமையுள்ளவர்கள் ஆவர். இதுவே வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பதாகும்.

முக்கியத்துவம் - இதன் மூலம் நல்ல தலைவர்கள், ஆட்சியாளர்கள் யார் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு வாக்களிக்க முடியும். ஊழல் புரிகின்ற அரசியல்வாதிகளை விடுத்து அவர்களுக்கு வாக்களிக்காமல் செய்யலாம். இதன் மூலம் நல்ல மக்களாட்சி பிரதிநிதிகளை தேர்ந்கெடுக்க முடியும்.

**3. மக்களாட்சியின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.**

விடை: மக்களாட்சியின் நிறைகள்:

(i) சிறந்த அரசாங்கம் அமைய வழி செய்கிறது.
(ii) மக்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பு கிடைக்கிறது.
(iii) மக்கள் கல்வி அறிவு பெற உதவுகிறது.
(iv) சமத்துவம் நிலைநாட்டப்படுகிறது.
(v) நாட்டு நலம் மேம்படுகிறது.
(vi) அமைதியான முறையில் அரசாங்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

மக்களாட்சியின் குறைகள்:

(i) பெரும்பான்மையினரின் கருத்துகளுக்கு மதிப்பு / முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாயுள்ளது.
(ii) தனி மனிதனின் கருத்துக்களை ஊக்கப்படுத்துவதில்லை.
(iii) அதிக செலவினங்களை கொண்டுள்ளது.
(iv) அரசாங்க பதவியில் இருப்பவர்களையும், பொது மக்களையும் அரசியல் கட்சியினர் கட்டுபடுத்துகின்றனர்.
(v) லஞ்சம் பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

மேற்கூறிய கருத்துகளை கொண்டு விவாதம் செய்யலாம்.

**4. பல கட்சி ஆட்சி முறையினை விவாதி.**

விடை: இரண்டிற்கும் மேற்பட்ட கட்சிகள் பங்கு பெறுவது ஆகும். (எ.கா.) இந்தியா, இலங்கை, பிரான்ஸ், இத்தாலி பல கட்சிகள் இருப்பதால் ஒவ்வொரு கட்சியும் ஆட்சியை பிடிக்கும் ஆர்வத்தில் நல்ல திட்டங்களை சிந்தித்துச் செயல்பட முடியும். இரண்டு கட்சிகளின் தலைவர்களை மட்டுமே நம்பாமல், புதிய கருத்துக்களையும், புதிய கோணத்தில் பிரச்சினைகளை தீர்க்கும் சக்தியுள்ள புதிய தலைவர்களையும் தேர்வு செய்ய முடியும் இவை அனைத்து பல கட்சியின் நிறைகள் ஆகும்.

குறைகள் :- பல கட்சி முறையில் ஊழல், பிராந்திய உணர்வு, ஒரு சார்புடைய முதலியவற்றை ஊக்குவிக்கக் கூடும். ஆளும் கட்சி மக்களின் நன்மையைக் கருதாமல், தன் ஆட்சியாளர்களின் நன்மையைக் கருத வாய்ப்புண்டு. ஒரு கட்சியில் இருந்து மற்றொரு கட்சிக்கு தாவுகின்ற கட்சித் தாவல் நடைபெறுவதில் மூலம் அரசின் நிலைத்தன்மைக்கு ஊறு ஏற்படும்.

## VII. வாழ்வியல் திறன்:

**உங்களுடைய வகுப்பறையில் மாதிரி வாக்குப் பதிவை நடத்துக.**

விடை: மாதிரி வாக்குப் பதிவை நடத்துதல் : தீர்வு – உங்கள் ஆசிரியர் உதவியுடன் கீழ்கண்ட நடைமுறைகளை பயன்படுத்தி உங்கள் வகுப்பறைகள் மாதிரித் தேர்தலை நடத்தவும்.

(i) தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் விண்ணப்பங்கள் பெறுதல்.
(ii) வாக்குச் சீட்டுகளை தயாரித்தல்
(iii) தேர்தல் நாள் (தேர்தலை நடத்துதல்)
(iv) வாக்குகளை எண்ணுதல்
(v) முடிவுகளை அறிவித்தல்.

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1. தமிழ்நாட்டில் ......................... காலத்தில் குடவோலை என்னும் வாக்களிக்கும் முறை வழக்கத்தில் இருந்தது.**

அ) சேரர்கள் ஆ) சோழர்கள் இ) பாண்டியர்கள் ஈ) பல்லவர்கள்

[விடை: ஆ) சோழர்கள்]

**2. 2017-ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் ............................ தேசியக் கட்சிகள் உள்ளன.**

அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8 [விடை: இ) 7]

**3. அழுத்தக்குழுக்கள் ...................... என்றும் அழைக்கப்படுகின்றன.**

அ) நாகரிகக்குழுக்கள் ஆ) கல்விக்குழுக்கள் இ) நலக்குழுக்கள் ஈ) சான்றோர் குழுக்கள்

[விடை: இ) நலக்குழுக்கள்]

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. அழுத்தக்குழு என்ற சொல் ...................... நாட்டில் உருவாக்கப்பட்டது [விடை: அமெரிக்க ஐக்கிய]
2. ......................... ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் முதல்முறையாக NOTA அறிமுகப்படுத்தப்பட்டது. [விடை: 2014]
3. ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் சட்டம் இயற்றும் அமைப்பு ......................... ஆகும். [விடை: நாடாளுமன்றம்/சட்ட மன்றம்]



### III. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மாநிலக் கட்சிகள் | - | அ) | லோக் சபா |
| 2. | சோழர்கள் | - | ஆ) | இளம் பதாகா சங்கம் |
| 3. | மக்களவை | - | இ) | மேற்கண்ட எவரும் இல்லை |
| 4. | NOTA | - | ஈ) | குடவோலை |
| 5. | YBA | - | உ) | பிராந்தியக் கட்சிகள் |

[விடை : 1. - உ), 2. - ஈ), 3. - அ), 4. - இ), 5. - ஆ)]

### IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி:

**1. இந்திய குடியரசுத் தலைவர் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

விடை: இந்திய குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் குழாம் (Electoral College) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவை

(i) பாராளுமன்றத்தின் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

(ii) இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்.

**2. நோட்டா (NOTA) என்பது பற்றி விளக்குக.**

விடை: (i) ஒரு மக்களாட்சி நடைபெறும் நாட்டில் உள்ள வாக்காளர்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரையும் தேர்வு செய்ய விருப்பம் இல்லை எனில், வாக்காளர்கள் மேற்கண்ட எவரும் இல்லை (NOTA - None Of The Above) எனும் ஓர் பொத்தானை வாக்கு இயந்திரத்தில் தேர்வு செய்யலாம். இந்திய தேர்தல் நடத்தை விதிகள், (1961)-இல் சட்டத்தின் விதி எண் 49-O இம்முறை பற்றி விவரிக்கிறது.

(ii) 2014ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதல் முறையாக NOTA அறிமுகப்படுத்தப்பட்டது. உலகில் NOTAவை அறிமுகப்படுத்திய 14ஆவது நாடு இந்தியாவாகும்.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**3. 'மாநிலக் கட்சிகள்' என்பவை யாவை?**

**விடை: மாநிலக் கட்சிகள்:** ஏழு தேசிய கட்சிகளைத் தவிர, நாட்டின் பெரும்பான்மையான முக்கிய கட்சிகளை "மாநிலக் கட்சி"களாக தேர்தல் ஆணையம் வகைப்படுத்தியிருக்கிறது. இக்கட்சிகள் பொதுவாகப் "பிராந்தியக் கட்சிகள்" என்று குறிப்பிடுவர். மக்களவை தேர்தலிலோ அல்லது மாநில சட்டசபைத் தேர்தலிலோ ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களை வெற்றி பெற்ற அல்லது குறிப்பிட்ட சதவிகித வாக்குகளைப் பெற்றதன் அடிப்படையில் இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகாரம் அளிக்கிறது.

## V. விரிவான விடையளி:

**1. மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கை விவரி.**

**விடை: மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு:**

(i) மக்களாட்சியில், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல் இரு கட்சி ஆட்சி முறையோ அல்லது இந்தியா, பிரெஞ்சு நாடுகளைப்போல் பல கட்சி ஆட்சி முறையோ இருக்கலாம்.

(ii) பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக ஆளும் கட்சியும், எஞ்சிய மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக எதிர் கட்சியும் இருக்கும்.

(iii) மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்கங்களிலும் எதிர்கட்சித் தலைவர் முக்கிய பங்கை வகிக்கிறார்.

(iv) இவர் கேபினட் அமைச்சர் தகுதி பெறுகிறார். இவர் பொது நடவடிக்கைகளை பாதிக்கும் ஆளும் கட்சியின் தவறான கொள்கைகளை எதிர்க்கிறார்.

(v) பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனுக்காகச் செலவிடப்படும் பொதுப் பணத்தை ஆய்வு செய்கிறார்.

(vi) இதே போன்று அவர் மத்தியக் கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கிறார்.

(vii) மக்களாட்சியில் எதிர்க்கட்சிகள் ஒரு பொறுப்பானப் பங்கினையும் மக்களின் நியாயமானக் கோரிக்கைகள் மற்றும் விருப்பத்தையும் பிரதிபலிக்கின்றது.

**2. மறைமுகத் தேர்தல் என்றால் என்ன? அதன் நிறை, குறைகள் யாவை?**

**விடை: மறைமுகத் தேர்தல் :** மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வாக்களித்துத் தேர்வு செய்யும் முறையே மறைமுகத் தேர்தல் ஆகும். குடியரசுத் தலைவர் தேர்தலில் இத்தகைய முறையானது கடைபிடிக்கப்படுகிறது.

**நிறைகள்:**

(i) மறைமுகத் தேர்தல்கள் நடத்த செலவு குறைவானதாகும்.

(ii) மறைமுக தேர்தல் முறையானது பெரிய நாடுகளுக்கு உகந்தது.

**குறைகள்:**

(i) வாக்காளர் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால் ஊழல், கையூட்டு, குதிரை பேரம் ஆகியவற்றிற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படும்.

(ii) மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நேரடியாக பங்கு பெறாமல், மாறாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளே இம்முறையில் பங்குபெறுவதால், மக்கள் பிரதிநிதித்துவம் குறைந்த மக்களாட்சி முறையாக காணப்படுகிறது. எனவே, மக்களின் உண்மையான விருப்பத்தை பிரதிபலிக்காமல் இருக்க நேரிடுகிறது.

✶ ✶ ✶




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** (5 × 1 = 5)

1. இந்திய தேர்தல் ஆணையம் ஒரு
அ) சுதந்திரமான அமைப்பு
ஆ) சட்டபூர்வ அமைப்பு
இ) தனியார் அமைப்பு
ஈ) பொது நிறுவனம்

2. நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு.
அ) 2012 ஆ) 2013
இ) 2014 ஈ) 2015

3. இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி தேர்தல் ஆணையத்தைப் பற்றி கூறுகிறது?
அ) பகுதி III ஆ) பகுதி XV
இ) பகுதி XX ஈ) பகுதி XXII

4. தமிழ்நாட்டில் .......................... காலத்தில் குடவோலை என்னும் வாக்களிக்கும் முறை வழக்கத்தில் இருந்தது.
அ) சேரர்கள் ஆ) சோழர்கள்
இ) பாண்டியர்கள் ஈ) பல்லவர்கள்

5. அழுத்தக்குழுக்கள் ............... என்றும் அழைக்கப்படுகின்றன.
அ) நாகரிகக்குழுக்கள்
ஆ) கல்விக்குழுக்கள்
இ) நலக்குழுக்கள்
ஈ) சான்றோர் குழுக்கள்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (5 × 1 = 5)

1. இந்திய தேர்தல் ஆணையம் ........................ உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
2. தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள்........................
3. நர்மதா பச்சோவோ அந்தோலன் என்பது ஒரு ....................
4. அழுத்தக்குழு என்ற சொல் ...................... நாட்டில் உருவாக்கப்பட்டது
5. ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் சட்டம் இயற்றும் அமைப்பு .......................... ஆகும்.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | சோழர்கள் | - (அ) | ஏழு |
| 2. | NOTA | - (ஆ) | வணிகக் குழுக்கள் |
| 3. | தேசியக்கட்சி | - (இ) | மேற்கண்ட எவரும் இல்லை |
| 4. | அழுத்தக் குழுக்கள் | - (ஈ) | குடவோலை |

**IV. சுருக்கமாக விடையளி.** (3 × 2 = 6)

1. அரசியல் கட்சி என்பதன் பொருளை விளக்குக.
2. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?
3. நோட்டா (NOTA) என்பது பற்றி விளக்குக.

**V. விரிவான விடையளி** (1 × 5 = 5)

1. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.

## விடைகள்

**I.**
1. அ) சுதந்திரமான அமைப்பு
2. இ) 2014
3. ஆ) பகுதி XV
4. ஆ) சோழர்கள்
5. இ) நலக்குழுக்கள்

**II.**
1. மூன்று
2. ஜனவரி 25
3. அழுத்தக்குழு
4. அமெரிக்க ஐக்கிய
5. நாடாளுமன்றம்/சட்ட மன்றம்

**III.** 1. - (ஈ), 2. - (இ), 3.- (அ), 4. - (ஆ)

**IV.**
1. பார்க்க, வினா எண் IV - 2
2. பார்க்க, வினா எண் IV - 4
3. பார்க்க, கூடுதல் வினா எண் IV - 2

**V.**
1. பார்க்க, வினா எண் V - 1

அலகு 2

★★★

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



அலகு 3

# மனித உரிமைகள்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:**

**1. இன ஒதுக்கல் (Apartheid) என்னும் கொள்கையைப் பின்பற்றிய நாடு ...............**

அ) தென் சூடான் ஆ) தென் ஆப்பிரிக்கா இ) நைஜீரியா ஈ) எகிப்து

**[விடை: ஆ) தென் ஆப்பிரிக்கா]**

**2. ஒரு அரசாங்கத்தின் உருவாக்கம் மற்றும் நிர்வாகத்தில் பங்குபெறுவது .................**

அ) சமூகம் ஆ) பொருளாதாரம் இ) அரசியல் ஈ) பண்பாடு

**[விடை: இ) அரசியல்]**

**3. ஒரு 10 வயது பையன் கடையில் வேலைப்பார்த்துக் கொண்டிருக்கிறான் - எந்த உரிமையைப் பயன்படுத்தி அவனை மீட்பாய்?**

அ) சமத்துவ உரிமை

ஆ) சுதந்திர உரிமை

இ) குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை

ஈ) சமய சுதந்திர உரிமை **[விடை: இ) குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை]**

**4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு ..................... .**

அ) 20 நாட்கள் ஆ) 25 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள்

**[விடை: இ) 30 நாட்கள்]**

**5. பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?**

**i) மாநில மனித உரிமை ஆணையம் 1993ல் நிறுவப்பட்டது**

**ii) இது ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் பெற்றுள்ளது.**

**iii) இதன் அதிகாரம் மாநில எல்லையைக் கடந்தும் செயல்படும்**

**iv) இது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரைக்கலாம்**

அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (i) மற்றும் (iii) சரி

இ) (i), (ii) மற்றும் (iii) சரி ஈ) (ii), (iii) மற்றும் (iv) சரி

**[விடை: ஈ) (ii), (iii) மற்றும் (iv) சரி]**



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

6. **கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி.**

**கூற்று (A) : உரிமைகளும் கடமைகளும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை**

**காரணம் (R) : நாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை உண்டு. பிற மதத்தினர் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்துவதுடன் அவர்களின் உணர்வையும் மதிக்க வேண்டும்.**

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம்.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல.

இ) (A) சரி, ஆனால் (R) தவறு

ஈ) (A) தவறு, ஆனால் (R) சரி

[விடை: அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம்]

7. **ஐ. நா. சபையின்படி ..................... வயது நிறைவு பெறாதோர் குழந்தை ஆவார்.**

அ) 12 ஆ) 14 இ) 16 ஈ) 18 [விடை: ஈ) 18]

8. **..................... கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.**

அ) இலக்கியம் ஆ) அமைதி இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்

[விடை: ஆ) அமைதி]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. உலகளாவிய மனித உரிமை பிரகடனம் ..................... பிரிவுகளைக் கொண்டுள்ளது. [விடை: 30]
2. அடிப்படைக் கடமைகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ............... சட்ட திருத்தத்தின்படி சேர்க்கப்பட்டது. [விடை: 42 வது]
3. தேசிய மனித உரிமை ஆணையம் ..................... ஆண்டு அமைக்கப்பட்டது [விடை: 1993]
4. பெண்களுக்கான மூதாதையர் சொத்துரிமை சட்டத்தை 1989இல் நடைமுறைப்படுத்திய இந்திய மாநிலம் ..................... . [விடை: தமிழ்நாடு]

அலகு 3

## III. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| 1. | வாக்களிக்கும் உரிமை | - அ) | பண்பாட்டு உரிமை |
| 2. | சங்கம் அமைக்கும் உரிமை | - ஆ) | சுரண்டலுக்கெதிரான உரிமை |
| 3. | பாரம்பரியத்தை பாதுகாக்கும் உரிமை | - இ) | அரசியல் உரிமை |
| 4. | இந்து வாரிசுரிமைச் சட்டம் | - ஈ) | சுதந்திர உரிமை |
| 5. | குழந்தை தொழிலாளர் | - உ) | 2005 |

[விடை: 1 - இ, 2 - ஈ, 3 - அ, 4 - உ, 5 - ஆ]

## IV. சுருக்கமாக விடையளி:

1. **மனித உரிமை என்றால் என்ன?**

விடை: ஐ.நா. சபை மனித உரிமைகளைப் பின்வருமாறு வரையறுக்கிறது. இன, பாலின, தேசிய, இனக்குழு, மொழி, மதம் அல்லது வேறு தகுதி அடிப்படையைப் பொருத்து மாறுபடாமல் மனதர்களாகப் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை ஆகும். எவர் ஒருவருக்கும் இந்த உரிமையை வழங்குவதில் பாரபட்சம் காட்டக் கூடாது.

2. **அடிப்படை உரிமைகள் யாவை?**

விடை: ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும்.

**அடிப்படை உரிமைகள்**

(i) சமத்துவ உரிமை
(ii) சுதந்திர உரிமை
(iii) சுரண்டலுக்கு எதிரான உரிமை
(iv) சமய மற்றும் மனச்சான்று சுதந்திரத்திற்கான உரிமை
(v) சிறுபான்மையினருக்கான பண்பாடு மற்றும் கல்வி உரிமை
(vi) அரசமைப்புச் சட்ட வழி தீர்வுகளுக்கான உரிமை.

**3. குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா. சபை அறிவித்துள்ளவை யாவை?**

**விடை:** ஐ.நா.சபை 1989ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.

(i) வாழ்வதற்கான உரிமை
(ii) குடும்பச் சூழலுக்கான உரிமை
(iii) கல்விக்கான உரிமை
(iv) சமூகப் பாதுகாப்பு உரிமை
(v) பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை
(vi) விற்பது அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை
(vii) குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கெதிரான உரிமை

**4. அரசியலமைப்புத் தீர்வு வழிகளுக்கான உரிமையைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.**

**விடை:** அடிப்படை உரிமைகள் அரசமைப்புச் சட்டத்தினால் உத்திரவாதம் தரப்பட்டவை. ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில், அரசமைப்பு தருகின்ற அரசமைப்புச் சட்ட வழி தீர்வழிகளுக்கான உரிமையின்படி அவர் நீதிமன்றத்தை அணுகலாம். நீதிமன்றம் அக்குடிமகனுக்குரிய உரிமையை மீட்டளிக்குமாறு அரசுக்கு ஆணையிடுகிறது. இது நீதிப்பேராணை என்று அழைக்கப்படுகிறது

**5. போக்சா (POCSO) - வரையறு.**

**விடை:** போக்சா (POCSO) சட்டம் - பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம். (The **P**rotection **O**f **C**hildren from **S**exual **O**ffence Act, 2012).

(i) போக்சா சட்டம் என்பது பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டமாகும்.
(ii) இது ஒவ்வாரு நிலையிலும் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது.
(iii) இது குழந்தைகளின் உடல், மன, அறிவுசார் மற்றும் சமூக வளர்ச்சியினை உறுதி செய்கிறது.
(iv) பாலியல் வன் கொடுமையில் ஈடுபடுபவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்க வழிவகை செய்கிறது. மேலும் பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவினை ஈடுகட்டும் வகையில் அபராதமும் இச்சட்டத்தின்படி விதிக்கப்படுகிறது.

**6. குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் தேவைப்படுவது ஏன்?**

**விடை:** (i) குழந்தைகள் அனைவரும் அடிப்படை மனித உரிமைகள் கொண்ட தனிநபர்கள் என்று கருதுதல் வேண்டும். ஏனெனில் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்கள்.

(ii) குழந்தைகள் கடத்தப்படுதல், விற்பனை செய்தல் நடைபெற ஏழ்மை, பாலினப்பாகுபாடு மற்றும் சிதறிய குடும்பங்கள் ஆகியன முக்கியக் காரணங்களாகும்.

(iii) மேலும் குழந்தைகள் பொருளாதாரச் சுரண்டல், பாலியல் துன்புறுத்தல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் குழந்தைத் தொழில் ஆகிய காரணங்களுக்காக கடத்தல் அல்லது விற்பனை செய்யப்படுகின்றனர்.

(iv) எனவே இது போன்ற தொல்லைகளிலிருந்து பாதுகாக்க குழந்தைகள் மீது சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது.

**7. தொழிலாளர் நலனுக்காக பி.ஆர். அம்பேத்காரின் பங்களிப்பு யாவை?**

**விடை:** தொழிலாளர் நலனில் பி.ஆர். அம்பேத்காரின் பங்களிப்புகள்:

(i) தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு
(ii) தொழிற்சங்கங்களின் கட்டாய அங்கீகாரம்.
(iii) இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்.
(iv) தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (ஞுஎஐ).
(v) தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.
(vi) நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கால வைப்பு நிதி.

**8. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆனால் பெண்களுக்கான தனிச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. நியாயப்படுத்துக.**

விடை: (i) சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சமபாதுகாப்பு என்பதே சமத்துவ உரிமையாகும்.

(ii) ஆனால் நடைமுறை சமுதாயத்தில் பெண்களுக்கு பாலின அடிப்படையில் வேறுபடுத்தலும், ஒதுக்குதலும், பாலியல் வன்கொடுமைகளும் சட்டத்திற்கு புறம்பாக நடத்தப்படுகின்றன.

(iii) எனவே பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் பெற்றிடவும், உரிமைகளை உறுதிப்படுத்திடவும் பல்வேறு தனிச்சட்டங்கள் பெண்களுக்கென நடைமுறைப்படுத்தப்படுவது நியாயமே ஆகும்.

**9. டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் தொழிலாளர் நலனுக்கு அளித்த பங்களிப்பைப் பற்றி ஏதேனும் இரண்டு கூறு.**

விடை: (i) தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (ESI).

(ii) தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.

**10. வேறுபடுத்துக - மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள்.**

| மனித உரிமைகள் | அடிப்படை உரிமைகள் |
|---|---|
| (i) மனிதன் தன்மானத்தோடும், சுதந்திரத்தோடும் வாழுகின்ற உரிமைகள் இவை. | (i) அரசமைப்பில் காணப்படும் குடிமக்களின் ஆதார உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும். இவை சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படலாம். |
| (ii) மனிதனின் வாழ்வில் அடிப்படைத் தேவைகளுக்கான உரிமைகள் இதில் அடங்கியுள்ளன. இவற்றைப் பறிக்க இயலாது. | (ii) மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள உரிமைகளும், அடிப்படை உரிமைகளில் அடங்கும். |
| (iii) மனித உரிமைகள் பண்பாடு அளவில் அங்கீகரிக்கப்பட்டவை. | (iii) அடிப்படை உரிமைகள் நமது நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் உத்திரவாதம் அளிக்கப்படுகின்றன. |

அலகு 3

## V. விரிவான விடையளி.

**1. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் பற்றி ஒரு பத்தியில் விடை தருக.**

விடை: (i) உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து, கலந்து கொண்ட பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (Universal Declaration of Human Rights) மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.

(ii) 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பாரிசில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பேரறிக்கை அடிப்படை மனித உரிமைகள் உலகளவில் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் நோக்கம் கொண்டது. இது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது.

(iii) மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கையில் 30 உறுப்புகள் (articles) உள்ளன. அது சுதந்திரத்திற்கான உரிமையை உறுதி செய்வதோடு குடிமை, அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளையும் தருகிறது.

(iv) இவ்வுரிமைகள் இனம், பால், தேசியம் ஆகியவற்றைக் கடந்து அனைத்து மக்களுக்கும் பொருந்தும். ஏனெனில் மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவும், சம உரிமையோடும் பிறக்கின்றனர்.

**2. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?**

விடை: அடிப்படைக் கடமைகள் என்பவை குடிமக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ற விதத்தில் அமைந்துள்ளன. 1976 – ஆம் ஆண்டு 42வது சட்டத் திருத்தத்தின் மூலம் அவை இணைக்கப்பட்டன. அரசமைப்பு கீழ்க்கண்ட 11 அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**பள்ளி வளாகத்தில் கடைபிடிக்க வேண்டியவை :**

(i) பள்ளியின் சட்டதிட்டங்களை மதித்து நடப்பேன்.
(ii) தேசியக்கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றிற்கு உரிய மதிப்பளிப்பேன்.
(iii) சமய, மொழி, மண்டல அல்லது பிரிவு வேறுபாடுகளைக் கடந்து அனைத்து மாணவ, மாணவியர்களிடமும் சகோதர மனப்பான்மையுடன் பழகுவேன்.
(iv) மாணவிகளை இழிவு செய்யும் செயல்களில் ஈடுபடமாட்டேன்.
(v) அறிவியல் உணர்வு, மனித நேயம், பகுத்தறிவு மற்றும் சீர்திருத்த உணர்வை வளர்க்க பிற மாணவர்களுடன் இணைந்து செயல்படுவேன்.
(vi) பொதுச் சொத்தான பள்ளியின் சொத்துகளைப் பாதுகாக்கும் பொருட்டு வன்முறையில் ஒரு போது ஈடுபடமாட்டேன்.
(vii) நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட "தேசிய மாணவர் படை"யில் சேர்ந்து பயிற்சி பெறுவேன்.
(viii) பள்ளியின் புறச்சூழலைப் பாதுகாக்க நாட்டுநலப் பணித்திட்டத்தில் சேர்ந்து பணியாற்றுவேன்.
(ix) அனைத்து மாணவர்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவேன்.

3. **தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது?**

விடை: மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1993-ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் அமைக்கப்பட்டது தேசிய மனித உரிமைகள் ஆணையம். இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இவ்வமைப்பு ஒரு தலைவரையும், சில உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

**தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பணிகள் :**

(i) மனித உரிமை மீறல் அல்லது அத்தகைய மீறல் குறித்து அரசு ஊழியர் அலட்சியம் காட்டுதல் ஆகியவை மீது விசாரணை நடத்திடுதல்
(ii) மனித உரிமை மீறல் வழக்குகளில் தன்னை இணைத்துக் கொள்ளுதல்
(iii) மனித உரிமைகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஊக்குவித்தல்.
(iv) சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே மனித உரிமைக் கல்வியைப் பரப்புதல்.
(v) மனித உரிமைத் துறையில் பணியாற்றும் அரசுசாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் முயற்சிகளை ஊக்குவித்தல்.

4. **தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை?**

விடை: **தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் :**

(i) சமத்துவத்திற்கான உரிமை
(ii) பொது வேலைவாய்ப்பில் சமத்துவம்
(iii) அமைப்புகள் மற்றும் சங்கம் தொடங்குவதற்கான உரிமை
(iv) வாழ்வாதார உரிமை
(v) கடத்தலைத்தடுத்தல் மற்றும் கட்டாயத் தொழிலாளர் மற்றும் குழந்தைகள் உரிமைகளை இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கிறது.
(vi) பிரிவு 39 பி, இருபாலருக்கும் சமவேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது.
(vii) தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு
(viii) தொழிற்சங்கங்களின் கட்டாய அங்கீகாரம்.
(ix) இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்.
(x) தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (நுஎஸ்ஐ).
(xi) தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.
(xii) நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கால வைப்பு நிதி.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**5. அடிப்படை உரிமைகளை எவ்வாறெல்லாம் உன் வாழ்கையில் அனுபவிக்கின்றாய்?**

விடை: **சமத்துவ உரிமை :** சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்பதே இவ்வுரிமை ஆகும். சமயம், இனம், பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுப்படுத்தலோ, ஒதுக்குதலோ சட்டத்திற்கு புறம்பானதாகும் அவ்வாறு நடத்தப்பட்டால் ஒருவர் நீதிமன்றத்தை அணுகலாம்.

**சுதந்திர உரிமை:**

ஆறு வகையான சுதந்திர உரிமைகள் நமது அரசமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை:

(i) பேச்சுரிமை

(ii) ஆயுதமின்றி கூடும் உரிமை

(iii) சங்கங்கள் அமைக்கும் உரிமை

(iv) இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை

(v) இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாடும் உரிமை

(vi) எந்தத் தொழிலையும், வணிகத்தையும் செய்யும் உரிமை

**சுரண்டலுக்கெதிரான உரிமை :** 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை சுரங்கங்கள், அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும். எந்த ஒரு ஒப்பந்ததாரரோ, முதலாளியோ ஒரு தொழிலாளியை அவரது விருப்பத்திற்கு எதிராக ஒரு வேலையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்த முடியாது.

**சமயச் சுதந்திரம் மற்றும் பகுத்தறிவுக்கான உரிமை :** குடிமக்கள் தாங்கள் விரும்பிய சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் உரிமை அளிக்கிறது. குடிமக்கள் சில சமய நம்பிக்கைகளை ஏற்று பின்பற்றுவதற்கு அல்லது சமய நம்பிக்கைகளின்றி தங்கள் மனசாட்சிபடி வாழ்வதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

**பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் :** அரசமைப்புச் சட்டம் பண்பாட்டினைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் உரிமையை வழங்கியுள்ளது. கல்விக்கூடங்களை அமைக்கவும், நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் நமக்கு உரிமை உள்ளது. சமயச்சார்பு கல்வி அளிக்க மக்கள் மத நிறுவனங்களை நிறுவலாம். அரசு அதற்கு மானியங்களை வழங்குகின்றது. இருப்பினும், சாதி, நிற, இனம் அல்லது சமய வேறுபாட்டினைக் காரணம் கூறி யாருக்கும் இவ்வகை நிறுவனங்களில் அனுமதி மறுத்தல் கூடாது.



## VI. செயல்பாடுகள்:

**1. பாலியியல் ரீதியான துன்புறுத்தல், சுரண்டல் மற்றும் கடத்தல்களில் இருந்து நீ எவ்வாறு உன்னைப் பாதுகாத்துக் கொள்வாய்.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

**2. "என் நாடு என் உரிமைகள்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

## கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க:

**1. கீழ்க்கண்டவற்றுள் எந்த உரிமை அதிகாரத்துவத்தின் மீது மக்களின் செல்வாக்கை அதிகரிக்க செய்கிறது?**

அ) சமத்துவ உரிமை ஆ) தகவல் அறியும் உரிமைச்சட்டம்

இ) கல்வியின் மீதான உரிமை ஈ) சுதந்திர உரிமை

[விடை: ஆ) தகவல் அறியும் உரிமைச்சட்டம்]

2. அரசமைப்புச் சட்ட திருத்தம் 44ன் படி நீக்கப்பட்ட அடிப்படை உரிமை ...................... .
அ) சொத்துரிமை ஆ) மதச் சுதந்திரத்துக்கான உரிமை
இ) சுரண்டலுக்கெதிரான உரிமை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
[விடை: அ) சொத்துரிமை]

3. உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை ஐ.நா. சபையில் ................. ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
அ) 1948 ஆ) 1949 இ) 1848 ஈ) 1849
[விடை: அ) 1948]

4. .................. வகையான சுதந்திரங்கள் நமது அரசமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.
அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8 [விடை: ஆ) 6]

5. மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் ................ ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது.
அ) 2002 ஆ) 2005 இ) 1945 ஈ) 2007
[விடை: ஈ) 2007]

6. இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் .................. ஆண்டு நடைமுறைபடுத்தப்பட்டது.
அ) 2000 ஆ 2009 இ) 2012 ஈ) 2008
[விடை: ஆ) 2009]

7. பதினான்கு வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று கூறும் பிரிவு .................. ஆகும்.
அ) பிரிவு 24 ஆ) பிரிவு 45 இ) பிரிவு 18 ஈ) பிரிவு 12
[விடை: அ) பிரிவு 24]

8. தமிழ்நாடு இந்து வாரிசு உரிமைச் சட்டம் ...................... ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
அ) 1987 ஆ) 1989 இ) 1988 ஈ) 1985
[விடை: ஆ) 1989]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. .................... வயதிற்குட்பட்ட சிறுவர்களைச் சுரங்கங்கள் அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும். [விடை: 14]
2. அரசியலமைப்புச் சட்டங்களுக்கான உரிமையின்படி .................... நீதிமன்றத்தை அணுகியதன் மூலம் தனது வேலைவாய்ப்பு உரிமையை வென்றார். [விடை: பிரத்திகா யாஷினி]
3. ஐ.நா.சபை 1989 ஆம் ஆண்டு அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்ட தேதி ............. [விடை: நவம்பர் 20]
4. ஐக்கிய நாடுகள் சபை ..................... வயது வரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. [விடை: 18]
5. பச்பன் பச்சாவ் அந்தோலன் (இளமையைக் காப்பாற்றும் இயக்கம்) போன்ற பல குழந்தைகள் உரிமை அமைப்புகளின் நிறுவனர் .................. . [விடை: கைலாஷ் சத்யார்த்தி]
6. இந்தியாவின் குழந்தைகளுக்கான முதல் 24 மணி நேர கட்டணமில்லா அவசர தொலைதொடர்பு சேவை எண் .................... ஆகும். [விடை: 1098]

## III. பொருத்துக:

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் - அ) 69%
2. பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு - ஆ) இலவச மற்றும் கட்டாயக் கல்வி
3. 
4. பிரிவு 45 - இ) நோபல் பரிசு
5. மலாலா - ஈ) 2012
6. போஸ்கோ சட்டம் - உ) 2005

[விடை: 1 - உ, 2 - அ, 3 - ஆ, 4 - இ, 5 - ஈ]

குடிமையியல்

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


## IV. சுருக்கமாக விடையளி:

**1. உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (UDHR) விளக்குக.**

விடை: (i) உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (Universal Declaration of Human Rights) மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.

(ii) 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பாரிசில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது.

(iii) இப்பேரறிக்கை அனைத்துலக நாடுகள் மற்றும் அனைத்துலக மக்களின் பொதுத்தர சாதனை ஆகும்.

**2. சமத்துவ உரிமை என்றால் என்ன?**

விடை: (i) சட்டத்தின் மூலம் அனைவரும் சமம், சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்பதே இவ்வுரிமை ஆகும்.

(iv) சமயம், இனம், பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தவோ, ஒதுக்குதலோ சட்டத்திற்குப் புறம்பானதாகும். அவ்வாறு நடத்தப்பட்டால் ஒருவர் நீதிமன்றத்தை அணுகலாம்.

**3. சுதந்திர உரிமை என்றால் என்ன?**

விடை: ஆறு வகையான சுதந்திரங்கள் நமது அரசமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை,

(i) பேச்சுரிமை

(ii) ஆயுதமின்றி கூடும் உரிமை

(iii) சங்கங்கள் அமைக்கும் உரிமை

(iv) இந்தியாவில் எந்தப் பகுதியிலும் வசிக்கும் உரிமை

(v) இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாடும் உரிமை

(vi) எந்தத் தொழிலையும் வணிகத்தையும் செய்யும் உரிமை



**4. சுரண்டலுக்கெதிரான உரிமை என்றால் என்ன?**

விடை: (i) 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களைச் சுரங்கங்கள், அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

(ii) எந்த ஒரு ஒப்பந்ததாரரோ, முதலாளியோ ஒரு தொழிலாளியை அவரது விருப்பத்திற்கு எதிராக ஒரு வேலையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்த முடியாது. இதுவே சுரண்டலுக்கெதிரான உரிமையாகும்.

**5. இந்திய மனித உரிமைகள் ஆணையம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

விடை: (i) இந்திய மனித உரிமைகள் ஆணையம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் அமைக்கப்பட்டது.

(ii) இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

(iii) இது ஒரு தலைவரையும், சில உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

(iv) இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச உடன்படிக்கையில் உத்திரவாதம் தரப்பட்டுள்ள ஒரு தனி மனிதனின் வாழ்வு, சுதந்திரம் சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் பொறுப்பேற்கிறது.

**6. பெண் தொழிலாளர் நலனுக்காக டாக்டர் பி.ஆர். அம்பேத்கரால் இயற்றப்பட்ட சட்டங்கள் யாவை?**

விடை: சுரங்கத் தொழிலாளர் பேறுகால நன்மைச் சட்டம், பெண்தொழிலாளர் நல நிதி, பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நன்மைகள், நிலக்கரிச் சுரங்கங்களில் சுரங்கப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்பட்டதற்கான தடையை மீட்டெடுத்தல் போன்ற சட்டங்கள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களால் இயற்றப்பட்டது.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## V. விரிவான விடையளி.

**1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் - விளக்குக.**

விடை: (i) தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஓர் புரட்சிகரமான சட்டமாகும். அரசு நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதற்கான இச்சட்டம் இந்தியாவில் 2005 அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது.

(ii) இச்சட்டத்தின்படி அரசு நிறுவனங்களில் தேவைப்படும் தகவல்களை எந்த ஒரு சாதாரண குடிமகனும் கோரிப் பெறலாம். தகவல்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் தகவல் வழங்கும் அதிகாரியிடமிருந்து கட்டணமாக ஒரு குறிப்பிட்டத் தொகை வசூலிக்கப்படும்.

(iii) நாட்டின் வலிமை வாய்ந்த சட்டங்களுள் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் ஒன்றாகும். இச்சட்டம் மிகவும் எளிமையானதாகவும், சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

(iv) மேலும் இச்சட்டத்தின் வாயிலாக தகவல்களைப் பெற படிக்கத் தெரியாதவர்களுக்கு பொதுத்தகவல் அலுவலர் உதவி செய்ய வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்கள் அதாவது ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு அரசுத் துறைகள், அரசுப் பள்ளிகள், நெடுஞ்சாலைத் துறைகள் போன்றவை இச்சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

**2. குழந்தைகளுக்கான உரிமைகள் ஏதேனும் நான்கு பற்றி விளக்கமாக எழுதவும்.**

விடை: **குழந்தைகளுக்கான உரிமைகள்**

(i) வாழ்வதற்கான உரிமை
(ii) கல்விக்கான உரிமை
(iii) பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை
(iv) விற்பது அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை
(v) குடும்பச் சூழலுக்கான உரிமை
(vi) சமூகப் பாதுகாப்பு உரிமை
(vii) குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கெதிரான உரிமை

(i) **வாழ்வதற்கான உரிமை:** ஒரு குழந்தை பிறப்பிற்கு முன்பே அது வாழத்தகுதி பெறுகின்றது. வாழ்வதற்கான உரிமை என்பது பிறப்புரிமை, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை மற்றும் கண்ணியமான வாழ்வு வாழும் உரிமை ஆகியனவற்றை உள்ளடக்கியது.

(ii) **கல்விக்கான உரிமை:** அரசமைப்பின் பிரிவு 21Aல் உள்ளபடி 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க 2009ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

(iii) **பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை:** குழந்தைகள் உடலளவிலோ, மனதளவிலோ பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படும்போது, மாநில அரசு அக்குழந்தைகளைப் பாலியல் சுரண்டலிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

(iv) **குழந்தை விற்பனை அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை:** குழந்தைகள் அனைவரும் அடிப்படை மனித உரிமைகள் கொண்ட தனிநபர்கள் எனக் கருதுதல் வேண்டும் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள். குழந்தைகள் விற்பனை மற்றும் கடத்தல் நடைபெற ஏழ்மை, பாலினப்பாகுபாடு, சிதறிய குடும்பங்கள் ஆகியன முக்கிய காரணங்களாகும்.

குழந்தைகள் பொருளாதாரச் சுரண்டல், பாலியல் சுரண்டல், பாலியல் துன்புறுத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் குழந்தைத் தொழில் ஆகிய காரணங்களுக்காக விற்பனை அல்லது கடத்தல் செய்யப்படுகின்றனர்.

★★★

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. (5 × 1 = 5)

1. நமது 'தேசத்தந்தை' என போற்றப்படுவர்
   அ) ஜவஹர்லால் நேரு
   ஆ) காந்தியடிகள்
   இ) ராஜேந்திரப் பிரசாத்
   ஈ) வல்லபாய் படேல்
2. இன ஒதுக்கல் கொள்க்கைக எதிராக தொடர்ச்சியாகப் போராடியவர்
   அ) டாக்டர் அம்பேத்கர்
   ஆ) நெல்சன் மண்டேலா
   இ) மலாலா
   ஈ) கிளார்க்
3. நமது அடிப்படை உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிப்பது
   அ) உச்சநீதிமன்றம் ஆ) நாடாளுமன்றம்
   இ) அரசமைப்புச் சட்டம் ஈ) அமைச்சரவை
4. 'காவலன் SOS செயலி' யை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்திய மாநிலம்
   அ) கேரளா ஆ) கர்நாடகம்
   இ) ஆந்திரா ஈ) தமிழ்நாடு
5. தமிழ்நாட்டில் திருநங்கையர்கள் _____ பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.
   அ) மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
   ஆ) பழங்குடியினர்
   இ) பிற்படுத்தப்பட்டோர்
   ஈ) ஆதிதிராவிடர்

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக. (4 × 1 = 4)

1. வெள்ளை இனத்தவர்கள் கறுப்பினத்தவரின் மீது ஆதிக்கம் செலுத்திய கொள்கை _____.
2. _______ என்பது ஒரு செயலை செய்யவோ அல்லது அந்த செயலை தடுக்கவோ, நீதிமன்றத்தால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான உத்தரவு ஆகும்.
3. நமது தேசியக் கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றை மதிப்பது நமது _______ ஆகும்.
4. பாஸ்கோ சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _______.

## III. பொருத்துக. (5 × 1 = 5)

| | | | |
|---|---|---|---|
| 1. | காந்தியடிகள் | - (அ) | குழந்தைகள் உரிமை அமைப்பு |
| 2. | மலாலா | - (ஆ) | 1989 |
| 3. | கைலாஷ் சத்யார்த்தி | - (இ) | 2009 |
| 4. | குழந்தைகள் உரிமைகள் பிரகடனம் | - (ஈ) | நோபல் பரிசு |
| 5. | கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் | - (உ) | தேசப்பிதா |

## IV. சுருக்கமாக விடையளி. (3 × 2 = 6)

1. மனித உரிமை என்றால் என்ன?
2. போக்சா (POCSO) – வரையறு.
3. சமத்துவ உரிமை என்றால் என்ன?

## V. விரிவான விடையளி (1 × 5 = 5)

1. தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை?

## விடைகள்

I. 1. ஆ) காந்தியடிகள்
2. ஆ) நெல்சன் மண்டேலா
3. இ) அரசமைப்புச் சட்டம்
4. ஈ) தமிழ்நாடு
5. அ) மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

II. 1. இன ஒதுக்கல் கொள்கை
2. நீதிப்பேராணை (Write)
3. அடிப்படைக் கடமை
4. 2012

III. 1. பார்க்க, வினா எண் IV - 1
2. பார்க்க, வினா எண் IV - 5
3. பார்க்க, கூடுதல் வினா எண் IV - 2

VI. 1. பார்க்க, வினா எண் V - 4

★★★

அலகு 3


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# அலகு 4

# அரசாங்கங்களின் வகைகள்

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ........................., ......................... ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்
[விடை: இங்கிலாந்து, பிரான்ஸ்]

2. பாராளுமன்ற ஆட்சி முறை என்றும் ................... என்னும் அழைக்கப்படுகின்றது.
[விடை: வெஸ்ட் மினிஸ்டர் அரசாங்க மாதிரி]

3. பாராளுமன்ற ஆட்சிமுறையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் ................... ஆவர்.
[விடை: பிரதமர்]

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

| எண் | நாடுகள் | நாடாளுமன்றத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | ................................ |
| 2. | நார்வே | ................................ |
| 3. | ...................................... | ஃபோக்டிங் |

விடை:

| எண் | நாடுகள் | நாடாளுமன்றத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | காங்கிரஸ் |
| 2. | நார்வே | ஸ்டார்டிங் |
| 3. | டென்மார்க் | ஃபோக்டிங் |

### III. வேறுபடுத்துக.

1. **ஒற்றையாட்சி முறை மற்றும் கூட்டாட்சி முறை.**

விடை:

| ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| சிறு நாடுகளுக்குப் பொருந்தமானது | மிகப்பெரிய நாடுகளுக்குப் பொருத்தமானது |
| அதிகாரம் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் மோதல்கள் இருப்பதில்லை | அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படுவதால் மத்திய அரசின் சர்வாதிகாரம் போக்கைத் தடுக்கிறது |
| இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இலங்கை ஆகியவை உதாரணங்களாகும் | அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் கூட்டாச்சி முறைக்கு உதாரணங்களாகும். |

Padasalai www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

**2. நாடாளுமன்ற ஆட்சிமுறை மற்றும் அதிபர் மக்களாட்சி.**

விடை:

| நாடாளுமன்ற ஆட்சிமுறை | அதிபர் மக்களாட்சி |
|---|---|
| நாடாளுமன்ற ஆட்சி முறையில் சட்டமன்றத்தில் கொள்கைகள் மற்றும் செயல்களுக்கு நிர்வாகத்துறை பொறுப்பேற்கிறது. | அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்டமன்றத்திற்கு பொறுப்பு இல்லாததாகவும் நாடாளுமன்றம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும். |
| இம்முறை பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா போன்ற பிற நாடுகளில் காணப்படுகிறது. | இவ்வரசு முறை அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. |

## IV. சுருக்கமாக விடையளி :

**1. ஒற்றையாட்சி முறை**

விடை: (i) ஒற்றை ஆட்சி முறை என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும்.

(ii) இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இலங்கை ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி :

**1. அரசமைப்பின் வகைகளைப் பட்டியலிடுக.**

விடை: **அரசமைப்பின் வகைகள் :**

(i) எழுதப்பட்ட / எழுதப்படாத அரசமைப்பு
(ii) கூட்டாட்சி / ஒற்றையாட்சி முறை
(iii) நெகிழும் தன்மையுடைய / நெகிழும் தன்மையற்ற அரசமைப்பு



**2. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை?**

விடை: **கூட்டாட்சி முறையின் நிறைகள் :**

(i) உள்ளூர் சுய ஆட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல்.
(ii) மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, நிர்வாகத்திறன்கள் மேம்பட வழிவகுக்கிறது.
(iii) மிகப் பெரிய நாடுகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது.
(iv) அதிகாரம் பகிர்ந்து அளிக்கப் படுவதால் மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கைத் தடுக்கிறது.
(v) மிகப்பெரிய நாடுகளுக்குப் பொருத்தமானது.
(vi) பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களுக்கு நன்மை அளிக்கிறது.

**3. ஒற்றையாட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

விடை:

| ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள் | இரண்டு நிலையில் அரசாங்கம் |
| பெரும்பாலும் ஒரே குடியுரிமை | இரட்டைக் குடியுரிமை |
| துணைக் குழுக்கள் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது | கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை |
| அதிகாரப் பகிர்வு இல்லை | அதிகாரப் பகிர்வு |
| மையப்படுத்தப்பட்ட அதிகாரம் | அதிகாரப் பரவல் |

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


## VI. விரிவான விடையளி :

**1. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.**

**விடை: ஒற்றையாட்சி முறையின் நிறைகள்**

(i) சிறு நாடுகளுக்குப் பொருத்தமானது.
(ii) அதிகாரம் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் மோதல்கள் இருப்பதில்லை.
(iii) ஒற்றை ஆட்சி முறை உடனடியாக முடிவெடுத்துத் துரிதமாகச் செயல்படுகிறது.
(iv) ஒற்றை ஆட்சி குறைந்த செலவுடையது.
(v) அரசியலமைப்பு திருத்தங்களை எளிதில் மேற்கொள்ள இயலும்.
(vi) ஒற்றுமை, சீரான சட்டம், கொள்கை மற்றும் நிர்வாகத்தினை உள்ளடக்கியது.

**2. அதிபர் மக்களாட்சி முறை பற்றிக் குறிப்பு வரைக. மேலும் அதிபர் மக்களாட்சி முறைக்கும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.**

**விடை: அதிபர் மக்களாட்சி முறை :** அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்டமன்றத்திற்கு பொறுப்பு இல்லாததாகவும் நாடாளுமன்றம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும்.

| | அதிபர் மக்களாட்சி முறை | நாடாளுமன்ற ஆட்சி முறை |
|---|---|---|
| 1. | குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் | பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவார். |
| 2. | அதிபரே அதிகாரம் படைத்தவர் | மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது. |
| 3. | சுதந்திரமாகச் செயல்படும் பிரிவுகள் | தனித்தனியான சார்புடைய செயல்பாடுகளைக் கொண்ட பிரிவுகள் |
| 4. | மாகணத்தின் தலைவர் அதிபர் ஆவார். | அரசின் தலைவர் – குடியரசுத் தலைவர் |
| 5. | அரசாங்கத்தின் தலைவரும் அதிபரே. | அரசாங்கத்தின் தலைவர் – பிரதம அமைச்சர் |
| 6. | மகா சபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பை ஏற்க மாட்டார் . | கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள். |

## கூடுதல் வினாக்கள்

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. ................ என்பது அரசின் செயல்பாடுகளைச் செயல்படுத்தும் அமைப்பாகும். **[விடை: அரசாங்கம்]**
2. ...................., ...................., ................. போன்றவை அரசின் உறுப்பு அமைப்பாகும். **[விடை: சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை]**
3. இந்தியாவில் ................... ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. **[விடை: நாடாளுமன்ற]**
4. முடிவெடுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்முறையே ................ எனப்படுகிறது. **[விடை: ஆட்சி]**
5. ................ என்பது எந்த ஒரு நாட்டிலும் வாழ்வதற்கான உரிமை ஆகும். **[விடை: குடியுரிமை]**
6. பிராந்தியம் என்பது ............. எனப்படும். **[விடை: மாகாணம் அல்லது மாநிலம்]**
7. அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுதல் ............... எனப்படும். **[விடை: சர்வாதிகாரம்]**
8. நிர்வாகத்துறை என்பது ................. செயல்படுத்துவதற்கான ஓர் அமைப்பு **[விடை: சட்டங்களை**
9. ................... முடியாட்சி என்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஆகும். **[விடை: ஆங்கில]**
10. ................ ஒரு நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும். **[விடை: பூட்டான்]**




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## II. சுருக்கமாக விடையளி :

**1. நேபாள மக்களாட்சி**

விடை: ஏப்ரல் 2006-ல் நேபாளத்தின் துடிப்பான, ஜனநாயகம் சார்ந்த மக்கள் சமூக இயக்கத்தின் தலைவர்கள் 'ஏழு கட்சிகள் கூட்டமைப்பின்' சார்பில் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். தலைநகர் காத்மாண்டுவின் சுற்றுச்சாலையின் நெடுகிலும் ஏழு இடங்களில் பத்து இலட்சம் மக்கள் பங்கு பெறுமாறு ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இது இமாலய அரசின் ஏதேச்சதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களாட்சிக்கு வழிவகுத்தது.

**2. அரசாங்கத்தின் உறுப்புகள் யாவை?**

விடை: அரசாங்கத்தின் உறுப்புகள்

(i) சட்டமன்றம்
(ii) நிர்வாகத்துறை மற்றும்
(iii) நீதித்துறை ஆகும்.

**3. மிகவும் பழமையான அரசாங்கம் எது?**

விடை: ஐக்கிய பேரரசு காணப்பட்ட முடியாட்சி அமைப்பே மிகவும் பழமையான அரசாங்கம் ஆகும். முடியாட்சியில் அரசரோ அல்லது மகாராணியோ அரசாங்கத்தின் தலைவராவார்.

**4. ஒற்றை ஆட்சி முறையின் குறைகள் இரண்டினைக் கூறுக.**

விடை: குறைகள் :

(i) மிகப்பெரிய நாடுகளுக்கு பொருத்தமற்றது.
(ii) நிர்வாக தாமதங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.

**5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒற்றை ஆட்சிமுறை அம்சங்கள் யாவை?**

அலகு 4

விடை: (i) பலமான மத்திய அரசு
(i) மாநில அரசின் மீது மத்திய அரசின் ஆளுமை
(ii) ஒற்றை அரசமைப்பு
(iii) அரசியலமைப்பின் நெகிழ்வுத்தன்மை
(iv) மாநிலங்களின் சமமற்ற பிரதிநிதித்துவம்
(v) அவசரகால ஏற்பாடுகள்
(vi) ஒற்றைக் குடியுரிமை
(vii) ஒருங்கிணைக்கப்பட்ட ஒற்றை நீதித்துறை
(viii) அகில இந்தியச் சேவைகள்
(ix) ஆளுநர்கள் மத்திய அரசினால் நியமிக்கப்படுதல்.

**6. இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சி முறை அம்சங்கள் பற்றி எழுதுக.**

விடை: (i) இரட்டை அரசாங்கம்
(ii) எழுதப்பட்ட அரசியலமைப்பு
(iii) அதிகாரப் பகிர்வு
(iv) அரசியல் அமைப்பின் உயர் அதிகாரம்
(v) நாட்டின் உச்சபட்சகட்டமாக அரசியலமைப்புச் சட்டம் விளங்குகிறது. மத்திய மாநில அரசுகளால் இயற்றப்படும் சட்டங்கள் அதன் விதிகளுக்கு உட்பட்டு அமைதல் வேண்டும்.

**7. ஏதேனும் 5 நாடுகளில் உள்ள நாடாளுமன்றங்களின் பெயர்களை எழுதுக.**

விடை:

| நாடுகள் | நாடாளுமன்றங்களின் பெயர்கள் |
|---|---|
| இஸ்ரேல் | கெனெஸட் |
| ஜெர்மனி | பந்தெஸ்டாக் |
| டென்மார்க் | போக்டிங் |
| நார்வே | ஸ்டார்டிங் |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | காங்கிரஸ் |

**8. பூடானில் ஏற்பட்ட வரலாற்று மாற்றம் குறித்து எழுதுக.**

விடை: பூடானில் ஏற்பட்ட வரலாற்று மாற்றம்.

மூன்றாம் அரசர் – அடிமைத்தனத்தை ஒழித்தார்

நான்காம் அரசர் – கம்பீரமான வட்டங்களைத் துறந்தார்.

ஐந்தாம் அரசர் – குடியரசு தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள்

இந்த மாற்றமானது பரம்பரை மன்னராட்சி முறையிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு மாறுவதாகும். இவர் தனது 34 ஆண்டுகால அரியணையை துறந்தார். அவரது மகன் பட்டத்து இளவரசர் ஜிக்மே கேசர் நம்கியேல் வாங்சுக் (Jigme Khesar Nangyel Wanchuck) ஐந்தாவது மன்னர் இமயமலைப் பகுதியிலுள்ள இந்த சிறிய முடியரசின் தலைவரானார். இப்போது பூட்டான் ஒரு நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும், அரசர் பூட்டானின் அரசமைப்பின்படி மன்னராக உள்ளார்.

**9. நல் ஆட்சியின் பண்புகள் பற்றி எழுதுக.**

விடை: (i) பங்கேற்பு

(ii) சட்டத்தின் ஆட்சி

(iii) வெளிப்படைத்தன்மை

(iv) விரைவான நேர்மறையான வினையாற்றல்

(v) கருத்தொற்றுமை

(vi) சமத்துவம்

(vii) திறமை மற்றும் செயல்திறன்

(viii) பொறுப்புடைமை

**10. மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் யாவை?**

விடை: (i) சட்டமன்ற உறவுகள், (பிரிவுகள் 245 முதல் 255 வரை)

(ix) நிர்வாக உறவுகள் (பிரிவுகள் 256 முதல் 263 வரை)

(x) நிதி உறவுகள் (பிரிவுகள் 268 முதல் 294 வரை)

**11. மத்தியப் பட்டியலில் உள்ள துறைகள் சிலவற்றை எழுதுக.**

விடை: மத்திய பட்டியலில் 100 துறைகள் உள்ளடங்கியுள்ளது. வெளியுறவுத் துறைகள், பாதுகாப்பு, ஆயுதப்படைகள், தொலைதொடர்பு, தபால் மற்றும் தந்தி, மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் மற்றும் வணிகம்.

**12. மாநிலப் பட்டியலில் எத்தனை துறைகள் உள்ளன? சிலவற்றை எழுதவும்.**

விடை: மாநிலப் பட்டியல் 61 துறைகள் கொண்டுள்ளது. மாநிலத்தின் பொது ஒழுங்கு, காவல்துறை, நீதித் துறை நிர்வாகம், சிறைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், விவசாயம் போன்றவை.

**13. பொதுப்பட்டியலில் எத்தனை துறைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை எழுதுக.**

விடை: பொதுப்பட்டியில் 52 துறைகள் உள்ளன. குற்றவியல் மற்றும் சிவில் நடைமுறைகள், திருமணம் மற்றும் விவாகரத்து, பொருளாதாரம் மற்றும் சிறப்புத் திட்டமிடல், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சகங்கள், மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியன.

**14. மொத்த தேசிய மகிழ்ச்சி என்றால் என்ன?**

விடை: ஒரு குறிப்பிட்ட நாட்டில் உள்ள மொத்த மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒரு குறியீடு ஆகும் பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம் பெற்றுள்ள இக்கருத்து ஜூலை 18, 2008 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## III. விரிவான விடையளி :

**1. கூட்டாட்சி அரசின் நிறைகள் மற்றும் குறைகள் பற்றி எழுதவும்.**

விடை: **கூட்டாட்சி முறையின் நிறைகள் :**

(i) உள்ளூர் சுய ஆட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல்

(ii) மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, நிர்வாகத் திறன்கள் மேம்பட வழிவகுக்கிறது.

(iii) மிகப் பெரிய நாடுகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது.

(iv) அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படுவதால் மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கைத் தடுக்கிறது.

(v) மிகப்பெரிய நாடுகளுக்குப் பொருத்தமானது.

(vi) பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களுக்கு நன்மை அளிக்கிறது.

**கூட்டாட்சியின் குறைகள் :**

(i) ஒற்றையாட்சி முறையோடு ஒப்பிடும்போது கூட்டாட்சி முறை பலவீனமானது.
(ii) கூட்டாட்சி முறை அதிக செலவினம் கொண்டது.
(iii) பிராந்திய போக்குகள்தான் பொதுவாக காணப்படும்.
(iv) நிர்வாகச் சமநிலையில் குறைபாடுகள்.
(v) தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல்
(vi) அதிகாரப் பகிர்வில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே முரண்பாடு உருவாகிறது.
(vii) இரட்டைக் குடியுரிமை
(viii) மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்க இயலாது திடமான அரசியலமைப்பு.
(ix) வெளியுறவுக் கொள்கைகளில் சில நேரங்களில் மாநில அரசுகள் தடைகளை ஏற்படுத்துகின்றன.

**2. அதிபர் மக்களாட்சி ஆட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகள் பற்றி கூறவும்.**

விடை: **நிறைகள் :**

(i) ஜனநாயகமானது
(ii) அதிபரின் முறையான கட்டுப்பாடு
(iii) முடிவெடுத்தலை மேம்படுத்துதல்
(iv) மாகாண அரசாங்கம்.

**குறைகள் :**

(i) சர்வாதிகாரமாகச் சிதையும் வாய்ப்பு
(ii) நிர்வாக மற்றும் சட்டமன்றத்திற்கு இடையிலான இணக்கமற்ற உறவு
(iii) சட்டமன்றம் மற்றும் நிர்வாகக் குழுவுக்கு இடையிலான நல்லுறவின்மை

அலகு 4

# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக. (6 × 1 = 6)**

1. ........................, ........................ ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்
2. பாராளுமன்ற ஆட்சிமுறையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் .................... ஆவர்.
3. ......................, ......................, .................. போன்றவை அரசின் உறுப்பு அமைப்பாகும்.
4. ................ என்பது எந்த ஒரு நாட்டிலும் வாழ்வதற்கான உரிமை ஆகும்.
5. .................... முடியாட்சி என்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஆகும்.
6. ................ ஒரு நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும்

**II. வேறுபடுத்துக. (1 × 2 = 2)**

1. நாடாளுமன்ற ஆட்சிமுறை மற்றும் அதிபர் மக்களாட்சி.

**III. சுருக்கமாக விடையளி. (4 × 3 = 12)**

1. ஒற்றையாட்சி முறை குறிப்பு வரைக.
2. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை?
3. நல் ஆட்சியின் பண்புகள் பற்றி எழுதுக.
4. மொத்த தேசிய மகிழ்ச்சி என்றால் என்ன?

**IV. விரிவான விடையளி (1 × 5 = 5)**

1. அதிபர் மக்களாட்சி ஆட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகள் பற்றி கூறவும்.

## விடைகள்

**I.**
1. இங்கிலாந்து, பிரான்ஸ்
2. பிரதமர்
3. சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை
4. குடியுரிமை
5. ஆங்கில
6. பூட்டான்

**II.** 1. பார்க்க, வினா எண் III - 2

**III.** 1. பார்க்க, வினா எண் IV - 1
2. பார்க்க, வினா எண் V - 2
3. பார்க்க, கூடுதல் வினா எண் II - 9
4. பார்க்க, கூடுதல் வினா எண் II - 14

**IV.** 1. பார்க்க, வினா எண் III - 2

★ ★ ★

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# அலகு 5

# உள்ளாட்சி அமைப்புகள்

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. **1985 ஆம் ஆண்டு திட்டக் குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?**
அ. பல்வந்ராய் மேத்தா குழு
ஆ. அசோக் மேத்தா குழு
இ. GVK ராவ் மேத்தா குழு
ஈ. LM சிங்வி மேத்தா குழு [விடை: இ. GVK ராவ் மேத்தா குழு]

2. **.................... காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.**
அ. சோழர் ஆ. சேரர்
இ. பாண்டியர் ஈ. பல்லவர் [விடை: அ. சோழர்]

3. **73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.**
அ. 1992 ஆ. 1995
இ. 1997 ஈ. 1990 [விடை: அ. 1992]

4. **ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர் ............... ஆவார்.**
அ. ஆணையர்
ஆ. மாவட்ட ஆட்சியர்
இ. பகுதி உறுப்பினர்
ஈ. மாநகரத் தலைவர் [விடை: ஆ. மாவட்ட ஆட்சியர்]

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'உள்ளாட்சி அமைப்புகளின்' தந்தை என அழைக்கப்படுபவர் ......................... [விடை: ரிப்பன் பிரபு]
2. நமது விடுதலைப் போராட்டத்தின் போது மறுசீரமைப்பு என்பது .................... ஆக விளங்கியது. [விடை: சமூக இயக்கமாக]
3. சோழர் காலத்தின் போது கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த இரகசிய தேர்தல் முறை ................. என்றழைக்கப்பட்டது. [விடை: குடவோலை முறை]
4. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு ............... ஆகும். [விடை: கிராம ஊராட்சி]
5. பேரூராட்சிகளின் நிர்வாகத்தினைக் கண்காணிப்பவர் ................. ஆவார். [விடை: செயல் அலுவலர்]

Padasalai
www.surabooks.com



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

## III. பொருத்துக

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சி | - | அ. | கிராமங்கள் |
| 2. | கிராம சபைகள் | - | ஆ. | மாநகரத் தலைவர் |
| 3. | பகுதி குழுக்கள் | - | இ. | பெருந்தலைவர் |
| 4. | ஊராட்சி ஒன்றியம் | - | ஈ. | மாவட்ட ஆட்சியர் |
| 5. | மாநகராட்சி | - | உ. | நகராட்சிகள் |

[விடை: 1 - ஈ, 2 - அ, 3 - உ, 4 - இ, 5 - ஆ]

## IV. தவறுகளைக் கண்டறிந்து பிழை திருத்தி எழுதவும்

1. **ஊராட்சி ஒன்றியம் பல மாவட்டங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.**

விடை: ஊராட்சி ஒன்றியம் பல **ஊராட்சிகள்** ஒன்றிணைவதால் உருவாகின்றது.

2. **ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது.**

விடை: ஒவ்வொரு **மாவட்டத்திலும்** ஒரு மாவட்ட ஊராட்சி அமைந்துள்ளது.

3. **நகராட்சி ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.**

விடை: **மாநகராட்சி** ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.

4. **ஊராட்சிகளில், ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.**

விடை: **கிராம** ஊராட்சிகளில், ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## V. சுருக்கமான விடையளி :



1. **கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?**

விடை: **கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள்**

(i) சொத்து வரி
(ii) தொழில் வரி
(iii) வீட்டு வரி
(iv) குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
(v) நில வரி
(vi) கடைகள் மீது விதிக்கப்படும் வரி

2. **1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?**

விடை: **பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள்**

(i) மூன்று அடுக்கு அமைப்பு
(ii) கிராம சபை
(iii) தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல்
(iv) நிதி ஆணையத்தினை நிறுவுதல்
(v) மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு
(vi) பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு.
(vii) மாவட்ட திட்டக்குழுக்களை அமைத்தல்

**3. கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?**

**விடை:** (i) குடிநீர் வழங்குதல்

(ii) தெருவிளக்கு, சாலைகள், கிராம நூலகங்களைப் பராமரித்தல்

(iii) சிறிய பாலங்கள், வடிகால் அமைப்புகள், இடுகாடுகளைப் பராமரித்தல்.

(iv) வீட்டுமனைகளுக்கு அனுமதி அளித்தல்

(v) தெருக்களைச் சுத்தம் செய்தல்

(vi) பொதுக்கழிப்பிட வசதிகளைப் பராமரித்தல்.

**4. உள்ளாட்சி அமைப்புகளின் விருப்பப்பணிகள் யாவை?**

**விடை: உள்ளாட்சி அமைப்புகளின் விருப்பப் பணிகள்**

(i) கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரித்தல்

(ii) சந்தைகளையும் திருவிழாக்களையும் நடத்துதல்

(iii) மரங்களை நடுதல்

(iv) விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்.

(v) வாகனங்கள் நிறுத்துமிடம், கசாப்புக் கூடங்கள் மற்றும் கால்நடைகளின் கொட்டகை ஆகியவற்றைப் பராமரித்தல்.

(vi) பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களைக் கட்டுப்படுத்துதல்.

**5. மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் யார்?**

**விடை:** (i) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள்தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.

(ii) பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(iii) இவ்வுறுப்பினர்கள் தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவரின் பதவிக்காலாம் ஐந்து ஆண்டுகளாகும்.

**6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை?**

**விடை:** மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகரப் பஞ்சாயத்துகள் ஆகியன நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆகும்.

## VI. ஒரு பத்தியில் விடையளி

**1. 1992 ஆம் ஆண்டு 73 மற்றும் 74வது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?**

**விடை: 73 மற்றும் 74வது அரசமைப்பு திருத்தச் சட்டங்களின் (1992) சிறப்பம்சங்கள்**

(i) ஊராட்சி மற்றும் நகராட்சிகள் உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்களாகச் செயல்படும்.

(ii) குடியரசு அமைப்பின் அடிப்படை அலகுகள் : – கிராம சபைகள் மற்றும் பகுதி குழுக்கள் ஆகியன அமைத்தல்.

(iii) கிராமங்கள் இடையில் காணப்படும் வட்டாரம் / வட்டம் / மண்டலம் மற்றும் மாவட்ட அளவில் ஊராட்சிகள் என மூன்றடுக்கு முறையில் செயல்படுகின்றன.

(iv) 2 மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையை உடைய சிறு மாநிலங்களில் பஞ்சாயத்துக்கள் இரண்டடுக்கு முறையில் இயங்குகின்றன.

(v) நேரடித் தேர்தலின் மூலம் அனைத்து அளவிலும் இடங்கள் நிரப்பப்படுகின்றன.

(vi) பஞ்சாயத்து தலைவர்களுக்கான இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படும்.

(vii) பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


(viii) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டில் பெண்களுக்கும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

(ix) தலைவர்கள் பதவிக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(x) பதவிக்காலம் ஐந்தாண்டுகள் நிறைவடையும் முன்பே தேர்தல்கள் நடத்தப்பெற்று, புதிய அமைப்புகள் உருவாக்க வேண்டும்.

(xi) ஆட்சி கலைக்கப்பட்டால், 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

**2. உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை?**

விடை: நமது மக்களாட்சிக்கு உள்ளாட்சி அமைப்புகளே அடிப்படைகளாகும். உள்ளாட்சி அமைப்புகளின் அரசமைப்பு நிலை, அவற்றின் செயல்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவத்தினை அளிக்கின்றது, இருப்பினும், இந்தியாவில் இவற்றின் செயல்பாடுகளில் ஒருசில நெருக்கடிகள் உள்ளன. அவற்றின் முதன்மையான சிக்கல்களும் சவால்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும்**

(i) உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் மற்றும் அதிகாரங்களைப் பற்றிய தெளிவான வரையறையின்மை

(ii) நிதி ஒதுக்கீடு மற்றும் தேவைகளின் மதிப்பீடு ஒத்துப்போவதில்லை.

(iii) உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முக்கிய முடிவுகளில் சாதி, வகுப்பு மற்றும் சமயம் ஆகிய மூன்றும் முக்கியப் பங்காற்றுகின்றன.

(iv) மக்களாட்சியின் அடிப்படை நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பொறுப்பற்ற நிலை.

அலகு 5

## VII. செயல்பாடு :

**1. உன் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதியைச் சந்தித்து உள்ளாட்சி அமைப்புகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்ற விவரங்களை சேகரி.**

விடை: மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களே செய்து பார்க்கவும்.

## கூடுதல் வினாக்கள்

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக:

**1. ................ ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்பு நடைமுறையில் உள்ளது.**

அ) 1994 ஆ) 1894 இ) 2004 ஈ) 1999

[விடை: அ) 1994]

**2. கிராம சபை கூட்டங்கள் ஆண்டுக்கு .................. முறை நடைபெறுகின்றன.**

அ) 8 ஆ) 4 இ) 2 ஈ) 5 [விடை: ஆ) 4]

**3. .................. அமைப்புகளுக்கான தேர்தலை மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்துகிறது.**

அ) நாடாளுமன்ற ஆ) சட்டமன்ற

இ) உள்ளாட்சி ஈ) இவற்றில் எதுவுமில்லை

[விடை: இ) உள்ளாட்சி]

**4. 1882 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்தவர் ................ ஆவார்.**

அ) ரிப்பன் பிரபு ஆ) லிட்டன் பிரபு இ) கர்சன் பிரபு ஈ) லின்லித்தோ

[விடை: அ) ரிப்பன் பிரபு]


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

5. **கிராம சபை கூட்டம் நடைபெறும் நாள் .......................**
அ) மே 1 ஆ) செப்டம்பர் 5 இ) சனவரி 15 ஈ) நவம்பர் 14
[விடை: மே 1]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ...................... பேரரசு காலத்திலும் உள்ளாட்சி அமைப்புகள், பற்றிய ஆவணக் குறிப்புகள் உள்ளன. [விடை: மௌரியப்]
2. ................... ஆண்டு இந்திய அரசு சட்டம் மாகாணங்களில் தன்னாட்சியை அறிமுகப்படுத்தியது. [விடை: 1935]
3. 1919 இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை ................. செயல்படுத்தினார். [விடை: பெரியார்]
4. அரசுக்கும் மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக ............. செயல்படுகிறார். [விடை: மேயர்]
5. தமிழ்நாட்டில் ...................... மாநகராட்சிகள் உள்ளன. [விடை: 12]

## III. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | திருப்பூர் | - அ) | 1950 |
| 2. | காந்தியடிகள் | - ஆ) | 5 ஆண்டுகள் |
| 3. | மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் | - இ) | கிராம சுயராஜ்ஜியம் |
| 4. | சனவரி 26 | - ஈ) | மாநகராட்சி |
| 5. | உள்ளாட்சி அமைப்புகள் பதவிக்காலம் | - உ) | கிராமசபை கூடும் நாள் |

[விடை: 1 - ஈ, 2 - இ, 3 - அ, 4 - உ, 5 - ஆ]

## IV. சுருக்கமான விடையளி.

1. **உள்ளாட்சி அமைப்புகள் என்றால் என்ன?**

விடை: ஒரு பகுதி அல்லது ஒரு கிராமம், சிறிய நகரம் அல்லது மாநகரம் போன்ற சிறிய சமூகத்தினை நிர்வாகம் செய்யும் அமைப்புகளே உள்ளாட்சி அமைப்புகள் எனப்படுகின்றன.

2. **கிராம சபை கூட்டங்கள் ஒரு வருடத்தில் எத்தனை முறை கூட்டப்படுகின்றன? அவை யாவை?**

விடை: கிராம சபை கூட்டங்கள் ஒரு வருடத்தில் நான்கு முறை கூட்டப்படும்.

(i) சனவரி 26 - குடியரசு தினம்
(ii) மே 1 - உழைப்பாளர் தினம்
(iii) ஆகஸ்ட் 15 - சுதந்திர தினம்
(iv) அக்டோபர் 2 - காந்தி பிறந்த தினம்.

3. **ஊராட்சி ஒன்றியம் - குறிப்புத் தருக.**

விடை: பல ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்படுகின்றது. மக்கள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை (கவுன்சிலர்) நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் (Chair man) தேர்ந்தெடுக்கின்றனர்.

4. **தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை மாநகராட்சிகள் உள்ளன? அவை யாவை?**

விடை: தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் உள்ளன. அவை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்.

**5. மாநகராட்சித் தலைவரின் (மேயரின்) முக்கிய பணிகள் யாவை?**

விடை: (i) அரசுக்கும் மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக மேயர் செயல்படுகிறார்.

(ii) மாநகராட்சி குழு கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார்.

(iii) வெளிநாட்டு பிரமுகர்களை வரவேற்று உபசரிப்பார்.

**6. பேரூராட்சி என்றால் என்ன?**

விடை: பத்தாயிரத்துக்கும் அதிகமாக மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி எனப்படும். பேரூராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

**7. பிற நகர்ப்புற பஞ்சாயத்துக்கள் யாவை?**

விடை: (i) அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள்

(ii) நகர் பகுதி குழுக்கள்

(iii) இராணுவக் குடியிருப்பு வாரியம்

(iv) குடியிருப்புகள்

(v) துறைமுகப் பொறுப்பு கழகம்

(vi) சிறப்பு நோக்க நிறுவனம்

## V. விரிவான விடையளி



**1. காந்தியின் கிராமசுயராஜ்யம் பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

விடை: **காந்தியின் கிராமசுயராஜ்யம்**

(i) காந்தியடிகள் கிராமப்புறங்களின் பிரதிநிதிகளை மக்களாகக் கொண்ட கிராம சுயராஜ்ஜியத்தை விரும்பினார்.

(ii) இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்பதை உணர்ந்தார் காந்தியடிகள்.

(iii) சுதந்திர இந்தியாவில், கிராம குடியரசு எனும் பஞ்சாயத்துக்களை கனவு கண்டார்.

(iv) காந்தியடிகள் பஞ்சாயத்து ராஜ் ஒரு அதிகார பகிர்வு கொண்ட அரசாக இருக்க அறிவுறுத்தினார்.

(v) இந்திய அரசியலமைப்பின் அடிப்படையாக திகழும் கிராமங்கள் தங்களின் தேவைகளுக்கு தாங்களே பொறுப்பாவர்.

(vi) எளிமையான சொற்களில் சொல்வதென்றால் காந்தியின் சுயராஜ்ய கிராமம், அடிப்படையில் சுயசார்புடையதாக இருக்க வேண்டும்.

(vii) வாழ்க்கைக்குத் தேவையான உணவு, தூய்மையான நீர், சுகாதாரம், வீட்டு வசதி, கல்வி மற்றும் பிற தேவைகளுக்கு என அனைத்து தேவைகளையும் ஏற்கும் அரசாங்கம் மற்றும் சுய பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் வழங்க வேண்டும்.

**2. உள்ளாட்சி அமைப்பின் வரலாற்று பின்னணி குறித்து எழுதுக.**

விடை: **வரலாற்றுப் பின்னணி**

(i) உள்ளாட்சி அமைப்பு இந்தியாவில் தொன்றுதொட்டு காணப்படும் கருத்துரு ஆகும்.

(ii) இது பிற்காலச் சோழர்கள் அல்லது தஞ்சை சோழப்பேரரசு காலத்தில் உச்சநிலையை அடைந்தது. மௌரியப் பேரரசு காலத்திலும் உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய ஆவணக் குறிப்புகள் உள்ளன.

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


(iii) பண்டைய இந்தியா முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறுபட்ட அம்சங்களுடன் காணப்பட்டன.

(iv) இடைக்காலத்தில் நிலபிரபுவத்துவத்தின் முறையின் தாக்கத்தால், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம் குறைந்தது.

(v) ரிப்பன் பிரபுவின் 1882ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி, மேற்கத்திய நாடுகளின் மக்களாட்சி முறையின் அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டின் கால் இறுதியில் இவ்வமைப்புகள் இந்தியாவில் புத்துயிர் பெற்றன.

(vi) நவீன உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளமிட்டதால் ரிப்பன் பிரபு, 'உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

**3. ரிப்பன் பிரபு உள்ளாட்சியின் தந்தை என்று அழைக்கப்படுவதற்கான காரணத்தை விரிவாக கூறவும்.**

விடை: (i) 1882ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்ததன் மூலம் இந்தியர்களுக்கு சுதந்திரத்தின் சுவையை அறிமுகப்படுத்தியவர் ரிப்பன் பிரபு ஆவார்.

(ii) இந்தியாவில் நிர்வாகத்தை தாராளமயம் ஆக்கும் சில நடவடிக்கைகளை ரிப்பன் மேற்கொண்டார்.

(iii) நிர்வாகத்தை பரவலாக்க வேண்டும் என்பதற்காகவே உள்ளாட்சி அமைப்புகளை அவர் முறைப்படுத்தினார்.

(iv) உள்ளாட்சி அமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் இருந்த சில தடைகளை 1882ஆம் ஆண்டு அவர் இயற்றிய தீர்மானத்தின் மூலம் அகற்ற முயன்றார்.

(v) கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் அதிக அதிகாரங்களையுடைய உள்ளாட்சி நிர்வாக உரிமைகளை வழங்கும் விதமாக ரிப்பன் தொடர்ச்சியான பல சட்டங்களை ஏற்படுத்தினார்.

**4. நகராட்சி தலைவராக பெரியார் எவ்வாறு செயல்பட்டார் என்பதை கூறுக.**

விடை: பெரியார் ஈ.வே. இராமசாமி அவர்கள் 1917 ஆம் ஆண்டில் இருந்து பல ஆண்டுகள் ஈரோடு நகராட்சியின் பெருந்தலைவராக பதவி வகித்தார். அவரது பதவிக் காலத்தில் ஈரோடு நகராட்சி மக்களுக்கான முறையான குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி தருவதில் முனைப்பு காட்டினார். 1919இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் செயல்படுத்தினார். இந்திய நகராட்சி நிர்வாகங்களின் வரலாற்றில் இத்திட்டத்தினை முதன்முதலில் செயல்படுத்தியவர் பெரியார் என அறியப்படுகிறது.

✶ ✶ ✶




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

# அலகுத் தேர்வு

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. (3 × 1 = 3)**

1. 1985 ஆம் ஆண்டு திட்டக் குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?
அ. பல்வந்ராய் மேத்தா குழு
ஆ. அசோக் மேத்தா குழு
இ. GVK ராவ் மேத்தா குழு
ஈ. LM சிங்வி மேத்தா குழு

2. 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.
அ. 1992 ஆ. 1995
இ. 1997 ஈ. 1990

3. கிராம சபை கூட்டம் நடைபெறும் நாள் ......................
அ) மே 1 ஆ) செப்டம்பர் 5
இ) சனவரி 15 ஈ) நவம்பர் 14

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. (3 × 1 = 3)**

1. 'உள்ளாட்சி அமைப்புகளின்' தந்தை என அழைக்கப்படுபவர் ..........................
2. நமது விடுதலைப் போராட்டத்தின் போது மறுசீரமைப்பு என்பது ...................... ஆக விளங்கியது.
3. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு ................ ஆகும்.

**III. பொருத்துக. (4 × 1 = 4)**

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராம சபைகள் | - (அ) | மாநகராட்சி |
| 2. | ஊராட்சி ஒன்றியம் | - (ஆ) | கிராமசபை கூடும் நாள் |
| 3. | திருப்பூர் | - (இ) | பெருந்தலைவர் |
| 4. | சனவரி 26 | - (ஈ) | கிராமங்கள் |

**IV. தவறுகளைக் கண்டறிந்து பிழை திருத்தி எழுதவும் (2 × 1 = 2)**

1. ஊராட்சி ஒன்றியம் பல மாவட்டங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.
2. ஊராட்சிகளில், ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**V. சுருக்கமாக விடையளி. (4 × 2 = 8)**

1. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?
2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
3. உள்ளாட்சி அமைப்புகள் என்றால் என்ன?
4. பேரூராட்சி என்றால் என்ன?

**VI. விரிவான விடையளி (1 × 5 = 5)**

1. 1992 ஆம் ஆண்டு 73 மற்றும் 74வது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?

## விடைகள்

**I.** 1. இ. GVK ராவ் மேத்தா குழு
2. அ. 1992
3. அ) மே 1

**II.** 1. ரிப்பன் பிரபு
2. சமூக இயக்கமாக
3. கிராம ஊராட்சி

**III.** 1. - (ஈ), 2. - (இ), 3.- (அ), 4. - (ஆ)

**IV.** 1. பார்க்க, வினா எண் IV - 1
2. பார்க்க, வினா எண் IV - 4

**V.** 1. பார்க்க, வினா எண் V - 1
2. பார்க்க, வினா எண் V - 2
3. பார்க்க, கூடுதல் வினா எண் V - 1
4. பார்க்க, கூடுதல் வினா எண் V - 6

**VI.** 1. பார்க்க, வினா எண் VI - 1

அலகு 5

★★★

www.Padasalai.Net This is Only for Sample www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





**39. உயர் சிந்தனை வினா :**

(i) செய்திகள், அறிவியல் தொடர்பான நுட்பங்கள், புவியைக் குறித்த ஆய்வுகள், கடற்பயணம், ராணுவம் போன்ற பல வித விஷயங்களுக்கு செயற்கைக்கோள்களின் பயன்பாடுகள் தற்போது மிகவும் அவசியமானவை என்றாகிவிட்டது.

(ii) செயற்கைக்கோள் இல்லாவிட்டால் நமது ஸ்மார்ட்-போன்கள் வேலை செய்யாது. வானிலை அறிவிப்புகளை துல்லியமாக, தெளிவாக அறிய முடியாது.

(iii) இந்த நவீன உலகத்தில் GPS என்பது பல மாயாஜாலங்களை நிகழ்த்திவருகிறது. விமான நிலையங்கள், தொலைபேசி இணைப்புகள், ATM, பங்கு மார்க்கெட் வர்த்தகம் என்று பலவும் தற்போது செயற்கைக் கோள்களை சார்ந்தே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே செயற்கைக்கோள்கள் இல்லாத உலகை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது.

✶✶✶




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Our other Guides for 9th Std.





































**For Orders Contact: 9600175757 / 81242 01000 / 81243 01000**

**Order through WhatsApp 81242 01000 / 98409 26027**

**Sura Publications**
1620, 'J' Block,
16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040. INDIA
Phones: 044-26162173, 26161099
Mobile: 81242 01000 / 81243 01000
e-mail: enquiry@surabooks.com
website: www.surabooks.com

Category:
School Guides

FY-9-SS-TM

ISBN 978-81-8449-919-3

9 788184 499193

Price: ₹199.00